

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2049*

*மலர் - 11 இதழ் - 2 - மே - 2019*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

## பொருளடக்கம்

காலனி ஆட்சியில்
சென்னையில் முதல் பொது மருத்துவமனை
டாக்டர் சு.நரேந்திரன் – 4

இன்றைய இந்தியாவின் அன்றைய வேர்கள்
சி.ஆர்.ரவீந்திரன் – 11

உலகம் எங்கும் கருத்துச் சுதந்திரம்
உதயை மு.வீரையன் – 16

லெமூரியா (குமரிக் கண்டம்) என்பது ஒரு கற்பனை!
நக்கீரன் – 19

தொல்காப்பியரின் சொல்லுருவாக்கக் கொள்கைகளும்...
ஆ.கார்த்திகேயன் – 22

காந்திஜிக்கு டால்ஸ்டாய் எழுதிய கடிதங்கள்
தமிழில்: வெ.ஜீவானந்தம் – 26

அக்கினிக் கவிதைத் தொகுப்பு
பொன்னீலன் – 29

சுப்ரபாரதிமணியனின் படைப்புக்கலை
ராம பாண்டி – 31

திருக்குறளின் கருத்தியல் தாக்கம்...
ந.முருகேசபாண்டியன் – 39

குழந்தை இலக்கியத்தின் மொழி
சுகுமாரன் – 45

தமிழ் 'வேர்ச் சொல்' அறிஞர் சுவாமி ஞானப்பிரகாசர்
பி.தயாளன் – 49

சங்கப் பனுவல்களில்
அகமரபு குறித்த நுண்ணிய ஆவண ஆய்வு
மயிலம் இளமுருகு – 55

எல்லாவற்றையும் கலைத்துப் போடுகிறார்கள்
எஸ்.விக்னேஷ் சரோ – 61

உ.வே.சாமிநாதையர் நினைவுகள் - 3
முனைவர் இரா.வெங்கடேசன் – 63

- கட்டுரை -




# காலனி ஆட்சியில் சென்னையில் முதல் பொது மருத்துவமனை

டாக்டர் சு.நரேந்திரன்

கிழக்கிந்தியக் கம்பெனியால் செயின்ட் ஜார்ஜ் கோட்டை *1640*இல் நிறுவப்பட்டிருந்தாலும், *33* ஆண்டுகள் கழித்தே மருத்துவமனையைத் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இக்காலத்தில் மருத்துவ வசதியோ அல்லது மருத்துவரோ இல்லை என்று பொருள் இல்லை. *1640*இல் ஃபிரான்சிகு டே தலைமையில் ஆர்மிகானி லிருந்து மதராசிற்கு வணிகம் செய்யும் பொருட்டு வந்த குழுவில் ஒரு மருத்துவரும் உடன் வந்தார். அதே ஆண்டின் கடைசியில் *(1640)* ஹோப்வெல் என்ற கப்பல் லண்டனிலிருந்து இங்கு வந்து சேர்ந்த பொழுது, அதில் ஒரு மருந்துப் பெட்டியும், அறுவை சிகிச்சைக்கான பொருளும் வந்திறங்கின. *1650*இல் டாக்டர் எட்வர்ட் ஒயிட்டிங் (Edward Whiting) செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு மருத்துவராக நியமிக்கப்பட்டு வந்து சேர்ந்தார். இதன் காரணமாக அங்கிருந்த தொழிலாளர்கள் மருத்துவத்திற்கும், அறுவை சிகிச்சைக்குமான மருந்துகளையும் பொருள்களையும் கருவிகளையும் அனுப்பியதற்கு லண்டனில் உள்ள கிழக்கிந்தியக் கம்பெனிக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதினர். இருப்பினும் *(1654)* அங்கு மருத்துவருக்கு மருந்து பற்றாக்குறையாகவே இருந்தது. (Dawn of Modern Medicine in Madras, p. 15)

ஏனெனில் கிறிஸ்துமஸ் காலங்களில் குளிரினால் சிப்பாய்கள், கம்பெனியாட்கள் மூன்று, நான்கு முறை நோய்களால் மிகுதியாக அவதியுற்றார்கள். ஆகவே மற்றொரு மருத்துவரை அனுப்பக் கோரினர். கோட்டையில் ஆரம்ப காலத்தில் வேலை பார்த்த மருத்துவர் (1656) டாக்டர் எட்வர்ட் ஒயிட்டிங் விடுமுறையில் தாய்நாடு திரும்பிய நிலையில், கம்பெனி மூலம் சர்ஜன் ஜெனரல் உட் ஆல் மருத்துவர்களையும், மருந்துகளையும் அளித்த நிலையில் இந்த மருத்துவ உதவி போதாக்குறை யாகவே இருந்தது என்பதை அவர்கள் கம்பெனி நிலை கொண்டிருந்த சூரத், மசூலிப் பட்டினத்தி லிருந்து வந்த கடிதங்கள் மூலம் அறிய முடிகின்றது. ஏனெனில் சாதாரண நோய்களைத் தாண்டி கொள்ளை நோய்களால் குறிப்பாகப் பிளேக், சீதபேதி, மஞ்சள் காமாலை, ஸ்கர்வி மற்றும் மதுவினால் வரும் கேடுகளும் பிரச்சனைகளும் சற்றுக் கூடுதலாகவே இருந்தன. இதற்கான தேவையும் அதிகமாகவே இருந்தது.

இதன்பிறகு, மருத்துவப் பிரச்சனைகளைத் தீர்க்க டாக்டர் உட்-ஆல் மூன்று வகையாகச் செயல்பட்டார்.

(1) முதலாவதாகக் கம்பெனியுடன் நட்புறவு கொண்ட இந்திய அரசர்களுக்கும் சில முக்கியமான இடங்களுக்கும், படித்த பட்டம் பெற்ற தகுதி படைத்த மருத்துவர் களை நியமித்தார்.

(2) இரண்டாவதாகக் கிளைத் தொழிற்சாலை களுக்கு அபோத்தகிரி என்ற மருத்துவர் களிடம் உதவியாளர்களாக இருந்து மருந்து தயாரித்து நோயை அறியக் கற்றவர்களை நியமித்தார்.

(3) மூன்றாவதாகச் சர்ஜன்மேட் (Surgeon's mate) என்ற மருத்துவப் பணித் துணைவர்கள் கம்பெனி சிப்பாய்களுக்கும், சிறிய தொழிற் சாலைகளுக்கும் ஏற்படும் மருத்துவப் பிரச்சனைகளைத் தீர்க்கவும் நியமித்தல் என்று மூன்று வகையாகச் செயல்பட்டார்.

ஆனாலும் மருத்துவ சேவைக்கான தேவை அதிகரித்ததால் உள்நாட்டு நபர்களுக்கும், மருத்துவம் கற்பிக்கப்பட்டது.

கம்பெனியின் அரசியல் ஈடுபாடு அதிகரித்த தாலும், பல சண்டைகள் மற்ற நாட்டுக் கம்பெனி களுடன் ஏற்பட்டதாலும், மருத்துவச் சேவை பற்றாக் குறையாகவே இருந்தது. இதனைச் சரிசெய்ய லண்டனில் உள்ள கம்பெனியின் தலைமைக் கழகம் இந்தியாவில் வணிகம் செய்யும் ஒவ்வொரு இடத் திற்கும் மருந்துகளையும், அறுவை சிகிச்சைக்கான பொருள்களையும் அனுப்பி வைத்தது. இது 'Chest of Drugs' என அழைக்கப்பட்டது. இது பெரும்பாலும் போதுமானதாக இல்லை. மேலும் இம்மருந்துகள் லண்டனிலிருந்து இந்தியாவிற்குக் கப்பலில் வந்து, அதன் பிறகு அதிகநாட்கள் சேமித்து வைத்திருப் பதாலும், இம்மருந்துகள் வீரியமற்று செயல் இழந்து போயின.

1619இல் ரிச்சர்டு சாண்டர்ஸ் (Richard Saunders) சூரத் தொழிற்சாலைக்கு மருத்துவராக இருந்தவர். இவர் இன்னொருவரை அனுப்பி வைக்கக் கம்பெனியைக் கேட்டுக்கொண்டார். இதுபோன்ற தேவை களைப் பூர்த்தி செய்ய அல்லது இங்குள்ள தொழிற்சாலையில் பணி புரியும் மருத்துவர் இறந்தால், அதற்குப் பிறகு அந்த இடத்தை நிரப்ப நீண்ட காலம் பிடித்தது. ஏனெனில் இதற்கான மாற்று மருத்துவர் இங்கிலாந்தி லிருந்தே வரவேண்டியதாக இருந்தது.

பொதுவாகக் கடற்பயணத்தின்பொழுது மாலுமிகள் அல்லது வணிகர்கள் நோயுற்ற நிலையில் தகுந்த மருந்து அல்லது காயம் அடைந்த பொழுது சரியான அறுவை சிகிச்சை பெறவில்லை. ஏனெனில் 15ஆம் நூற்றாண்டில் மருத்துவ அறிவியல் குழந்தைப் பருவத்திலேயே இருந்தது. ஆகவே, கப்பலில் மருத்துவம் அளிப்பது என்பது மருத்துவர்களுக்கு ஒரு பயிற்சியாகவே இருந்தது. பல சமயங்களில் என்ன நோய் என்றே புரியாமல் தவித்தனர். நீண்ட பயணத்தின்போது குகர்வி (ஈறுகளில் இரத்த ஒழுக்குடன் கூடிய உடல் நலிவு) அல்லது வயிற்றுப் போக்கினால் கப்பலில் இருந்த அந்நோயாளிகள் ஈக்களைப் போல் இறந்தனர். இதைவிடக் கொடுமை உள்நாட்டில் போர்க்காயங்களுக்கு அல்லது விபத்து களுக்கு இதைவிட மிக மோசமான மருத்துவமே கிடைத்தன. கடற்கரை நகரங்களில் வசித்தவர் களுக்குக் கூட அங்கு மருத்துவம் பார்த்த மருத்துவர் களின் அறுவை சிகிச்சை கிட்டத்தட்ட சோதனை செய்து பார்ப்பதை ஒத்ததாகவே இருந்தது.

பெரும்பாலான சமயங்களில் கடற் பயணத்தில் வரும் மருத்துவர் அனுபவமின்றி இருந்ததால், மருத்துவம் என்பது பெறுபவருக்கு சித்திரவதை யாகவே இருந்தது. ஆகவே, காயமுற்றவர்கள் தனக்குத்தானே நொந்து கொண்டு மருத்துவம் பார்க்க முயற்சி எடுப்பது கூடக் கிடையாது.

1640இல் செயின்ட் ஜார்ஜ் கோட்டை கட்டப் பட்டது. 1657இல் மருத்துவர் ராபர்ட் கூப்பர் மதராஸ் வந்து 1663வரை பணியில் இருந்தார். 1677இல் இம்மருத்துவர்களுக்கான சம்பளம் ஆண்டுக்கு 34 பவுண்ட். அலவன்சாக 4 பகோடா, உணவிற்கும் தங்குமிடத்திற்குமான வாடகை 2 பகோடாவைக்

கம்பெனி கொடுத்தது. இதுவே மதராஸ் மருத்துவ மனை ஆரம்பமாவதற்கான முதற்படியாகும்.

பல மருத்துவர்கள் இங்கிலாந்திலிருந்து மருத்துவப் பணிபுரிய வந்த நிலையில் கொள்ளை நோய்களும், பஞ்சமும் தலைவிரித்தாடிய போது, தங்கள் கம்பெனி ஐரோப்பிய வேலையாட்கள் இராணுவ வீரர்கள் உடல்நலத்தையும் உயிரையும் காப்பாற்றும் விதமாகத் தர்க்க ரீதியாக மருத்துவ மனையை அடித்தளமிட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாயினர்.

மேலும், உள்நாட்டுப் பருவநிலையும், இடஞ் சார்ந்த பிரச்சனைகளும் இச்செயலை விரைவுபடுத்தின.

### மருத்துவமனை தொடங்க முதல் முயற்சி

1664ஆம் ஆண்டு கடைசியில் (10-11-1664) கம்பெனி முகவர் சர் எட்வர்ட் வின்டர் மசூலிப் பட்டினத்திற்கு வருகை தந்தபோது, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து அந்த முகவருக்குக் கில்போர்ட், சாம்பு ரூக் ஆகியோர் மதராசில் ஒரு மருத்துவ மனை தொடங்க கடிதம் எழுதினார்கள். இதற்கான காரணத்தை அவர்கள் குறிப்பிடும்போது, "காவற் காக்கும் கூடத்தில் அடிக்கும் உறைபனிக்காற்றில் பலருக்கு உடல்நலமின்றிப் போனதில் 4 பேர் மரணமடைந்தனர். மேலும் இதன் காரணமாக 10 நபர்கள் சராசரியாக இங்கு நோயாளியாக உள்ளனர். இவர்களுக்குத் தேவையான மருத்துவம் புரிய அவர்களின் ஊதியம் போதுமானதாக இல்லை. இக்காலகட்டத்தில் இவர்களுக்கு மருத்துவம் அளிக்க வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்தால் அவர்களை மாமிசம், மது அண்டாது பார்த்துக்கொள்ள வசதியாக இருக்கும் எனத் தோன்றிய எண்ணமே, மருத்துவ மனை மதராசில் தோன்ற அடித்தளமிட்டது. மேலும் சர் எட்வர்ட் வின்டர் (Sir Edward Winter) இக்கால கட்டத்தில் ஒரு கிறித்தவ தேவாலயம், மருத்துவ மனை, நூலகம் ஆகியவைகளை ஏற்படுத்த எடுத்த முயற்சிக்கு முன்னோடியாக, மருத்துவத்திற்கு வீடு வாடகைக்கு அமர்த்தியதும் ஒரு காரணமாகும். (op. jaggi, p.77)

### வாடகை வீட்டில் மருத்துவமனை

இதனடிப்படையில் கோட்டை கட்ட காரண மானவர்களில் ஒருவரான ஆன்ட்ருகோகனுக்கு வீடு வாடகை மாதம் 2 பகோடாவிற்குக் கிடைத்தது. இவ்வீட்டில் சராசரியாக 8லிருந்து 10 வரை உள் நோயாளிகளாகக் கோட்டைக் காவலர்கள் தங்க முடியும். இதுவே மேலை மருத்துவத்திற்கான மருத்துவமனையாக 16-11-1664 இல் தொடங்கப் பட்டது. (Madras Government General Hospital & Medical College,p.1)

வாடகை வீட்டில் ஆரம்பித்த மருத்துவமனை 5 ஆண்டுகள் கழித்து (1679-1680) நோயாளிகள் தங்க போதுமானதாக இல்லை என்பதால் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு மருத்துவமனையை விரிவுபடுத்த ஆலோசனை வழங்கப்பட்டது. இதன்படி இரண்டு மாடிக் கட்டடம் செயின்ட் மேரி தேவாலயம் அருகில் கட்ட தீர்மானிக்கப்பட்டு, தேவாலயத்திற்கும், வெகுடிரி என்பவருக்கும் சொந்தமாகியது. இதற்கான செலவுகள் மக்களிடமிருந்து 838 பகோடாக்கள் (ரூ. 3000) நன்கொடையாகப் பெறப்பட்டு, 1680இல் கட்டி முடிக்கப்பட்டது.

இக்கட்டடம் பண்டகசாலையுடன் இணைந்து இருந்ததால் உடமைகள் அடிக்கடி திருட்டுப் போயின. ஆகவே ஆற்றங்கரை ஓரமாக மருத்துவ மனை கட்ட முடிவெடுக்கப்பட்டது. இது போர் வீரர்கள் குடியிருப்புக்கு வடக்குப்புறமாக இருந்தது. நோயாளிகள் அதிகரித்ததால் 1675 சர்ஜன்மேட் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. 1676இல் இவருக்குப் பெயர் இரண்டாம் சர்ஜன் எனப் பெயர் மாற்றமடைந்தது. 1690இல் சர்ஜன் வேண்டுகோளுக் கிணங்க மற்றொரு இரண்டாம் சர்ஜனும் பணியில் அமர்த்தப்பட்டார்.

இந்த இரண்டாவது மருத்துவமனையை யேல் பணிபுரிந்த சமயம் மதராஸ் கவுன்சில் முழு பணத்தையும் அதன் சொந்தக்காரர் வெஸ்ட்ரி (vestry)க்கு கொடுத்தபின், ஆற்றங்கரையோரமாகப் புது மருத்துவ மனை கட்டப் பணிக்கப்பட்டது. இரண்டாவது மருத்துவமனையைக் காலி செய் வதற்கு முன்னரே யேல் பதவி வகித்தபோது, மருத்துவமனை 1690 கட்டப்பட்டது. இச்சமயம் கோட்டைக்கு அருகில் உள்ள ஜேம்ஸ் வீதியில் தற்காலிகமாக மருத்துவமனை அமைந்தது.

1690இல் புதிய இடத்தைக் கோட்டையில் கட்டிக்கொள்ள அனுமதி கொடுத்தவர் அன்றைய கவர்னர் சர் கிளக் யேல். இவர் மதராசின் இரண்டாவது கவர்னராக (1687-1692) உழைப்பால் உயர்ந்தவர். இங்கே 2500 பகோடாவிற்கு இத்தாலிய கட்டடக் கலையுடன் ஒரு புதிய கட்டடம் கட்டப் பட்டு 1692இல் திறக்கப்பட்டது. இக்கட்டடத்தைக் கட்ட யேல் 1700 பகோடா அளித்தார். இவர் அளித்த 562 டாலர் பணத்தைக் கொண்டு அமெரிக்காவில் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டு யேல் பல்கலைக் கழகம் எனப் பெயரிடப்பட்டது. இங்குதான் அறிஞர் அண்ணா அமெரிக்கா சென்றபோது புகழ்பெற்ற உரையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மற்றொரு மருத்துவமனை கிரீன் ஹில் மைதானத்தையும் சேர்த்து 150 நோயாளிகள் தங்கும்

அளவு 7000 பகோடாக்களுக்குக் கட்டப் பட்டது. இதற்கு அரசு 1500 பகோடாக்களை வழங்கியது. மீதி பொது மக்களிடமிருந்து பெறப்பட்டது. இம் மருத்துவமனை கவர்னர், அமைச்சர் மற்றும் சர்ச் வார்டன் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டது. 1752 அக்டோபர் 31ஆம் தேதி புயலால் இம்மருத்துவ மனை சேதமுற்றது.

கோட்டை காவற்படை எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, இம்மருத்துவமனையில் இடம் போத வில்லை. ஆகவே 1753இல் இக்கட்டடங்களைப் போர் வீரர்களுக்கான குடியிருப்பாக மாற்றி மருத்துவமனை பெத்தநாயக்கன் பேட்டையில் போர்த்துக்கீசியர்களின் 12 வீடுகளில் மாற்றப்பட்டது. இது மதராஸ் யுனைடெட் கிளப் அருகில் 100 கஜ நீளத்தில், தற்போதுள்ள மருத்துவமனை இடத்திற்கு அருகில் அமைந்திருந்தது. (Madras discovered, p. 337)

பிரிட்டிஷ்-பிரெஞ்சு அரசிற்கும் இடையே 1746-1759 வரை போர் நீடித்தபோது, மருத்துவமனை கோட்டைக்கு உள்ளேயும் வெளியேயும் வாடகைக் கட்டடங்களில் நடைபெற்றது. கோட்டைக்கு வெளியே சென்ற மருத்துவமனை 20 ஆண்டுகள் கழித்தே இப்பொழுது உள்ள இடத்தில் கட்டப்பட்டது.

1759இல் 9ஆவது முறையாக ஆர்மீனியன் சாலையில் உள்ள ஆர்மீனியன் தேவாலயத்திற்கு அருகில் உள்ள கல்லறைக்குச் சமீபமாக மாற்றப் பட்டு, 13 ஆண்டுகள் ஆலயம் கட்டும் வரையில் நடைபெற்றது. ஏனெனில் இங்கு மழை காலத்தில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன. 1768இல் இம் மருத்துவமனை புயலால் தாக்கப்பட்டது. மேலும் இவ்விடத்தில் கல்லறை இருந்ததால் சுகாதாரக் கேடும் காணப்பட்டது. இதனைக் கண்ணுற்ற அரசு மருத்துவமனை கட்ட, தலைமை மருத்துவரையும் அரசுப் பொறியாளரையும் புதிய இடத்தைத் தேர்ந் தெடுக்கப் பணித்தபோது, பழைய கம்பெனியில் தோட்டமாக இருந்த ஹாக் ஹில் நகருக்கு அருகிலும், மதிற்சுவருக்குள்ளும் இருந்த பகுதி மருத்துவமனைக்கு ஏற்ற காற்றோட்டமான இடம் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. (Government General Hospital & Medical College,p.4)

தலைமைப்பொறியாளர் காலினால் 600 நோயாளிகளுக்கும், 20 அலுவலர்களுக்குமான மருத்துவமனை வரைபடம் தீட்டப்பட்டது. பால்பென்பீல்ட்ரோஸ் மற்றும் ஜான் சில்வியனும் கட்டடம் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அளித்ததில் ஜான் சில்வியனுக்கு 42,000 பகோடாவுக்கான அனுமதி வழங்கப்பட்டது. சில்வியன் இந்தியாவிற்கு வந்தபோது, வயது 17. இவர் ஓர் எழுத்தாளர். கட்டடம் கட்ட அனுமதி பெற்ற சமயம் வயது 23. கர்னல் கால் பொறியாளருக்குப் பிறகு, கர்னல் பட்ரிக் தாஸ் நவீன வரைபடம் தீட்டித்தந்த பிறகு, 1772இல் 300 பேருக்கான மருத்துவமனைக்கு இரண்டு கட்டட வளாகங்கள் (blocks) கட்டி முடிக்கப்பட்டுப் பயன்பாட்டிற்கு வந்தது. (The Beginning of Modern Medicine in Madras, p. 193).

இந்த மருத்துவமனை 1772இல் பயன்பாட்டிற்காக முதன் முறையாகத் திறக்கப்பட்டிருந்தும், தற்பொழுது மருத்துவமனை அலுவலகத்தில் உள்ள அடிக்கல்லில் 1692 என்று தவறுதலாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு கவர்னர் யேலினால் கட்டப்பட்ட மருத்துவமனையைக் குறிப்பதாகும். 1772க்கு இந்த இடத்திற்கு வருமுன் 20 ஆண்டுகள் கோட்டைக்கும் வெளியிலும் மாறி மாறி மருத்துவம் நடைபெற்றது.

### அக்கால மருத்துவருக்கான ஊதியமாக பல்லக்கு அலவன்ஸ்

18ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் மருத்து வர்கள் கம்பெனியின் துணைக் கம்பெனிகளுக்கு மருத்துவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்று மருத்துவருக்குச் சோதனை வைத்து தேர்ந்தெடுத்து அனுப்பினர். மருத்துவர்கள் அரசு மருத்துவ மனை தவிர தனிப்பட்ட முறையிலும் கம்பெனி தொழிலாளர்களுக்கும் மற்றும் குடியிருப்போருக்கும் மருத்துவம் புரிந்தனர். இத்துடன் கம்பெனியுடன் நட்புடன் இருந்த நவாப் அரசர்களுக்கும் மற்றும் இராணுவத் தளபதிகளுக்கும் மருத்துவம் அளித்தனர். மக்களிடம் பணமும் அரசரிடம் அன்பளிப்பைப் பெற அனுமதிக்கப்பட்டனர். 1704இல் டாக்டர் பல்கிக்கு ஊதியமாக 36 பவுண்ட் அளிக்கப்பட்டது. இத்துடன் உணவுக்கு 5 பகோடா, குதிரைக்கு 50 பணம், ஒரு துபாசிக்கு 1 பகோடா, ஆயில் 11 Measure, மெழுகு 5 பவுண்ட், வேலையாட்கள் 0.12 பணம், தண்ணீர் கொண்டு வருபவர், நாவிதர் 0.10 பணம் (Duty fellow), ஒரு உதவியாளர் (one mate) 0.5, ஒரு உதவியாளர் (one assistant) 3 பணம் கொடுக்கப் பட்டது. மேலும் இவருக்குப் பல்லக்கு அலவன்சாக 4 பகோடாக்களும், இதுபோல சர்ஜன் மேட்களுக்கு 120 பணமும்/ஆண்டுக்குக் கொடுக்கப்பட்டது.

இதேபோல் 1749இல் ஆன்ரூ முன்றோ (Andru Munro) மருத்துவருக்குக் கொடுக்கப்பட்ட ஊதியம் 36 பகோடா, உணவு 8 பகோடா, பல்லக்கு 4 பகோடா, வேலை ஆட்கள் 1 - 20 மெழுகுவர்த்தி, எண்ணெய் 1-20 (மின்சாரம், மோட்டார் வாகன வசதிகள் இல்லாத காலம்).

### பதவி உயர்வு – கம்பெனி விருப்பமே!

1740இல் கம்பெனியில் மருத்துவத்துறை ஆரம்பிக்கப்பட்டு அதில் பிரிட்டிஷ் சர்ஜன் அவர்களின் உதவியாளர்களும் மற்றும் சுதேசி

மருத்துவர்களும் இடம் பெற்றனர். இந்த சுதேசி மருத்துவர்களுக்கு எவ்விதப் பட்டமும் இன்றி இராணுவ மருத்துவமனையில் பணியாற்றிய நடைமுறை பயிற்சி மட்டுமே இருந்தது. இவர் களுடைய ஊதியம், பதவி உயர்வு, ஓய்வு கால ஊதியம் ஆகியவை உறுதி நிலையற்றவை. ஏனெனில் அவைகள் அனைத்தும் கம்பெனி அலுவலர்களின் விருப்பத்தைப் பொருத்தே இருந்தது. 1787இல் தான் கம்பெனி சுதேசி மருத்துவர்களுக்குப் பதவி கொடுத்து காலாட்படைச் சிப்பாய்களின் வகுப்பான ஹவில்தார்களுக்கான ஊதியம் கொடுக்கப்பட்டது.

1772இல் மருத்துவமனையில் ஐரோப்பியர், பரங்கியர், சுதேசிகளுக்கு, நவீன மருத்துவத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்கள் பல மருத்துவ ஆலோசனைக் கூடங்களிலும், மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் அங்குப் பணிபுரியும் தகுதி படைத்த மருத்துவர்களுக்கு உதவியாளராக இருந்தனர். பிறகு, இம்மருத்துவமனை 1814இல் கோட்டை காக்கும் வீரர்களுக்கானது, 1820இல் மாதிரி மருத்துவமனை என இம்மருத்துவமனை கிழக்கிந்தியக் கம்பெனியினரால் அழைக்கப்பட்டது. இதன்பிறகு 1827இல் டி. மார்டிமர் இப்பள்ளிக்குச் சூப்பிரண்டெண்டென்டாகப் பதவி பெற்றார். 1842இல் இப்பள்ளி H வடிவத்தில் கட்டி முடிக்கப் பட்டு, சுதேசிகளுக்கும் மருத்துவம் பார்க்க அனுமதிக்கப்பட்டது. பிறகு இப்பள்ளி 1850இல் கல்லூரியாக உயர்த்தப்பட்டு நடைபெற்றது.

**ஸ்டேஷன் ஹாஸ்பிடல்**

1859இல் மாடியும், கட்டடத்தை ஒட்டிய பக்க அறைகளும் கட்டப்பட்டு, கிழக்குப் பகுதி கோட்டை வீரர்களுக்காக ஒதுக்கப்பட்டது. இது "ஸ்டேஷன் ஹாஸ்பிடல்" என்று அழைக்கப்பட்டது. 1874இல் சிறப்பு நோயாளிகளை அதாவது பணம் கொடுத்து மருத்துவம் பெறுபவர்களுக்குத் தங்குமிடமும், செவிலியர்களுக்குக் கட்டடங்களும் கட்டப்பட்டன. 1884இல் மருந்தகம் தொடங்கப்பட்டது, 1897இல் குடியிருப்புகள் மேலும் கட்டப்பட்டன. 1903இல் மின்சார வசதியை மருத்துவமனை பெற்றது. இதற்கு அடுத்த ஆண்டு மின்சார வசதியால் நீராவி உதவியால் இயக்கப்பட்ட "பங்கா" நிறுத்தப்பட்டது. தண்ணீர் இறைக்க மனிதர்கள் பயன்பட்ட நிலையில் மின்சாரம் பயன்பட்டது. மின்சார விசிறிகள் 1927இல் பங்காக்களுக்குப் பதிலாக மாற்றியமைக்கப்பட்டன. நோயாளிகள் மருத்துவமனையில் குளிக்கக் குழாய் மூலமும் அறுவை அரங்கு மற்றும் குடிநீருக்கு வார்டுகளிலும் சுடுநீர் வழங்கப்பட்டன. 1913 சலவைக்கான வசதி வந்தது. (Madras Government General Hospital & Medical College, p.4-5)

**மருத்துவமனை எப்படி இருக்க வேண்டும்? விதிமுறைகள் என்ன?**

1786 நிர்வாக அமைப்புக்குப் பிறகு, வெளிப் படையான நிர்வாக முறையொன்று உருவான பின்னர், மருத்துவ வசதிகள் அனைவருமே பெறத் தக்க வகையில், நாட்பட மாற்றமடைந்திருக்கிறது. இவைகளின்றி, மருத்துவமனை நிர்வாகம், சிகிச்சை ஆகியவை வரையறை செய்யப்பட்டுள்ளன. தொடக்கக் கட்டத்தில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இதுபற்றி வேறுபல நோக்கங்கள் இருந்தபோதிலும், பின்னர் வந்த கவர்னர்கள் அவற்றிலிருந்து மாறுபட்டவர் களாகவே தங்களை வெளிப்படுத்திக் கொண்டனர். மருத்துவ அமைப்புகள் விரிவடைந்த காலத்தில் அவைகள் முறைப்படுத்தப்பட அவசியம் ஏற்பட்டது. ஆகவே, விதிமுறைகளை கம்பெனி நிர்வாகம் வெளியிட்டது. இது குறித்து, 1833இல் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மாகாண மருத்துவத் துறை உருவாக்கிய விதிமுறைகளையும், நெறிமுறை களையும் அறிவது சரியாக இருக்கும்.

மருத்துவமனைகள் உள்ளே சுத்தமாக இருப்பதைப் போன்று வெளிப்பகுதி குண்டும் குழியுமாக இல்லாத தோடு, புல் பூண்டுகள் மண்டிக் கிடக்காதபடியும், நீர் தேங்காத அளவிலும் இருக்க வேண்டும் என்றும், காலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மருத்துவ மனையின் வாயிற்கதவுகளும், ஜன்னல் கதவுகளும் திறந்து வைக்க வேண்டும் என்றும், நோயாளிகள் தங்குமிடத்தைப் பெருக்கி, தண்ணீர் தெளித்துத் துடைப்பதோடு, சுவற்றையும் கறைகளின்றித் துடைக்க வேண்டும் என்றும் மருத்துவர்கள் மார்ச் முதல் செப்டம்பர் வரை காலை ஆறரை மணிக்கும் அக்டோபர் முதல் மார்ச் வரை ஏழரை மணிக்கும் உள் நோயாளிகளைப் பார்வையிட வேண்டும் என்றும் வரையறை செய்யப்பட்டது.

ராணுவத்தினருக்கு மட்டுமின்றி உள்ளூர் நோயாளி களுக்கும் எவ்வகையில் உணவு வழங்கப்பட வேண்டும் என்பதும் நிர்ணயம் செய்யப்பட்டது. வகுப்புகளுக்கும் உள்ளூர் உள்நோயாளி களுக்கும் காலை ஒரு பிண்ட் டீயும், 12 அவுன்ஸ் ரொட்டியும், மதியம் ஒரு பிண்ட் சூப் 12 அவுன்ஸ் மாட்டிறைச்சி அல்லது ஆட்டிறைச்சி தவிர 4 அவுன்ஸ் சாதமும், இரவு ஒரு பிண்ட் டீ அல்லது கெட்டியான கஞ்சியும் நோயாளிக்குத் தகுந்தபடி வழங்க, நிர்ணயம் செய்யப் பட்டது. நோயாளி பயன்படுத்தும் வகையில் சூப்புக்கான பாத்திரமொன்றும், பேசினும், குவளையும், கரண்டியும் வழங்குவதோடு, இவற்றை வைத்துக் கொள்ளும் விதத்தில் கூடையொன்றும், எச்சில் துப்புவதற்கேற்ற பானையொன்றும் தரப்பட வேண்டும் என்றும் விதிமுறைகள் கூறுகின்றன.

**மருத்துவமனையில் மது வழங்கப்பட்டது**

*மருத்துவமனைகளில் மரிப்போர் யாராக இருப்பினும், உற்றார் உறவினர் அருகில் இல்லாத பட்சத்தில், ஈமச்சடங்குகளை அவர் சார்ந்திருக்கும் மதத்திற்கேற்ப அரசே மேற்கொள்ள வேண்டும் என்றும் நிர்ணயம் செய்திருப்பது ஆச்சரியமளிப்பதாகவே உள்ளது. மருத்துவமனைகளில் நோயாளிகள் எந்த வித சூதாட்டங்களிலும் ஈடுபடலாகாது என்றும் இடத்துக்குத் தக்க ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும் இன்றைக்கும் ஏற்ற வழியாகவே இருக்கிறது. மருத்துவமனையின் வராந்தாக்களில் மட்டுமே புகைப்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருப்பதும், நோயாளிகளுக்கு ஏற்றபடி மதுபானங்கள் வழங்கப் பட்டிருப்பதும் வித்தியாசமானதாகவே உள்ளது. இவையின்றி மருத்துவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளும் சம்பள நிர்ணயமும் இதில் அடங்கி யுள்ளன. (சென்னைப்பட்டினம், பக்,484) 1841 - 1865 வரை மருத்துவமனைக்கே இரண்டு மருத்துவர்கள் தான் பணிபுரிந்தனர். பிறகு 1899இல் நான்கு பேர்களும் 1901இல் 9 பேர்களும் பணிபுரிந்தனர்.*


**உள்நோயாளிப் பிரிவுகள் எல்லாரும் ஒன்று என்று இல்லை**

*1842இல் ஐரோப்பியர்கள், இந்தியர்கள், ராணுவத்தினர் மற்ற குடிமக்கள் ஆகியோருக்குச் சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவமனை 185 கெஜம் நீளமும், 145 கெஜம் அகலமும் அமைந்திருந்தது என்று மெடிக்கல் போர்டின் அறிக்கை தெரிவிக்கிறது. சிப்பாய்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் தனித்தனிப் பகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. மற்றொரு பகுதியில் ஐரோப்பிய பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஒரு பிரிவும், மற்றொரு பகுதி இந்தியர்களுக்குப் பொது வாகவும் இருந்தது. படிப்படியாக விரிவுபடுத்தப் பட்டு வந்த மருத்துவமனை 1899இல் ராணுவத்தினர் அல்லாத குடிமக்களுக்கான முழுமையான மருத்துவ மனையாகியது.*

*1935இல் மருத்துவமனை புதுப்பிக்கப்பட்டு 678 படுக்கைகளுடன் இருந்தன. (1859-93) சில்வியன் கட்டிய இரண்டு வளாகங்களோடு 1928-1938இல் மருத்துவமனையில் மேலும் இரண்டு வளாகங்கள் கட்டப்பட்டு மருத்துவமனை விரிவாக்கப்பட்டது. இதுவே 2002 வரை நீடித்து பிறகு மீண்டும் இரண்டு பெரிய வளாகங்கள் உருவாயின.*

*இம்மருத்துவமனைக் கட்டடங்கள் 20ஆம் நூற்றாண்டு இறுதியில் இடிக்கப்பட்டு இரண்டு டவருடன் 1050 மில்லியன் செலவில் கட்டப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. புதிய கட்டடம் முதல்வர் ஜெயலலிதா காலத்தில் திறக்கப் பட்டது.* ●


## நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்




**குழந்தைகளுக்கான ஆப்பிரிக்கக் கதைகள்**

**தமிழில் : எம். பாண்டியராஜன்**

விலை : ₹ 99/-

ஆப்பிரிக்க நாட்டில் புழங்கி வரும் செவிவழிக் கதைகள் சிறார்கள் விரும்பிப் படிக்கும்வண்ணம் எளிமையாகவும் சிறப்பாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலில் இடம்பெற்றுள்ள கதைகளுக்கேற்ப தீட்டப்பட்டுள்ள சித்திரங்களும் சிறப்புற அமைந்துள்ளன.




**பெண்ணியம் வரலாறும் கோட்பாடும்**

**சாரா காம்பிள் – டோரில் மோய்**

**தமிழில் : ராஜ் கௌதமன்**

விலை : ₹ 90/-

கருத்துக்களை எளிதாய்ப் புரியவைக்கும் வகையிலான தமிழாக்கமாக அமைந்துள்ள இந்நூல் பெண்ணியம் என்பது பெண்களுக்கான அறிவாக மட்டுமில்லை, அது ஆண், பெண்... முதலான அனைத்து மனிதப் பிறவிகளுக்கும் உரியதாக இருக்கின்றது என்ற கருத்தை உரத்துச் சொல்கிறது.

## தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்
## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

இணைந்து நடத்தும்

# இலக்கியப் போட்டி 2019

## அறிவிப்பு

*31-வது ஆண்டாக, படைப்பாளிகளுக்குக் கீழ்க்கண்ட வகைகளுக்குப் போட்டி அறிவிக்கப்படுகிறது:*

1. சிறந்த ஆய்வு நூல்கள்

பேராசிரியர் நா. வானமாமலை நினைவு விருது ● முதுமுனைவர் வ.ஐ. சுப்பிரமணியன் நினைவு விருது

2. சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள்

தொ.மு.சி. ரகுநாதன் நினைவு விருது ● அறந்தை நாராயணன் நினைவு விருது

3. சிறந்த நாவல்கள்

அழகியநாயகி அம்மாள் நினைவு விருது ● தென்னமநாடு இராமசாமி–மாரியம்மாள் நினைவு விருது

4. சிறந்த சிறுகதை நூல்கள்

எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு விருது ● திருமதி சுந்தரி சாந்திலால் நினைவு விருது

5. சிறந்த சிறுவர் நூல்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு விருது ● எம். கௌதம் நினைவு விருது

6. சிறந்த கவிதை நூல்கள்

கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் நினைவு விருது ● பின்னையூர் மா. சண்முகம் நினைவு விருது

7. சிறந்த கட்டுரை நூல்கள்

என்.சி.பி.எச். இராதாகிருஷ்ணமூர்த்தி நினைவு விருது ● மேலவாசல் கோ. இராமசாமி நினைவு விருது

8. சிறந்த குறும்படம்

தோழர் பா. முத்துசாமி நினைவு விருது

9. சிறந்த ஆவணப்படம்

பி.என்.பாலு–பாக்கியலட்சுமி நினைவு விருது

- ♦ *பரிசுக்கான (1 - 5) நூல்கள் 2015-க்கு முன் வெளிவந்தவையாக இருக்கலாகாது.*
- ♦ *பிற பரிசுகளுக்கான (6 - 7) நூல்கள் 2018, 2019-களில் வெளிவந்தவையாக இருக்க வேண்டும்.*
- ♦ *பரிசுக்கான 8, 9-வது பிரிவுக்கு 2018, 2019-களில் தயாரிக்கப்பட்ட படங்கள் அனுப்பப்பட வேண்டும்.*
- ♦ *நூல்கள் அச்சுப் படிகளாகவோ கையெழுத்துப் படிகளாகவோ இருக்கலாம். கையெழுத்துப் படிகள் அச்சில் 90 பக்கங்கள் வருமாறு இருக்க வேண்டும்.*
- ♦ *படைப்பாளிகள் இப்போட்டிகளில் 2014-க்குப் பிறகு பரிசு பெற்றவர்களாக இருக்கலாகாது.*
- ♦ *போட்டிக்கென தனி நுழைவுப் படிவம் இல்லை. படைப்பாளிகளின் முகவரி, தன்குறிப்பு, நூல் / குறுந்தகடு பற்றிய சிறுகுறிப்பு ஆகியவற்றுடன் நூலின் / குறுந்தகட்டின்* **இரண்டு படிகள்** *அனுப்புக. தொலைத் தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி தெரிவிக்க.*
- ♦ *படைப்புகளை* ***31-07-2019-க்கு முன்*** *கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புக:*

**முனைவர் நா. இராமச்சந்திரன்,**
**55/3, பீட்டர் தெரு, எஸ்.டி.சி. சாலை,**
**பெருமாள்புரம்,**
**திருநெல்வேலி – 627007**
*பேச: 9443554805 மின்னஞ்சல்:* nrfolk@gmail.com


**இரா. காமராசு** — மாநிலப் பொதுச் செயலாளர்

**சி. சொக்கலிங்கம்** — மாநிலத் தலைவர்

**நா. இராமச்சந்திரன்** — செயலாளர் – இலக்கியக் குழு

# இன்றைய இந்தியாவின் அன்றைய வேர்கள்

சி.ஆர். ரவீந்திரன்




**பண்டைக்கால இந்தியா**

ஆர்.எஸ்.சர்மா

தமிழில்: ரா.ரங்கசாமி (மாஜினி)

*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்., அம்பத்தூர், சென்னை - 600 098*

*தொலைபேசி எண் : 044-26359906*

₹ 320/-

மனித வளமும், நில வளமும், நீர் வளமும் நிறைந்த இந்தியா மிக நீண்ட ஒரு வரலாற்றுப் பெருமையுடையது. இந்திய வரலாற்றைப் பொது வாகத் தகவல்களின் அடிப்படையில் ஒருங்கிணைத்து ஒரு வகையான ஊக வடிவத்தைக் கொடுப்பதே கல்வியாளர்களின் நடைமுறைச் செயலாக இருந்து வருகிறது. இதனால், நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணி கொண்ட இந்திய வரலாறு குறித்த தெளிவான ஒரு கண்ணோட்டம் அமையவில்லை. இதுவே, உலகின் பொதுவான மரபாக இருப்பதை அறிஞர்கள் அங்கங்கே, அவ்வப்போது இனம் கண்டு அடையாளப்படுத்துகிறார்கள். ஆகவே இந்த வகையில் அறிஞர் ஹெகல் வரலாறு குறித்து வெளிப்படுத்தும் கருத்து ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டக்கூடியதாக உள்ளது. "வரலாற்றிலிருந்து நாம் எந்த ஒன்றையும், எந்தக் காலத்திலும் கற்றுக் கொள்வதே இல்லை" என்கிறார் அவர்.

ஆழ்ந்து, கூர்மையான ஈடுபாட்டுடன் கவனத்திற்கு உள்ளாக்கப்படக்கூடிய ஒன்றாக வரலாறு உள்ளது. காரணம், வரலாற்றினூடாக மனிதன் தான் வாழும் உலகத்தைத் தொடர்ந்து புதுப்பித்து மாற்றங்களை நிகழ்த்தி வருகிறான். வியக்கத் தகுந்த மனித ஆற்றல்களை வரலாற்றின் வழியாக மட்டுமே நாம் உணர முடிகிறது. மனித இன வரலாற்றின் வளர்ச்சியில் இந்தியாவின் பங்களிப்பு மிக மிக உன்னதமானது. தனித்தன்மை வாய்ந்தது. இதை சமூக அறிவியல் கண்ணோட்டத்தில் தகுந்த அடிப்படைகளிலிருந்தும் ஆவணங்களிலிருந்தும் சேகரித்து ஆர்.எஸ். சர்மா 'பண்டைய இந்தியா' என்ற வரலாற்று ஆய்வை வடிவமைத்திருக்கிறார். இது இந்தியாவின் தனித்தன்மையை ஆழமாகவும், விரிவாகவும் புரிந்துகொள்ள வழி வகுக்கிறது. இனம், மொழி, நிறம், கலை, கலாச்சாரம், பண்பாடு, வாழ்க்கை முறை போன்றவற்றில் பன்முகத்தன்மை கொண்டது இந்திய மக்களின் வாழ்க்கை. அனைத்துத் தனித்தன்மைகளும் தாராளமான முறையில் ஒருங் கிணைக்கப்பட்டு இந்திய வரலாறு வளர்ந்து கொண்டே இருக்கிறது.

அதைப்பற்றி ஆர்.எஸ். சர்மா தெளிவாகவே இந்த வரலாற்று நூலில் குறிப்பிடுகிறார்: "பண்டைய இந்திய வரலாறு சுவைமிக்கது. மிகுந்த ஆர்வத்தைக் கிளர்த்திவிடக் கூடியது. பலதரப்பட்ட இனமரபுக் குழுக்களின் ஒரு அடக்குகையாக இந்தியா திகழ்ந்து வந்திருப்பதே இதற்குக் காரணம். ஆரியர்களுக்கும் முற்பட்ட இனத்தவர்கள், இந்தோ - ஆரியர்கள். கிரேக்கர்கள், சிந்தியர்கள், ஹீணர்கள் முதலான பலரும் இந்தியாவைத் தாயகமாக வரித்துக் கொண்டனர். இந்தியாவின் சமூக அமைப்பும், கலையும், இலக்கியமும், கட்டிடக் கலையும் பரிணாம வளர்ச்சியுறுவதற்கு ஒவ்வோர் இனமரபுக் குழுவும் துனக்குரிய பங்கை ஆற்றியிருக்கிறது. இந்த மக்களும், அவர்களுடைய கலாச்சாரத் தனித்தன்மை களும் பிரிக்க முடியாதபடி பரஸ்பரம் பின்னிப் பிணைந்துள்ளன. ஒன்றுடன் ஒன்று கலந்து போய் உள்ளன. இதனால், தற்போது இவற்றில் எதையும் தங்களது ஆதிவடிவம் என எவரும் பிரித்து இனம் காண முடியாது". ஆகவே இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை காணும் இயல்புடைய ஒரு நாடாக வரலாற்றில் தொடர்ந்து வாழ்ந்து வருகிறது. இந்தக் கண்ணோட்டத்தையும், மதிப்பீடுகளையும் நிறுவி ஒரு சமூக வரலாற்றை அறிவியல் வடிவில் வழங்கி யுள்ளார் ஆர்.எஸ். சர்மா.

இந்த அடிப்படைகளில் பண்டைய இந்திய வாழ்க்கையைக் குறித்துத் தனது மதிப்பீடுகளைத் தகுந்த ஆதாரங்களோடு இவர் நிறுவுகிறார்: பண்டைய இந்தியக் கலாச்சாரத்தின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் அல்லது கூறு, வடக்கையும், தெற்கையும், கிழக்கையும், மேற்கையும் சேர்ந்த கலாச்சாரங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து, பிணைந்து கலந்திருப்பதாகும். ஆரிய அம்சங்கள் வடபுலத்தின் வேதகால மற்றும் சமஸ்கிருதக் கலாச்சாரத்தையும் ஆரியரல்லாத அம்சங்கள் தென்புலத்தில் திராவிட மற்றும் தமிழ்க் கலாச்சாரத்தையும் குறிக்கின்றன. ஆனால், கி.மு. 1500- 500 காலப் பகுதியைச் சேர்ந்தவை எனக் கருதப் படும் வேத நூல்களில் ஆங்காங்கு பல திராவிடச் சொற்களும், சமஸ்கிருதமல்லாத சொற்களும் இடம் பெற்றிருக்கின்றன. அவை வேத காலத்தைச் சாராது இந்திய தீபகற்பத்துடன் சம்பந்தப்பட்ட பல்வேறு கருத்துக்களையும், அமைப்புக்களையும், விளை பொருள்களையும், குடியேற்றங்களையும் குறிப்பவை. இவ்வாறே கங்கைச் சமவெளியில் உருவான அநேக கருத்துக்களையும் அமைப்புக்களையும் குறிக்கும் பல பாலி மொழிச் சொற்களும், சமஸ்கிருதச் சொற் களும் ஏறத்தாழ கி.மு. 300- கி.பி. 600 காலப் பகுதியைச் சேர்ந்த சங்க கால இலக்கியம் எனப்படும் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. ஆரியர்கள் அல்லாத பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்த கிழக்குப் பிராந்தியமும் இதில் தனது பங்கை ஆற்றியுள்ளது. இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் முண்டா அல்லது கோலர் மொழிகளைப் பேசி வந்தனர். பருத்தி, நீர் வழிப் போக்குவரத்து, தோண்டு கருவி போன்றவை சம்பந்தப்பட்ட பல சொற்கள் முண்டா மொழியி லிருந்தே இந்தோ - ஆரிய மொழிகளில் எடுத்தாளப் பட்டிருக்கின்றன என்று மொழியியல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்."

தொடர்ந்து, இந்தியாவில் தோன்றி வளர்ந்து, நிலைபெற்ற சமயங்களைப் பற்றிய கருத்துக் களையும் ஆர்.எஸ்.சர்மா தெளிவுபடுத்துகிறார்: "தொன்னெடுங்காலமாகவே இந்தியா பற்பல சமயங்களைத் தன்னகத்தே கொண்ட நாடாக இருந்து வந்திருக்கிறது. பண்டைக் கால இந்தியாவில் இந்து சமயம், ஜைனம், பௌத்தம் ஆகிய சமயங்கள் பிறந்தன. எனினும் இந்தக் கலாச்சாரங்கள், சமயங்கள் யாவும் ஒன்றுடன் ஒன்று கலந்தன. ஒன்றன்மீது ஒன்று தாக்கத்தை ஏற்படுத்தின. இதனால், மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசிய போதிலும், வெவ்வேறு சமயங்களை ஆதரித்த போதிலும், பல தரப்பட்ட சமூகப் பழக்க வழக்கங் களைக் கடைப்பிடித்த போதிலும் அவர்கள் நாடெங்கிலும் ஒரு குறிப்பிட்ட பொது வாழ்க்கைப் பாணியைப் பின்பற்றி வருவதைக் காண்கிறோம். மிகுந்த வேறுற்றுமைக்கு இடையேயும் ஆழமான ஒற்றுமை நிலவுவதை நமது நாடு காட்டுகிறது."

மேலும், அவர் இந்தியாவின் கீழ்நிலைமையைப் பற்றியும் தொடர்ந்து குறிப்பிடுகிறார்: "பண்டைய இந்தியர்கள் வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், இத்தகைய முன்னேற்றங்கள் இன்றைய விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகளோடு நாம் போட்டியிடுவதற்கு நமக்குத் துணை புரிய முடியாது. பண்டைய இந்திய சமுதாயம் சமூக அநீதி என்னும் மிகக் கொடிய, படு மோசமான நோயால் பீடிக்கப்பட்டிருந்தது என்பதை நாம் உதாசீனம் செய்துவிட முடியாது. கீழ்த்தட்டு வர்க்கத்தினர், அதிலும் குறிப்பாக, சூத்திரர்களும், தீண்டப்படாதவர்களும் எண்ணற்ற கோரக் கொடுமை களுக்கு, அக்கிரமங்களுக்கு ஆளாகியிருந்தனர். அவற்றை நினைத்தால் இன்றைய உள்ளம் மிகுந்த அதிர்ச்சியுறும். பழைய வாழ்க்கை முறையை மீண்டும் கொண்டு வருவது அநீதிகளுக்கும் அட்டூழியங்களுக்கும் புத்துயிரூட்டி அவற்றை மேலும் வலுவடையவே செய்யும் நாகரிகத்தை நோக்கி பண்டைய இந்தியாவின் முன்னேற்றத்துடன் கூடவே சமூக ஏற்றத் தாழ்வு களும் வளர்ந்து வந்தன."

"கடந்த காலத்தின் இத்தகைய எச்சங்கள் சமுதாயத்திலிருந்து அகற்றப்பட்டாலொழிய இந்தியா துரித கதியில் முன்னேற முடியாது. சாதி அமைப்பு முறையும், குறுகிய மனோபாவமும், ஜனநாயக ரீதியில் நாடு முன்னேறுவதற்கும், தேச ஒருமைப்பாட்டுக்கும் முட்டுக்கட்டையாக உள்ளன. சாதியத் தடையங்களும், தப்பெண்ணங்களும் படித்த வர்க்கத்தினர்கூட உடல் உழைப்பின் உண்மையான மதிப்பைப் பாராட்டாதபடி தடுக்கின்றன. பொது இலட்சியத்துக்காக நம்மிடையே ஒற்றுமை ஏற்படு வதற்குக் குறுக்கே நிற்கின்றன. பெண்களுக்கு, வாக்குரிமையும் தன்னுரிமையும் அளிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களது பன்னெடுங்காலக் கீழ்ப்பட்ட நிலைமை சமூக முன்னேற்றத்தில் தமக்குரிய பங்கை ஆற்ற முடியாதபடி அவர்களைத் தடுக்கிறது. பண்டைய இந்தியா பற்றிய ஆய்வு இந்தச் சீர்கேடுகளின் மூல காரணங்களை, ஆணிவேர்களைக் கண்டறிவதற்கு உதவுகிறது.

பண்டைக்கால வரலாறு பதிவு செய்யப்பட்ட முறைகளை ஆர்.எஸ். சர்மா விவரிக்கிறார்: கல்வி கற்ற இந்தியர்கள் தங்கள் நாட்டின் மரபுவழி வரலாற்றைக் கையால் எழுதப்பட்ட இதிகாசங்கள், புராணங்கள், வாழ்க்கை வரலாறுகள் என்னும் வடிவத்தில் பாதுகாத்து வந்தனர். இந்நிலையில், பண்டைக்கால இந்திய வரலாறு குறித்த தற்கால ஆராய்ச்சி பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பமாயிற்று. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அமைத்த காலணியாதிக்க நிர்வாகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டே இந்த ஆய்வு தொடங்கியது. 1765-இல் வங்காளமும், பீகாரும் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுமையின்கீழ் வந்தபோது, இந்து வாரிசு உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது கடினமாக இருப்பதைக் கண்டனர். எனவே, அந் நாட்களில் மிகவும் அதிகார உரிமை படைத்ததாகக் கருதப்பட்ட மனுதர்ம நூல் 1976-இல் இந்தச் சட்டத் தொகுப்பாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர், இந்துக்களின் சிவில் சட்டங்களைச் செயல்படுத்து வதில் இந்து சமய சாத்திர வல்லுநர்களான பண்டிதர் களும் முஸ்லீம் சட்டங்களை நடைமுறைப்படுத்து வதில் மௌல்விகளும் பிரிட்டிஷ் நீதிபதிகளுக்கு துணையாக இருந்தனர். பண்டைய சட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் புரிந்து கொள்ளும் ஆரம்ப கால முயற்சிகள் அநேகமாக பதினெட்டாம் நூற்றாண்டு வரை நீடித்தன. இதன் விளைவாக 1784-இல் கல்கத்தாவில் வங்காள ஆசியக் கழகம் நிறுவப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த சர். வில்லியம் ஜோன்ஸ் என்ற அதிகாரிதான் இந்தக் கழகத்தை நிறுவினார்." காலனிய ஆதிக்கத்தின் விளைவாக பழமை வாய்ந்த இந்திய வாழ்க்கையும், வரலாறும் புதிய வடிவங்களைப் பெறத் தொடங்கின.

தொடர்ந்து "இந்தியவியல் ஆராய்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் ஜெர்மன் அறிஞரான எப். மாக்ஸ் முல்லரே. அவர் தமது வாழ்நாளில் பெரும்பகுதியை இங்கிலாந்தில் கழித்தார். 1857-ஆம் வருட எழுச்சி பிரிட்டிஷாருக்குப் பல உண்மைகளை உணர்த்துவதாக இருந்தது. தாங்கள் ஆளவேண்டி யுள்ள அன்னிய மக்களின் பழக்க வழக்கங்களையும், சமூக அமைப்புக்களையும் பற்றி ஆழமாகத் தெரிந்து கொள்வது மிகமிக அவசியம் என்பது பிரிட்டனில் பெரிதும் உணரப்பட்டது. இதே போன்று, கிறித்துவ மயத்திற்கு பல இந்துக்களை ஈர்க்கும் பொருட்டும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை வலுப்படுத்தும் பொருட்டும் இந்து சமயத்திலுள்ள பலவீனமான அம்சங்களைக் கண்டறிய கிறித்துவ சமயப் பரப்பாளர்கள் விரும்பினர். இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, மாக்ஸ் முல்லரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பண்டைய இந்து சமய நூல்கள் பிரம்மாண்ட அளவில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன. கீழை நாட்டுப் புனித நூல்கள் வரிசையில் மொத்தம் ஐம்பது தொகுதிகள் பிரசுரிக்கப்பட்டன. இவற்றில் சில தொகுதிகள் அநேக பாகங்களைக் கொண்டவை. இவற்றில் சில சீன, ஈரானிய நூல்கள் அடங்கியிருந் தாலும் உண்மையில் பண்டைய இந்திய நூல்கள்தான் இந்த வரிசையில் பிரதான இடத்தை வகித்தன. இத்தகைய பொதுவான கருத்துக்களில் பல



வின்சென்ட் ஆர்தர் மித் எழுதிய 'இந்தியாவின் ஆரம்பகால வரலாறு' என்ற நூலில் இடம்பெற்றன.

இரத்தினச் சுருக்கமாகக் கூறினால், இந்திய வரலாறு குறித்த பிரிட்டிஷ் கண்ணோட்டங்கள், இந்தியாவின் குணநலன்களை இழிவுபடுத்துவ தாகவும், இந்தியாவின் சாதனைகளைச் சிறுமைப் படுத்துவதாகவும், காலனியாதிக்க ஆட்சியை நியாயப்படுத்துவதாகவுமே இருந்தன. சீனர்களுடன் ஒப்பிடும்போது இந்தியர்கள் காலக்கணிப்பு உணர்வு எதையும் வலுமிக்க வகையில் வெளிப்படுத்தி யதாகத் தோன்றவில்லை. ஆரம்ப கட்டத்தில் கௌதம புத்தரின் மறைவை அடிப்படையாகக் கொண்டு முக்கியமான நிகழ்ச்சிகள் காலக் கணிப்புச் செய்யப்பட்டன. இது, எப்படியிருந்த போதிலும் வரலாற்றாசிரியர்கள் தெரிவித்த பொதுக் கருத்துக்கள் தவறானவையாகவோ அல்லது பெரிதும் மிகைப் படுத்தப்பட்டவையாகவோ இருந்தன.

இது போன்ற ஓர் அறிதலையும், புரிதலையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, பிற வகையான பல்வேறு இந்திய வரலாறுகளில் காணப்படும் ஆதாரங்களையும், ஆவணங்களையும் முறைப்படி விருப்பு வெறுப்பு இல்லாமல் தொகுத்து ஒரு புதிய கண்ணோட்டத்தில் தனது பண்டைக்கால இந்தியாவை வடிவப்படுத்தியிருக்கிறார் ஆர்.எஸ். சர்மா.

அரசியல் சார்பற்ற வரலாற்றுக்கு மாறுபட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து அவர் தனது மதிப்பீட்டை முன்வைக்கிறார்:

"சமஸ்கிருத நிபுணரான ஏ.எஸ். பாஷாம், பண்டைக்கால இந்தியாவை இன்றைய கண்ணோட்டத்தி லிருந்து நோக்குவது விவேகமல்ல என்று கருதினார். சில புறக்கோட்பாட்டுப் பிரிவினரின் லோகாயுதக் கோட்பாட்டில் அவர் ஆழ்ந்த அக்கறை காட்டி வந்ததை அவரது ஆரம்பகால எழுத்துக்கள் காட்டுகின்றன. பின்னர் ஆர்வத்தின் பொருட்டும் மன மகிழ்வுக்காகவும் கடந்த கால வரலாற்றைப் படிக்க வேண்டுமென்று அவர் கருத்துத் தெரிவித்தார். 'இந்தியா என்ற அவரது நூல் இந்தியக் கலாச்சாரம் மற்றும் நாகரிகத்தின் பல்வேறு அம்சங்களைப் பரிவுணர்வோடு ஆராய்கிறது. வி.ஏ. ஸ்மித் போன்ற ஏனைய பிரிட்டிஷ் எழுத்தாளர்களின் நூல்களில் தொற்றிக் கொண்டிருக்கும் ஒருதலைப்பட்சமான கருத்துக்களை இந்நூலில் காண முடியாது.

"பாஷாவின் நூல் அரசியல் வரலாற்றிலிருந்து அரசியல் அல்லாத வரலாற்றுக்கு மேற்கொள்ளப் பட்ட ஒரு மாபெரும் மாற்றத்தைக் குறிக்கிறது. 'இந்திய வரலாற்று ஆய்வுக்கு ஒரு முன்னுரை' என்ற டி.டி. கோசாம்பியின் நூலிலும் இந்த மாற்றத்தைக் காணலாம். வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பண்டைக் கால இந்தியாவின் நாகரிகம் என்ற நூலும் இதே மாற்றத்தைப் பிரதிபலித்தது. கோசாம்பி இந்திய வரலாற்றில் ஒரு புதிய தடத்தைப் பின்பற்றினார். வரலாற்றைப் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தி லிருந்து அவர் ஆராய்ந்தார். காரல் மார்க்சின் நூல் களிலிருந்து இந்தக் கண்ணோட்டத்தை அவர் பெற்றார். உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மற்றும் அவற்றிடையேயான உறவுகள் என்ற அடிப் படையில் பண்டைய இந்திய சமுதாயம், அதன் பொருளாதாரம், கலாச்சாரம் ஆகியவற்றின் வரலாற்றை அவர் முன்வைக்கிறார். குலமரபு மற்றும் வர்க்க இயக்க நிகழ்வுகளின் அடிப்படையில் சமூக, பொருளாதார வளர்ச்சிக் கட்டங்களைக் காட்டும் முதல் ஆய்வு நூலாகும் அவருடைய இந்த நூல். பாஷாம் உட்பட பல ஆராய்ச்சி அறிஞர்களின் கடும் விமர்சனத்திற்கு அவர் ஆளானாலும், அவரது நூல் தொடர்ந்து ஏராளமானோரால் படிக்கப்பட்டு வருகிறது." அதைச் செழுமைப்படுத்தும் வகையில் ஆர்.எஸ். சர்மாவின் 'பண்டைக் கால இந்தியா' அமைந்துள்ளது.

தன்னுடைய நூலான இதற்குத் தகுந்த ஆதாரங்களை அடையாளம் காட்டித் தெளிவான கண்ணோட்டத்தை முதன்மைப்படுத்துகிறார். தகுந்த அளவில் தடயங்கள், நாணயங்கள், செதுக்குப் பொறிப்புகள், இலக்கியச் சான்றுகள், அயல்நாட்டுத் தகவல்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து தனது மதிப்பீடுகளை முன்வைக்கிறார்.

'இந்தியாவின் நிலவியல் பற்றி ஓரளவேனும் தெரிந்து கொள்ளாமல் அதன் வரலாற்றைப் புரிந்து கொள்ள முடியாது' என்ற கருத்தை முன்வைத்து அதன் பின்னணியையும், தனித்தன்மையையும் அடையாளப்படுத்துகிறார். இந்தியத் துணைக் கண்டம் நன்கு ஒழுங்கமைப்பட்ட ஒரு நிலவியல் அமைப்பாகப் பெரும்பாலும் வெப்ப மண்டலத்தில் அமைந்துள்ளது. இந்தியாவின் வரலாற்றில் பருவக் காற்று ஒரு முக்கிய பங்காற்றுகிறது என்பதை குறிப்பிட்டு இயற்கை வேளாண்மையே இந்தியாவின் அடிப்படைத் தொழில் என்பதையும் இனம்காட்டு கிறார்.

'கற்காலம்: ஆதிமனிதன்' என்ற தலைப்பின்கீழ் 'பழங்கற்காலம்: வேட்டையாடுபவர்களும் உணவு சேகரிப்பவர்களும்' பற்றித் தனது விரிவான ஆய்வை பழங்கற்காலக் கருவிகள், கைக்கோடரிகள், வெட்டுக் கத்திகள் போன்றவற்றைக் குறிப்பிட்டு விளக்குகிறார்.

அதைப் போலவே, புதிய கற்காலத்தில் உணவுப் பொருள் உற்பத்தியாளர்கள் தோன்றி வளர்ந்த முறைகளையும் தெளிவுபடுத்துகிறார்.

தொடர்ந்து, 'புதிய கற்காலத்தில் இறுதியில் உலோகங்கள் பயன்படுத்தலாயின. இவ்வகையில் செம்புதான் முதலில் பயன்படுத்தப்பட்ட உலோக மாகும். இதனைத் தொடர்ந்து கற்கருவிகளையும், தாமிரக் கருவிகளையும் பயன்படுத்துவதை அடிப் படையாகக் கொண்ட கலாச்சாரங்கள் தோன்றின' என்று வரலாற்று வளர்ச்சியை அடையாளப்படுத்து கிறார்.

மேலும், 'ஹரப்பா கலாச்சாரத்தில் வெண்கல யுக நாகரிகம் நிலவி வந்ததைக் குறிப்பிட்டுக் கலாச்சார வளர்ச்சியை இனம் காட்டுகிறார்.'

அதன் பின்னணியில் பிராணிகள் வளர்ப்பு, தொழில்நுட்பம், கைவினைத் தொழில்கள், வாணிகம், அரசியல் அமைப்பு, சமய வினை முறைகள் போன்றவற்றின் மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் தகுந்த ஆதாரங்களோடு விவரிக் கிறார்.

தொடர்ந்து 'ஆரியர்களின் வருகையையும், ரிக் வேத காலத்தையும்' விளக்கி வரலாற்றின் தொடர்ச்சியை இனம் காண்கிறார்.

தனித்தனியான இயல்களாக தனது 'பண்டைக் கால இந்தியா'வை வடிவமைத்துள்ள ஆர்.எஸ். சர்மா ஒவ்வொரு இயலின் கீழும் வரலாற்று மாற்றங்களை விவரிக்கிறார். பிந்தைய வேதகாலம், ஜைனமும் பௌத்தமும், பிரதேச அரசுகளும், முதல் மகதப் பேரரசும், ஈரானிய மற்றும் மாசிடோனியப் படையெடுப்புகள், புத்தர் காலத்தில் அரசும் வருண சமுதாயமும், மௌரியர்கள் காலம், மௌரிய ஆட்சியின் முக்கியத்துவம், மத்திய ஆசியத் தொடர்பு களும் அவற்றின் பயன்களும், தாதவாகனர் காலம் தொலைநோக்கில் வரலாற்றின் விடியல், மௌரியர் களுக்குப் பிந்திய காலத்தில் கைவினைத் தொழில் களும் வணிகமும், நகரங்களும், குப்தப் பேரரசின் தோற்றமும், வளர்ச்சியும், குப்தர் காலத்திய வாழ்க்கைப் பாணி, கிழக்கு இந்தியாவில் நாகரிகம் பரவுகிறது, ஹர்ஷரும் அவருடைய காலமும், தீபகற்கத்தில் புதிய அரசுகளின் உதயமும் கிராமப்புற விரிவாக்கமும், வேறுபட்ட சித்தாந்தப் போக்குகள், ஆசிய நாடுகளுடன் இந்தியாவின் கலாச்சாரத் தொடர்புகள், பண்டைய வளர்ச்சிக் கட்டத்தில் மாற்றம், சமூக மாற்றங்களின் நிகழ்வுப் போக்குகள், விஞ்ஞானத்திலும், நாகரிகத்திலும் மரபு வழி அம்சம்' போன்ற தலைப்புக்களின் வாயிலாக, ஏராளமான தகவல்களையும், ஆதாரங்களையும், ஆவணங்களையும் முன் வைத்து இதுவரை அறியப் படாத ஒரு 'பண்டைக்கால இந்தியா'வை ஆர்.எஸ். சர்மா அடையாளப்படுத்துகிறார்.

"இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தின் முதல் தலைவராகத் திகழ்ந்த பெருமையும் ஆர்.எஸ். சர்மாவைச் சேரும். 'பண்டைக்கால இந்தியா' என்பது அவரது பேனாமுனையிலிருந்து உதித்த மிகவும் புகழ்பெற்ற நூல். பிரபல இந்திய வரலாற்று அறிஞர்களால், ஆன்றோர்களால், சான்றோர்களால் பெரிதும் போற்றிப் பாராட்டப்பட்ட இந்த அறிய நூலுக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை இந்திய அரசு 1977-இல் திரும்பிப் பெற்றுக் கொண்டுவிட்டது. எனினும் தவறு உணரப்பட்டு, 1980-ஆம் ஆண்டில் அந்த அங்கீகாரம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது."

வாசித்து முடித்த பின் 'பண்டைய இந்தியாவை'ப் பற்றிய புதிய புரிதல்களுக்கும், அறிதல்களுக்கும், தெளிவான உணர்தலுக்கும் உள்ளாவோம். வாசிப் பதற்கு உகந்த வகையில் தெளிவான மொழிநடையில் இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது இதன் தனிச்சிறப்பு. ●

# உலகம் எங்கும் கருத்துச் சுதந்திரம்

உதயை மு.வீரையன்



உலகம் முழுவதும் கருத்துரிமையைப் பற்றிப் பேசாத நாடு இல்லை. ஆனால் எங்கும் கருத்துரிமை பறிக்கப்பட்டே வந்திருக்கிறது. உலகத்தின் மிகப் பெரிய மக்களாட்சி நாடாகப் பேசப்படுகிற இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. இங்கு பேசுவது ஒன்றாகவும் செயல்படுவது வேறு ஒன்றாகவும் இருந்து வருகிறது.

காந்தியின் தேசமாகவும், புத்தரின் பூமியாகவும் போற்றப்படும் இந்நாட்டில் கருத்துரிமைக்காகத் தங்களையே பலியாக்கிக் கொண்டவர்கள் ஏராளம். மற்ற நாடுகளில் சட்டத்தைக் காட்டி கைது செய்து, விசாரணை நடத்தி, மரண தண்டனை விதிப்பார்கள். ஆனால் இந்தியாவில் எந்த விசாரணையும் இல்லாமல் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

அண்மையில் ஒரு பத்திரிகையாளர் பெண்மணி என்றும் பாராமல் கர்நாடக மாநிலத்தின் பெங்களூரில் சுட்டுக் கொல்லப்பட்ட கௌரி லங்கேஷை மறக்க முடியுமா? அதற்கு முன் பேராசிரியர் கல்புர்கி இதே முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார். இரு சக்கர வாகனத்தில் வந்த இருவர் சுட்டுப் படுகொலை செய்துவிட்டுப் பறந்து விட்டனர்.

சமூக முன்னேற்றத்துக்காக எழுதும் சமூக ஆர்வலர்கள் கொல்லப்பட்டனர். மூட நம்பிக்கைகளை எதிர்க்கும் பகுத்தறிவுவாதிகள் கொல்லப்படுகின்றனர். இந்து மதத்தைக் காப்பதாகக் கூறிக் கொள்ளும் சங்பரிவார் அமைப்புகள் திட்டமிட்டுத் தீர்த்துக் கட்டும் போக்கு தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆண்டுக்கணக்கில் குற்றவாளிகளைத் தேடுவதாகக் கூறிக் கொண்டிருக்கும் காவல்துறையின் உளவுப் பிரிவு, யாரையும் கைது செய்து தண்டனை பெற்றுத்தர தவறிவிட்டது.

பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் போன்ற சிந்தனையாளர் களுக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு நாட்டை மக்களாட்சி நாடு என்று எப்படி கூற முடியும்? கடைந் தெடுத்த சர்வாதிகார நாட்டில்தான் இப்படிப்பட்ட வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படும்.

உலகத்துக்கு எல்லாம் காவலனைப் போல ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்கா இப்போது கருத்துரிமைக்கு எதிரான போக்கை கடைபிடித்து வருகிறது. 'விக்கி லீக்ஸ்' நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேயை பிரிட்டன் காவல்துறையினர் கடந்த ஏப்ரல் 11 அன்று கைது செய்தனர். இந்தச் செயல் கருத்துரிமைக்கு எதிரான செயல் என்று உலகம் முழுவதும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

வியட்நாம், ஆப்கானிஸ்தான், இராக் ஆகிய நாடுகளில் அமெரிக்கப் படையினர் செய்த மனித உரிமை மீறல்கள், அமெரிக்க அரசு தொடர்பான இரகசிய ஆவணங்கள் 2010-ஆம் ஆண்டு முதன் முதலில் 'விக்கி லீக்ஸ்' என்ற இணைய தளத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

மிகப் பெரிய வல்லரசாகக் கருதப்படும் அமெரிக்காவின் இராணுவ ரகசியமே வெளியானதால் அந்நாடு கலக்கமடைந்தது. இதே போல பல்வேறு நாடுகளின் ஊழல் தொடர்பான ரகசிய ஆவணங்கள் வெளிவந்தன. இது சர்வதேச அரங்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இதனால் 'விக்கி லீக்ஸ்' இணையதள நிறுவனத்துக்கு எதிராக அமெரிக்கா கடும் நடவடிக்கைகளை மேற் கொண்டது. இதன் காரணமாக, அதன் நிறுவனரான ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜூலியன் அசாஞ்சே ஸ்வீடன் நாட்டுக்குத் தப்பிச் சென்றார்.

அங்கும் அவருக்கு எதிராக பாலியல் வன் முறைக் குற்றச்சாட்டு எழுந்தது. அந்த வழக்கிலிருந்து தப்பிக்க பிரிட்டன் சென்றார். தலைநகர் இலண்டனில் உள்ள ஈகுவேடார் நாட்டின் தூதரகத்தில் தஞ்சம் புகுந்தார். இது நடந்தது 2012-ஆம் ஆண்டு. இதனால் அவரைக் கைது செய்வதில் சிக்கல் ஏற்பட்டது.

அவரைக் கைது செய்ய ஒத்துழைப்பு வழங்கும்படி ஈகுவேடார் நாட்டிடம் பிரிட்டன் அரசு பேச்சுவார்த்தை நடத்தி வந்தது. இந்நிலையில் பிரிட்டனின் கோரிக்கையை ஏற்று ஜூலியன் அசாஞ்சேவுக்கு வழங்கப்பட்ட அரசியல் பாது காப்பை அந்நாடு விலக்கிக் கொண்டது.

இதனால் இதுவரை ஈகுவேடார் தூதரகத்தில் தங்கியிருந்த அசாஞ்சேவை இலண்டன் காவல் துறையினர் கைது செய்தனர். பின்னர் அவர் வெஸ்ட் மின்ஸ்டர் நீதிமன்றத்தில் நேர் நிறுத்தி கைது செய்யப்பட்டதாக பிரிட்டன் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கைது உலகெங்கும் ஊடக உலகில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கருத்துரிமைக்கு எதிரான தாக்குதலாகவே வருணிக்கப்படுகிறது. சரி, யார் இந்த ஜூலியன் அசாஞ்சே?

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லேண்டில் 1971 ஆம் ஆண்டு ஜூலை 3-ஆம் நாள் பிறந்தவர். மெல் போர்ன் பல்கலைக்கழகம் மற்றும் குயின்ஸ்லேண்ட் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமது பட்டப் படிப்புகளை நிறைவு செய்தவர். சில காலம் ஆஸ்திரேலியாவில் உள்ள முன்னணிப் பத்திரிகை களில் பணிபுரிந்தவர்.

பின்னர் பல நாட்டு அரசாங்கங்கள் மறைத்து வைத்திருக்கும் ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ரகசிய ஆவணங்களை வெளியிடுவதற்காக 'விக்கி லீக்ஸ்' என்ற இணைய தளத்தை 2006-ஆம் ஆண்டு தொடங்கினார். இதில் பிரபல பத்திரிகையாளர்கள் வெளியுலகுக்குத் தெரியாமல் பணிபுரிந்து வந்தனர்.

இந்த இணையதளத்தில் பல நாடுகளின் ஊழல்கள் வெளிவந்த போதிலும், அமெரிக்காவின் இராணுவ ரகசியங்கள் வெளியான போது 'விக்கி லீக்ஸ்' மற்றும் அதன் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே உலகத்துக்கு மிகப் பெரிய அளவில் அறியப்படலாயினர்.

கருத்துச் சுதந்திரம் என்றால் என்ன என்பதை உலகத்துக்கு அறியச் செய்தவர்கள் இவர்கள். அரசாங்கம் எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அது இரகசியமாக இருக்க வேண்டும். அது வெளியில் தெரிந்துவிடக் கூடாது. அதை வெளியில் தெரியும்படி செய்து விட்டால் அது தேசத் துரோகமாகி விடுகிறது.

"அரசுகள் தொடர்பான ரகசியத் தகவல்களை அம்பலப்படுத்தியதன் மூலம் கருத்துச் சுதந்திரத்துக்கு வலுசேர்க்கும் அசாஞ்சேவை கைது செய்யலாமா? தண்டனைக்கு உட்படுத்தலாமா?" என்று சுதந்திரச் சிந்தனையாளர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

"செல்வாக்கு இல்லாத மக்களை அரசுகளால் உளவு பார்க்க முடிகிறது. ஆனால் செல்வாக்கு மிக்கவர்களின் நடவடிக்கைகள் மூடி மறைக்கப் படுகின்றன" என்பதுதான் அசாஞ்சே அளிக்கும் விடையும், விளக்கமும்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கணினி வல்லு நரான ஜூலியன் அசாஞ்சே 'விக்கி லீக்ஸ்' இணைய தளத்தை உருவாக்க, அதில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் பல்வேறு ரகசியங்களை வெளியிட்டு பல தவறுகளை அம்பலப்படுத்தி வந்தார்.

இதற்கிடையே ஸ்வீடனில் அவர் மீது பாலியல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக பிரிட்டனில் கைது செய்யப்பட்ட அவருக்கு கடந்த 2012-ஆம் ஆண்டு பிணை வழங்கப்பட்டது. இந்தச் சூழலில் பாலியல் வழக்கு தொடர்பாக ஸ்வீடனுக்கு நாடு கடத்தக் கூடாது என நீதிமன்றத்தில் மனு செய்து கொள்ளப்பட்டது.

ஆனால் அவர் மனு நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் ஜூலியன் அசாஞ்சே கடந்த 2012-ஆம் ஆண்டு தஞ்சம் அடைந்தார். ஈக்வடார் அரசும் அவருக்கு அடைக்கலம் அளித்தது. இதையடுத்து கடந்த 7 ஆண்டுகளாக அவர் அந்தத் தூதரகத்திலேயே வசித்து வந்தார். ஆட்சி மாறியதும் காட்சியும் மாறியது.

இதற்கிடையே ஈக்வடாருக்கும், ஜூலியன் அசாஞ்சேவுக்கும் மோதல் போக்கு உருவானது. தூதரக வளாகத்தில் தனக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதாக அசாஞ்சே குற்றம் சாட்டினார்.

இந்தச் சூழலில் அசாஞ்சேவுக்கு இதுவரை தரப்பட்ட அடைக்கலத்தை ஈக்வடார் அரசு விலக்கிக் கொள்வதாக அறிவித்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அசாஞ்சேவுக்கு எதிரான பாலியல் வழக்கை ஸ்வீடன் கைவிட்ட நிலையிலும் அந்த வழக்கு தொடர்பான ஜாமீன் விதிமீறலில் ஈடுபட்ட குற்றச் சாட்டின் பேரில் பிரிட்டன் காவல்துறையினர் அவரை இப்போது கைது செய்திருப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஈக்வடார் நாட்டின் அதிபர் லெனின் மொரேனோ, 'ஜூலியன் அசாஞ்சேவுக்கு இலண்டன் தூதரகத்தில் அளிக்கப்பட்ட அடைக்கலத்தை நீக்கியது சரிதான்' என்று தெரிவித்துள்ளார்.

மற்ற நாடுகளை வேவு பார்க்கும் நோக்கில் 'உளவு மையம்' ஒன்றை அமைக்க அவர் முயற்சி செய்தார். ஈக்வடாரின் முந்தைய அரசுகளிடம் அனுமதி பெற்று இந்த மையத்தை அமைக்க அவர் முயன்றார். எங்கள் தூதரகத்தில் இருந்து கொண்டு மற்ற நாடுகளை நோட்டம் இடுவதை அனுமதிக்க முடியாது என்பது அவரது வாதம்.

அவருக்கு அடைக்கலம் தந்த இடத்தில் இருந்து கொண்டே மற்ற நாடுகளை வேவு பார்க்க அவர் முயன்றுள்ளார். நாங்கள் எடுத்த முடிவு தன்னிச்சை யானது அல்ல. சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டே அவருக்கு அளித்து வந்த அடைக்கலத்தை நீக்க நாங்கள் முடிவெடுத்தோம். இவ்வாறு ஈக்வடார் அதிபர் தமது பேட்டியில் கூறியுள்ளார்.

'அதே நேரத்தில் அசாஞ்சேவுக்குத் துன்புறுத்தலோ, மரண தண்டனையோ வழங்கக்கூடிய நாடுகளுக்கு அவரை நாடு கடத்தக் கூடாது என்ற நிபந்தனையின் பேரிலேயே அவருக்கு அடைக்கலம் ரத்து செய்யப் பட்டுள்ளது' என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் மரிசேபேனி, 'பிரிட்டன் சிறையில் ஜூலியன் அசாஞ்சே நல்ல முறையில் நடத்தப்படுவார். அவருக்கு உரிய நீதி கிடைக்கும் என்று நம்புகிறோம். அவருக்கு ஆஸ்திரேலிய தூதரகம் தேவையான உதவிகளைச் செய்யும்' என்று கூறியுள்ளார்.

2016 அமெரிக்க அதிபர் தேர்தலின் போது 'விக்கி'லீக்ஸ் சில ஆவணங்களை வெளியிட்டது. அதனால் அதிபர் பதவி வேட்பாளரான ஜனநாயகக் கட்சியின் ஹிலாரி கிளிண்டனின் தோல்விக்கும், குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்டு டிரம்பின் வெற்றிக்கும் ரஷியாவின் பின்துணையுடன் அசாஞ்சே செயல்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது.


அமெரிக்க இராணுவத்தின் இரகசிய ஆவணங் களை அங்கு உளவுத் துறையில் வேலை பார்த்த செல்சி மேனிங் என்பவர் மூலம் 'விக்கி லீக்ஸ்' பெற்றிருப்பதால் அசாஞ்சேவை முதல் குற்றவாளி யாக்க முடியாது. மேலும் போர்க்குற்றங்கள் அத்து மீறிய அக்கிரமங்கள் என்பதால் அவற்றைப் பொது வெளியில் கசியவிட்டது தவறு என்றும் கூற முடியாது.

ஆவணங்கள் திருட்டுத்தனமாக பெறப்பட்ட தாகக் கூறப்பட்டாலும் உண்மையை வெளிக் கொணர்வதற்கான முயற்சி என்பதால் பத்திரிகைச் சுதந்திரமாகவே அதனைப் பார்க்க வேண்டும். ரஷிய உளவுத்துறையின் உதவியுடன் விக்கிலீக்சின் செயல் பாடுகளை தொடர்புபடுத்துவதற்குப் போதுமான ஆதாரங்கள் ஏதும் இல்லை.

அரசாங்க பயங்கரவாதத்தை அகற்றி, வெளிப் படைத்தன்மையை ஏற்படுத்த விரும்பும் முற்போக்காளர் களுக்கு அவர் போர்க்குணமிக்க மாவீரராகவே எப்போதும் தோற்றம் அளிப்பார். அமெரிக்க வல்லரசு அவர் மீது நடவடிக்கை எடுப்பதால் தம் மரியாதையைக் குறைத்துக் கொண்டது என்றே கூறலாம். ●

# லெமூரியா (குமரிக் கண்டம்) என்பது ஒரு கற்பனை!

**நக்கீரன்**



**சா**ர்லஸ் ராபர்ட் டார்வின் (Charles Robert Darwin-1809-1882) என்பவர் ஓர் ஆங்கிலேய இயற்கையியல் அறிஞர் ஆவர். இவர் முன்வைத்த உயிரினங்களின் படிமலர்ச்சிக் கோட்பாடு (Theory of Evolution) அதுவரை நம்பி வந்த படைப்புப் பற்றிய கோட்பாட்டைப் புரட்டிப் போட்டது. படிமலர்ச்சிக் கோட்பாடு என்பது ஓர் அடிப்படையான புரட்சி கரமான அறிவியற் கொள்கை ஆகும். டார்வின் தாம் கண்டுபிடித்த உண்மைகளையும், கோட்பாடு களையும், *1859* ஆம் ஆண்டில் உயிரினங்களின் தோற்றம் (The Origin of Species) என்னும் தலைப்பில் ஒரு நூலாக வெளியிட்டார். இவர் கடல் வழியே, எச்எம்எஸ் பீகிள் (HMS Beagle) என்னும் கப்பலில்,

உலகில் பல இடங்களுக்கும் சென்று, குறிப்பாக காலபாகசுத் தீவுகளுக்குச் சென்று உயிரினங்கள் பற்றி ஆராய்ந்தார்.

படிமலர்ச்சிக் கருதுகோள் (Theory of Evolution) நீர்வாழ்வன, நிலத்தில் ஊர்வன, மேலே பறப்பன போன்ற உயிரினங்கள் தாமாகவே தோன்றின, அவை இன்றுள்ளது போல யாராலும் படைக்கப்பட வில்லை என்பதை நிறுவியது. குரங்கில் இருந்து மனிதன் மேலும் நாம் காணும் உயிரினங்களின் உருவம் தொடக்க காலத்தில் இருந்தே வரவில்லை. அவை ஒற்றைக் கலம் (single cell) உயிரியிற் தொடங்கி இடையறாத மாற்றம், படிமுறை வளர்ச்சி, மலர்ச்சி, இனப் பெருக்கம், இடப் பெருக்கம், இயற்கைத் தேர்வு (Natural Selection) நிலத்தின் தன்மை, சூழல் முதலியவற்றுக்கு ஏற்ப வாழ்க்கைத் தேவையை நிறைவு செய்தல் காரணமாக உருமாற்றம் அடைந்து வந்துள்ளன.

இன்று நாம் காணும், மரம், செடி, கொடிகள் கடலில் இருந்து கரையில் விழுந்த சிறு சாதாளையின் படிமலர்ச்சி ஆகும். மனிதனை எடுத்துக் கொண்டால் அவன் "முழுசாகக் கடவுளால் படைக்கப்பட வில்லை, மண்ணின் செழுமையால் ஒன்று கூடி உண்டான உயிரணுக்களின் படிமலர்ச்சியே மனிதன். அதாவது பூச்சியாய், புழுவாய், நத்தையாய், மீனாய், பறவையாய், குரங்காய் வளர்ந்து இறுதியில் அவற்றின் திருத்த உருவமாய் மனிதன் தோன்றினான் என டார்வின் படிமலர்ச்சிக் கோட்பாடு மூலம் நிறுவினார்.

மனிதன் ஊர்வன நிலையைக் கடந்து நாலு காலால் நடக்கும் குரங்கு நிலை எய்திப் பின்னர் வளைந்த முதுகை நேர் நிமிர்த்தி நாலு கால்களில் இரண்டைக் கைகளாகப் பயன்படுத்தி மீதி இரண்டு காலால் நடக்கக் கற்றுக் கொண்டு மரக் கொப்பு களுக்குப் பதில் குடிசை கட்டி சிற்சில கருவிகளைச் செய்து வாழப் பல இலட்சம் ஆண்டுகள் எடுத்தது என டார்வின் விளக்கினார்.

உலகத்தையும் அதிலுள்ள உயிர்களையும் கடவுள் படைத்தார், அரைகுறையாக அல்ல ஒவ்வொன்றையும் முழுதாகவே படைத்தார், அதே போல் ஆறறிவு படைத்த ஆணையும் பெண்ணையும் கடவுளே படைத்தார் என்றும் மதங்களும் மதவாதி களும் சொல்லி வந்த படைப்புக் கோட்பாட்டை டார்வினின் படிமலர்ச்சிக் கோட்பாடு தகர்த்து எறிந்தது.

டார்வினின் படிமலர்ச்சிக் கோட்பாடு உயிரினங்கள் தம் நிலை பேற்றுக்காகப் போராடுகின்றன, இறுதியில் தகுதியுள்ளவை மட்டுமே தப்பிப்பிழைக்கின்றன (The Struggle for Existence of the Fittest) எனக் கூறியது.

டார்வினது படிமலர்ச்சிக் கோட்பாடு பல அறிவியல் வாதிகளின் சிந்தனையில் பலத்த மாற்றத்தை உண்டாக்கியது. அதில் ஒருவர் விலங்கியல் அறிஞர் பிலிப் சிலேட்டர் (Philip Sclater) ஆவர்.

1860களில் தனது கள ஆராய்ச்சியில் ஒரு புதுமையைக் கண்டார். மடகஸ்கரில் காணப்பட்ட குரங்கு இனத்தை ஒத்த இனம் அதனைச் சுற்றியுள்ள தீவுகளில் காணப்படவில்லை.

ஆனால் அந்தக் குரங்கு இனத்தின் தொல்லுயிர் எச்சங்கள் இந்தியா, இன்றைய பாகிஸ்தான் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் காணப்பட்டன. மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் காணப்படவில்லை. இந்த முரண்பாட்டின் அடிப் படையில் பிலிப் சிலேட்டர் 1864 இல் ஒரு கோட் பாட்டை முன்மொழிந்தார். 'மடகஸ்கரின் பால் குடிகள்' என்ற அவரது கட்டுரை காலாண்டுக்கு ஒரு முறை வெளிவரும் அறிவியல் ஏட்டில் (Journal of Science)இல் வெளிவந்தது. அதில் இந்தியாவில் இருந்து மடகஸ்கர் வரை இந்திய சமுத்திரத்தில் ஒரு பெரிய கண்டம் இருந்திருக்க வேண்டும் என எழுதியிருந்தார். அவரால் அனுமானிக்கப்பட்ட அந்தக் கண்டத்துக்கு லெமூரியா எனப் பெயர் இட்டார். அது அறிவியல் சமூகத்தில் ஓரளவு ஒப்புதலைப் பெற்றிருந்தது.

பிலிப் சிலேட்டர் காலம் இந்தப் புவித்தட்டுக் கட்டுமானவியல் மற்றும் கண்டங்களின் நகர்வு பற்றி யாரும் அறிந்திராத (During his time the scientific concepts of plate tectonics and continental drift were not known) காலம்.

பிலிப் சிலேட்டரின் முன்மொழிவு அறிவியல் கற்பனைக் கதைகள் எழுதுவோர் மத்தியில் பிரபலமானது. அப்படியான கற்பனைக் கதைகளைப் படிக்கும் வாசகர் மத்தியிலும் பெரிய வரவேற்பைப் பெற்றது.

லெமூரியாக் கண்டம் அமானுசிய சோதிடரான மடாம் ஹெலனா பிலேவஸ்ஸ்கி (Madame Helena Blavatsky) அவர்களாலும் பிரபல்யம் அடைந்தது. அவர் லெமூரியா கண்டத்தின் வரைபடத்தைக் கண்டதாகவும் சொன்னார்.

பிரமஞானி வில்லியம் ஸ்கொட் எலியட் என்பவர் 'அட்லாண்டிஸ் அண்டு லாஸ்ட் லெமுரியா தி ஸ்டோரி' ('The Story of Atlantis and Lost Lemuria') என்ற நூலை வெளியிட்டார். இந்த நூலில் விரிவாக இந்தியா மற்றும் பசிபிக் கடல் தொடக்கம் ஆப்பிரிக்

காவின் கிழக்குக் கடற்கரைப் பிரதேசங்கள் வரை நீண்டுள்ள லெமூரியா கண்டத்தின் புவியியலை விளக்கி எழுதியிருந்தார். ஸ்கொட் எலியட் ஒரு அறிவியலாளர் அல்லது புவியியலாளர் அல்லது தொல்பொருள் நிபுணர் அல்லர்.

லெமூரியா என்ற எடுகோள் நிலவியல் மற்றும் புவித்தட்டுக் கட்டுமானவியல் பற்றிய நவீன புரிந்துணர்வு மூலமாக இன்று வழக்கற்றுப் போய்விட்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய அறிவியலாளர்கள் மற்றும் புவியியலாளர்கள் லெமூரியா பற்றிய எடுகோளை முற்றாக நிராகரித் தார்கள். இந்தியா மற்றும் அண்டார்டிகா இடையே புவித்தட்டுக் கட்டுமானம் இருப்பது இயற்பியல் அடிப்படையில் சாத்தியமற்றது என்றார்கள். 180 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் மடகஸ்கர் இந்தியாவோடு இணைந்திருந்த போது குரங்கின விலங்கு இருக்கவில்லை.

அதீத ஆர்வம் காரணமாகச் சில தமிழ் ஆர்வலர்கள் குமரிக் கண்டம் (லெமூரியா) தமிழர்கள் வாழ்ந்த இடம் அங்கிருந்து அவர்கள் இன்றைய தமிழ்நாடு முதற் கொண்டு பல நாடுகளுக்குப் புலம் பெயர்ந் தார்கள் என்று எழுதியும் காணொளி வாயிலாக ஒளிபரப்பியும் வருகிறார்கள்.

குமரிக்கண்டம் என்பது இந்தியப் பெருங் கடலில் அமைந்துள்ள இந்தியாவின் தெற்கே இருந்த தாகக் கருதப்படும் ஒரு புராண கண்டத்தைக் குறிக்கிறது. இன்றைய குமரிமுனையின் தென்பகுதி காலத்துக்குக் காலம் ஏற்பட்ட கடற்கோள்களால் விழுங்கப்பட்டது என்பது தமிழ் இலக்கியங்களால் தெரிய வருகிறது.

“வடிவேல் எறிந்த வான்பகை பொறாது, பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள” எனச் சிலப்பதி காரத்தில் தென்னவன் வாழ்த்தப்படுகிறான்.

பாண்டிய பேரரசு கடல்கோளால் அழிந்தது பற்றிய குறிப்புகளை இறையனார் அகப்பொருளில் காணமுடிகிறது. இதில் தமிழகத்தை ஆண்ட அரசர் களின் வரிசை, தமிழ் அவையில் இருந்த புலவர் களின் வரிசை முதலியன குறிக்கப்பெற்றுள்ளன. இதுபோன்ற செய்திகள் தமிழ் இலக்கியத்தில் வேறு எங்கும் இல்லை. நக்கீரரால் கூறப்பட்டிருந்த இந்தக் கருத்து முதல் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று அறியப்படுகிறது.

தமிழ்மொழி அல்லது தமிழர் சிறப்பு தொன் மையில் அல்ல தொடர்ச்சியில் இருக்கிறது. முதல் குரங்கு தமிழ்க் குரங்கு என்று நிறுவ முயற்சிப்பதில் மகிமை இல்லை. ●

## நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்





**பரமாத்து விதம்**

**முப்பால்மணி**

விலை : ₹ 180/-

தமிழகத் தத்துவத்தில் சைவ வேதாந்தமான பரமாத்துவிதம் பற்றிய ஆய்வு நூல். சங்கரர் நெறி, ராமானுஜர் நெறி, சைவ நெறி, ஐரோப்பிய தத்துவச் சிந்தனைகள் போன்றவற்றினூடே சைவநெறியை மனோன்மணியம் உள்ளிட்ட நூல்களிலிருந்து விளக்கியுரைக்கும் நூல்.




**சொல் பண்பாட்டு அடையாளம்**

**இரா.வெங்கடேசன்**

விலை : ₹ 200/-

தமிழரின் பண்பாட்டுக்கூறுகளை வெளிப்படுத்தி நிற்கக்கூடிய பல சொற்கள் சங்ககாலம் தொடங்கிச் சமகாலம் வரையிலும் வழங்கி வருகின்ற குறிப்புகளை வெளிப்படுத்துகின்றன - இந்நூற் கட்டுரைகள்.

# தொல்காப்பியரின் சொல்லுருவாக்கக் கொள்கைகளும் கலைச்சொல்லாக்க அடிப்படைகளும்

## (மொழியியல் பின்னணியில்)

ஆ.கார்த்திகேயன்

I

### 1. மொழியில் சொற்பெருக்கம்

மொழியில் சொற்பெருக்கம் இரண்டு வழிகளில் நடைபெறுகின்றது. அவையாவன:

1. கடனாகச் சொற்களைப் பெறுவதின் வழியாக
2. புதிய சொற்களை மொழியில் உற்பத்தி செய்வதின் வழியாக

இவ்விரண்டு வழிகளுமே சொற்பெருக்கத்திற்கு அடிப்படையாக விளங்குகின்றன.

### 1.1 கடன் பெறுதல் (Borrowing)

மொழிகள் பிற மொழிகளோடு தொடர்பு கொள்ளும்போது அம்மொழிச் சொற்களைக் கடனாகப் பெறுகின்றன. அதாவது கடன் வாங்குவதின் மூலமாக தம் மொழியில் இல்லாத சொற்கள் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. பின்னர் காலப்போக்கில் அது கடன் சொல் என்று இனம்காணமுடியாத அளவுக்கு அச்சொல் மொழியில் கலந்துவிடக்கூடும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கடனாகப் பெறப்பட்ட பிறமொழிச் சொற்கள் தமிழ் மொழியில் உள்ளன. சாதாரண மக்கள் மட்டுமின்றி படித்த மக்களுக்கேகூட அவை கடன் சொற்கள் என்று இனம் காணமுடியாமல் போய்விடுகின்றன. கல்லாதவர்கள் அந்தப் பிரக்ஞை இல்லாமலே சொற்களைப் பயன்படுத்துகின்றனர். நமது நாட்டுப் புற இலக்கியங்களில்கூட கடன் சொற்கள் கலந்திருப் பதைக் கவனிக்கலாம். பழந்தமிழ் இலக்கியங்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல. அவற்றிலும் கடன் சொற்கள் கலந்துள்ளன.

### 1.2 கடன்பெறுதல்-மொழி அமைப்பில் மாறுதல்கள்

பிறமொழிச் சொற்களைத் தடையின்றித் தாராளமாகக் கடனாகப் பெறுவதால் கடன்பெறும் மொழியின் மொழி அமைப்பில் மாற்றங்கள் ஏற்படலாம். அதாவது அம்மொழியின் ஒலி அமைப்பிலும், சொல் அமைப்பிலும், தொடர் அமைப்பிலும் கடன் தரும் மொழியின் ஒலிக் கூறுகள், சொல்லுருவாக்க உருபன்கள், தொடரமைப்புகள் தாக்கங்களை ஏற்படுத்திப் புதிய அமைப்பைத் தோற்றுவிக்கலாம். வடமொழிச் சொற்களைக் கடன் பெற்றதால் இன்றைய தமிழில் ஸ, ஷ, ஹ, க்ஷ போன்ற உபரி ஒலியன்கள் புகுந்துள்ளன. அவை மொழி முதலிலும் இடையிலும் சொற்களில் இடம்பெறுகின்றன.

| | |
|---|---|
| ஸர்ப்பம் | ஹாரம் |
| சரஸ்வதி | ஆஹாரம் |
| போலீஸ் | காக்ஷி |
| விஷம் | க்ஷேமம் |
| ரமேஷ் | ஜவுளிக்கடை |
| ஷங்கர் | ராஜாத்தி |
| ஹரி | ராஜாஜி |

பொதுவாக வல்லின எழுத்துக்கள் (க, ச, த, ப, ட, ற) சொல்லின் இறுதியில் வருவதில்லை. இது தமிழ் மொழியின் ஒலியன் அமைப்பாகும். ஆனால் கடன் சொற்களின் விளைவாக இவ்வெழுத்துக்கள் இறுதியில் இடம்பெறுகின்றன.

| | |
|---|---|
| கோர்ட் | போனஸ் |
| கப் | ஸ்டிரைக் |
| ஸ்டாம்ப் | பட்ஜெட் |
| பந்த் | |

ட, ல, ர ஆகிய மெய்யெழுத்துக்கள் மொழி முதலில் வராது. ஆனால் கடன் சொற்களில் இத்தகைய விதி மீறப்படுகின்றது.

| | |
|---|---|
| லாரி | ரேஷன் |
| டீ | லாட்டரி |
| டீச்சர் | ரேடியோ |

இவை யாவும் கடன் சொற்களை ஆள்வதால் மொழியின் ஒலியமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்

களாகும். இவ்வாறே உருபனியல், தொடரியல் அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படும்.

### 1.3 கடன்தரும் மொழியின் ஒலிகளைத் தவிர்த்தல்

சொற்களைக் கடனாகப் பெறும்போது அவை கட்டுப்பாடில்லாமலும், சில வேளைகளில் கட்டுப் பாட்டுடனும் கையாளப்படுகின்றன. கட்டுப் பாட்டுடன் பயன்படுத்தும்போது பிறமொழிக் கூறுகள் தவிர்க்கப்படுகின்றன. பிறமொழிக்கே உரிய எழுத்துக்கள் தவிர்க்கப்படலாம். மேலே வடமொழிக்கேயுரிய ஒலிகள் உபரி ஒலியன்களாகத் தமிழில் வந்து வழங்குகின்றன என்று குறிப்பிட்டோம். அவ்வொலிகள் தவிர்க்கப்பட்டு அவற்றிற்குச் சமமாக அல்லது கிட்டத்தட்ட சமமாக இருக்கிற தமிழ் ஒலிகள் வடவெழுத்துக்குப் பதிலாகப் பயன் படுத்தப்படும். இதனை Phonological nativization என்பர் மொழியியலாளர்.

| | | |
|---|---|---|
| போலீஸ் | போலீசு | *(ஸ் > சு)* |
| விஷம் | விடம் | *(ஷ > ட)* |
| ஆஹாரம் | ஆகாரம் | *(ஹ > கா)* |
| பஜார் | பசார் | *(ஜ > ச)* |
| க்ஷேமம் | சேமம் | *(க்ஷ > ச)* |
| ஹரி | அரி | *(ஹ > அ)* |

### 1.4 கடன்தரும் மொழியின் சொற்களைத் தவிர்த்தல்

சில வேளைகளில் கடன் தருகின்ற மொழியின் சொற்கள் தவிர்க்கப்படும். அச்சொற்களுக்கு இணையான புதிய சொற்கள் உருவாக்கப்படும். அவ்வாறு உருவாக்கப்படும் புதிய சொல் ஏற்கனவே புழக்கத்தில் உள்ள சொல்லாக இருக்கலாம். அல்லது வட்டார வழக்குகளிலிருந்தோ, பழைய (மூதாதையர்) மொழியிலிருந்தோ கடனாகப் பெறப்பட்டு புதிய பொருளில் பயன்படுத்தப்படலாம்.

| | |
|---|---|
| சுனாமி | கடல்கோள், ஆழிப்பேரலை |
| ரேடியோ | வானொலி |
| பைலட் | வலவன் |
| ஏரோப்ளேன் | வானவூர்தி |
| ட்ரெயின் | புகைவண்டி |
| புகைரதம் | (இலங்கை) |
| போலீசு | காவலர் |
| மொபைல் | கைபேசி, செல்லிடப்பேசி<br>செல்பேசி |

கடன் பெறுதல் (borrowing) மொழியில் காணப் படுகின்ற இயல்பான விடயமாகும். கடன் சொற் களைப் பெறுவதால் மொழி வளர்ச்சி பெறுகிறது என்று ஒருசாராரும், மொழி மாசுபடுகின்றது என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர். கடன் சொற்கள் இல்லாமல் எந்த மொழியும் இருக்க முடியாது என்று கூறலாம். மொழி பேசுவோரின் தேவையை உடனடியாகவோ நீண்ட காலத்திற்கோ கடன் சொற்கள் நிறைவேற்றுகின்றன.

### 1.5 புதிய சொற்கள் உருவாக்குதல்

**ஆக்கச்சொற்கள்** (Derived words)

மொழியில் புதிய சொற்கள் உருவாக்குவதைச் சொல்லுருவாக்கம் (Word formation) என்று கூறுவர். மொழியில் தனிச்சொற்கள் அல்லது எளிய சொற்கள் உள்ளன (simple words). இத்தகைய தனிச் சொற் களுடன் ஒன்றிரண்டு உருபுகள் சேர்த்து புதிய ஒரு கலவைச் சொல்லை உருவாக்கலாம் (complex words). 'பகிர்' என்ற தனிச்சொல்லுடன் -மானம் என்ற உருபு சேர்க்கப்பட்டு (பகிர்-மானம்) என்ற கலவைச் சொல் உருவாக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வரு-மானம் | படி-ப்பு |
| பகிர்-மானம் | நடி-ப்பு |
| பெரு-மானம் | |
| பங்கு-தாரர் | கல்-வி |
| அட்டை-தாரர் | தொழு-கை |
| உரிமை-தாரர் | செல-வு |
| கடன்-காரன் | ஓட்ட்-அம் |
| வேலைக்-காரன் | |
| வண்டிக்-காரன் | |
| நகர்-வாசி | |
| குடிசை-வாசி | |
| சிறை-வாசி | |
| நடி-கை | |
| பாட-கி | |

மேற்கண்ட சொற்களை ஆக்கச்சொற்கள் (derivatives or derived words) என்று சொல்வர். -காரன், -காரி, -தாரர், -வாசி போன்றவை பின்னொட்டு களாகும் (suffix). பின்னொட்டுக்களைத் தனிச்சொற் களுடன் சேர்த்துப் புதிய சொற்களை உருவாக்கலாம் என்பதை இங்கு மனதில் கொள்ளலாம்.

### 1.6 கூட்டுச் சொற்கள் (Compounds)

இரண்டு தனிச்சொற்கள் சேர்ந்தும் ஒரு புதிய சொல் உருவாக்கப்படலாம். அவற்றைக் கூட்டுச் சொற்கள் என்று கூறுவர். நடை என்ற சொல்லையும், பயிற்சி என்ற சொல்லையும் இணைத்து நடைப் பயிற்சி என்ற சொல்லை உருவாக்குகிறோம். மாரடைப்பு (மார் + அடைப்பு) என்ற சொல்லில் இரு சொற்கள் இருப்பதைக் கவனிக்கலாம். இவற்றைக் கூட்டுச் சொற்கள் என்று கூறுவர்.

| | |
|---|---|
| உடல்நிலை | *(உடல் + நிலை)* |
| மூச்சிரைப்பு | *(மூச்சு + இரைப்பு)* |
| கட்டாயப்படுத்து | *(கட்டாயம் + படுத்து)* |
| ஊக்கப்படுத்து | *(ஊக்கம் + படுத்து)* |

இழுபறி (இழு + பறி)

தடியடி (தடி + யடி)

தள்ளுமுள்ளு (தள்ளு + முள்ளு)

தூரப் பார்வை (தூரம் + பார்வை)

மூக்குக்கண்ணாடி (மூக்கு + கண்ணாடி)

**1.7 மாற்றம்** (Conversion)

சில சொற்களோடு எவ்வித ஒட்டுக்களோ (affixes) சொற்களோ சேர்க்கப்படாமல், அவற்றை வேறொரு சொல்லாகப் பயன்படுத்த முடியும். அடி என்ற வினைச் சொல்லையே அடி என்ற பெயராகவும் பயன்படுத்த முடிகிறது. பிடி என்ற வினைச் சொல்லையே (ஒரு) பிடி என்ற பெயராகவும் பயன் படுத்தலாம். வினையே இங்குப் பெயராக மாற்ற மடைகின்றது. எந்த ஒட்டுக்களும் இங்குச் சேர்க்கப் படவில்லை. செயல் மாற்றம் (functional shift) மட்டுமே நடைபெறுகின்றது.

உயிர் - உயிர்(த்தது)

நரை - நரை(த்தது)

புழு - புழு(த்தது)

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களில் பெயர்ச் சொற்களே வினைகளாக மாற்றப்படுகின்றன. இதனையே மாற்றம் (conversion) என்ற கலைச் சொல்லால் குறிப்பிடுவர்.

பொதுவாக தமிழ் மொழியில் மேற்கண்ட முறைகளில் புதிய சொற்கள் உருவாக்கப்படுகின்றன. இனி சொல்லுருவாக்கம் குறித்து தொல்காப்பியத்தில் காணப்படும் செய்திகளைத் தொகுத்துக் காண்போம்.

II

## 2. தொல்காப்பியரின் சொல்லுருவாக்கக் கொள்கைகள்

**2.1. வடசொற்கள்-கடன் உருவாக்கம்**

வடமொழிச் சொற்களைச் செய்யுட்களிலும் பயன்படுத்தலாம் என்பது தொல்காப்பியர் கொள்கை. செய்யுள் என்பது இலக்கியப் படைப்பு என்ற துறை சார்ந்த பொருள். இத்தகைய இலக்கியப் படைப்பில் வடசொற்களை ஏற்கலாம், அனுமதிக்கலாம் என்பது தொல்காப்பிய எச்சவியல் நூற்பாவிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. வடசொற்களைச் செய்யுள் ஆக்கத் திற்கே பயன்படுத்தலாம் என்று கூறியிருப்பதால் பிற துறை சார்ந்த கலைச்சொல்லாக்கத்திற்கும் அவற்றைத் தாராளமாகப் பயன்படுத்தலாம் என்பதே அவரது கொள்கையாகக் கருதலாம்.

**2.2 வடசொற்களை எவ்வாறு ஏற்க வேண்டும்?**

தமிழில் வந்து வழங்கும் வடசொற்களை இருவகையாகப் பகுக்கலாம். அவை

1. இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தால் இயன்ற சொல்
2. வடமொழிக்கேயுரிய சிறப்பான எழுத்தால் இயன்ற சொல்

இவற்றுள் முதல்வகைச் சொற்களைச் செய்யுளில் பயன்படுத்தலாம். இரண்டாம் வகையைச் சார்ந்த சொற்களைச் செய்யுட்கண் பயன்படுத்தலாகா. வடமொழிக்கே உரிய சிறப்பான எழுத்துக்கள் சிதைந்து (தத்பவமாக) வந்தாலும் ஏற்றுக் கொள்ளலாம்.

கடன் சொற்களை ஏற்று நம் மொழியின் ஒலியமைப்புக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துச் சொற்களை மொழியில் உருவாக்கிக் கொள்ளலாம்.

**2.3.1 ஆக்கச் சொற்கள்**

தொல்காப்பியர் ஆக்கச் சொற்கள் உருவாக்கம் குறித்து சூத்திரங்கள் ஏதும் படைக்கவில்லை. ஆயினும் அவர்தம் மொழியில் ஏராளமான ஆக்கச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆக்கச் சொற்கள் தனிச்சொற்களிலிருந்து வேறுபட்டவை. வினை, உடம்பு, ஞாயிறு, திங்கள், காலம் போன்றவை தனிச்சொற்கள். தனிச்சொற்களில் எவ்வித ஒட்டும் இல்லாமல் காணப்படும். ஆக்கச் சொற்களில் தனிச்சொல்லும், ஒட்டும் சேர்ந்து காணப்படும்.

தொல்காப்பியர் பயன்படுத்தும் ஆக்கச் சொற்களுக்குச் சில எடுத்துக்காட்டுக்கள்:

| | |
|---|---|
| சிற-ப்பு | (கிளவி. 56) |
| உறு-ப்பு | (கிளவி. 56) |
| அடி-மை | (கிளவி. 56) |
| குடி-மை | (கிளவி. 56) |
| ஆண்-மை | (கிளவி. 56) |
| விரவு-தல் | (கிளவி. 43) |
| செல்-அவு | (கிளவி. 28) |
| வரு-அவு | (கிளவி. 28) |
| இசை-த்தல் | (கிளவி. 28) |
| தொகு + ஐ | (தொகை) |

இலக்கணக் கலைச்சொற்களை ஆசிரியர் பல இடங்களில் இம்முறையில் உருவாக்கியுள்ளார்.

**2.3.2 மாற்றம்** (Conversion)

வினையைப் பெயராகவோ, பெயரை வினையாகவோ எவ்வித ஒட்டும் சேர்க்கப்படாமலே உருவாக்க முடியும். இத்தகைய சொல்லுருவாக்க முறை குறித்து மேலே 'மாற்றம்' என்ற தலைப்பில் விவரித்தோம். தொல்காப்பியர் ஏராளமான சொற் களை இவ்வகையில் உருவாக்கியுள்ளார்.

விளி-விளி

உயிர்-உயிர்(த்தல்)

சொல்-சொல்

விளி என்பது வேற்றுமைப் பெயரையும் குறிக்கும். விளித்தலாகிய வினையையும் குறிக்கும்.

இவ்வகையிலும் கலைச்சொற்கள் உருவாக்கலாம் என்பது தொல்காப்பியர் காட்டும் நெறியாகும்.

### 2.4 தொகைச் சொற்கள் உருவாக்கம்

மொழியின்கண் காணப்படும் இரு சொற்களைச் சேர்த்து தொகைச் சொற்கள் உருவாக்கிக் கொள்ள தொல்காப்பிய எச்சவியல் சூத்திரங்கள் நமக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

**ஆறுவகையான தொகைச் சொற்கள்**

1. வேற்றுமைத் தொகை
2. உவமத்தொகை
3. வினைத்தொகை
4. பண்புத்தொகை
5. உம்மைத் தொகை
6. அன்மொழித் தொகை

- தொகைச் சொற்களில் உருபுகள்/சொற்கள் மறைந்துவிடும்.
- வேற்றுமை உருபும், உவம உருபும், உம் என்னும் உருபும், வினைச்சொல் ஈறும், பண்பு உணர்த்தும் ஈறும் மறைந்துவரும்.
- தொகைச் சொற்கள் வழியாகப் புதிய சொற்கள் உருவாக்கிக் கொள்ளலாம்.
- தொல்காப்பிய இலக்கணக் கலைச்சொற்களில் தொகையாக்கம் (compounding) குறித்து அறிந்துகொள்ளலாம்.

### 2.4.1 கலைச்சொற்கள்-தொகைச் சொற்கள்

| | |
|---|---|
| *தரவிறக்கம்-தரவினை இறக்குதல்* | *(இரண்டாம் வேற்றுமைத் தொகை)* |
| *பணித்தாள்-பணிக்குத் தாள்* | *(நான்காம் வேற்றுமைத் தொகை)* |
| *திரைக் காப்பு-திரையது காப்பு* | *(ஆறாம் வேற்றுமைத் தொகை)* |
| *மடிக்கணினி-மடியின் மீது கணினி* | *(ஏழாம் வேற்றுமைத் தொகை)* |
| *நிகழ்படம்* | *(வினைத்தொகை)* |
| *மென்பொருள்* | *(பண்புத் தொகை)* |
| *விரிதாள்* | *(வினைத் தொகை)* |
| *சுட்டெலி* | *(அன்மொழித் தொகை)* |

கலைச்சொற்களில் வரும் தொகைச் சொற்களை இவ்வாறு ஆராய்ந்து பார்த்தால் தொகையாக்கத்தின் பெருமையினையும் பயன் அளவையும் மதிப்பிட முடியும்.

III

### 3. கலைச்சொற்கள் உருவாக்கக் கோட்பாடுகள்

"தமிழில் கலைச்சொல் கீழ்க்காணும் இரண்டு முறைகளில் உருவாக்கப்படுகின்றது. அவை 1.சொல்லாட்சி (adoption), 2. சொல்லாக்கம் (coinage) என்பன (இராம.சுந்தரம், 2009).

சொல்லாட்சியின் கீழ்

1. பழஞ்சொற்களை எடுத்தாளுதல்
2. சொற்பொருள் விரிவு
3. கிளைமொழி/இனமொழி வழக்கை எடுத்தாளுதல்
4. மரபுசார் தொழில் சொற்களை எடுத்தாளுதல்
5. பிறமொழிச் சொற்களை கடன் வாங்குதல் (பேராசிரியர் இராம.சுந்தரம்)

மேற்கண்ட வழிமுறைகளை அறிஞர் வா.செ. குழந்தைசாமி அவர்களும் எடுத்துக்காட்டியுள்ளார்.

- பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சொற்களை இன்றைய தேவைக்கேற்பப் பொருள் கொண்டு பயன்படுத்துதல்.

  சான்று : pilot - வலவன், Aeroplane - வானஊர்தி
- தற்கால இலக்கியங்களிலிருந்து சொற்களைப் பயன்படுத்துதல்
- பேச்சு மொழியிலிருந்து தகுந்த சொற்களைப் பன்படுத்துதல்

  Temple Trustee - கோயில் முறைக்காரர்

  Memory storage - நினைவுக் கிடங்கு

  Small pox - அம்மை, வைசூரி
- பிறமொழித் துறைச் சொற்களை மொழி பெயர்த்தல்

  photograph - ஒளிப்படம்

  photosynthesis - ஒளிச்சேர்க்கை
- புதுச் சொற்களைப் படைத்தல்

  molecule - மூலக்கூறு

  gas - வளியம்
- உலக வழக்கை அப்படியே ஏற்றுக் கொள்ளல்

  x-ray - x- கதிர்


  (வா.செ.குழந்தைசாமி, 2006)

### 3. முடிவுரை

மேற்கண்ட கலைச்சொல்லாக்கக் கோட்பாடுகளையும் தொல்காப்பியரின் சொல்லுருவாக்கக் கோட்பாடுகளையும் ஒப்பிட்டுக் காணும்போதும் தொல்காப்பியர் குறிப்பிடும் வடசொல் ஆக்கமும், தொகையாக்கமும் பிறவும் கலைச்சொல்லாக்கத்தில் பெரும் பங்கு வகிக்கின்றன.

**பார்வை நூல்கள்**


1. சுந்தரம், இராம., தமிழ் வளர்க்கும் அறிவியல், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், (2009).
2. குழந்தைசாமி, வா.செ., அறிவியல்தமிழ், பாரதி பதிப்பகம், சென்னை-17 (ஏழாம் பதிப்பு 2006).
3. தொல்காப்பியம் சொல்லதிகாரம்-நச்சினார்க்கினியம், கழக வெளியீடு.



# காந்திஜிக்கு டால்ஸ்டாய் எழுதிய கடிதங்கள்

## தமிழில்: வெ.ஜீவானந்தம்

*யாஸ்னாயா போல்யானா*
*மே-08-1910*

அன்பு நண்பரே,

நான் தங்களது கடிதத்தையும், இந்திய சுயராஜ்யம் நூலையும் பெற்றேன்.

அதை நான் மிகுந்த ஆர்வத்துடன் படித்தேன். அதில் நீங்கள் எழுப்பியுள்ள அமைதி வழி எதிர்ப்பு பற்றிய கேள்விகள் மிக முக்கியமானவை. இந்தியாவுக்கு மட்டுமல்ல, மனிதகுலம் முழுமைக்கும் தேவை யானவை.

தங்களுடைய முந்திய கடிதங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் J.தாசின் தங்கள் வாழ்க்கை வரலாறு நூல் கண்டேன். மிகுந்த ஆழத் துடனும், கவனத்துடனும் படித்தேன். அது எனக்குத் தங்களைப் பற்றிய புரிதலை அதிகம் தந்தது.

இப்போது எனது உடல்நிலை சரியில்லை. எனவே தங்கள் நூல் பற்றி விரிவாக எழுதுவதைத் தவிர்க்கிறேன். அவற்றை நான் பாராட்டுகிறேன். என் உடல்நிலை சரியான பின் விரிவாக எழுதுகிறேன்.

தங்கள் நண்பனும் சகோதரனுமான
**டால்ஸ்டாய்**

## கடிதம் 2

*செப்-7-1910*

இனிய நண்பரே,

தங்களது இந்தியன் ஒப்பீனியன் இதழின் பிரதி கிடைக்கப் பெற்றேன். அதில் எதிர்ப்பின்மை பற்றி எழுதியுள்ளது பெரு மகிழ்ச்சி தருகிறது. அந்தக் கட்டுரையை வாசித்தபின் என்னுள் எழும் உணர்வு களை எழுத நினைத்தேன்.

நான் அதிகமான அளவே வாழ்கிறேன். இப் போது மரணத்தை எதிர்கொள்பவனாக உள்ளேன். எனவே என்னை வழிநடத்தும் வலிமைமிக்க கருத்துக் களை எழுதுவது மிக முக்கியமானதெனக் கருது கிறேன். எதிர்ப்பின்மை என்பது பொய்யான கருத்தாக்கத்தால் அன்பு எனும் ஒழுக்கம் கொள்ளுதல் என்று கருதப்படுகிறது. அன்பு என்பது தொடர்பின் வெளிப்பாடு. பிற உயிரினங்களுடன் ஒருமை காண்பது. இத்தகைய உணர்வு புனித நடவடிக்கை களிலிருந்து நம்மை விடுதலை செய்கிறது. அன்பு உன்னதமானது. அது மனித வாழ்வின் தனித்துவம் மிக்க சட்டம். இதை ஒவ்வொருவரின் ஆன்மாவின் ஆழத்திலும் புரிந்துகொள்ள முடியும். புனிதமான செயல்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள் வதே அன்பு. மனித வாழ்வின் உன்னதமான புனித விதி. இது குழந்தைகளிடம் முழுமையாக உள்ளதைக் காண்கிறோம். மனிதர்கள் உலகின் போலித்தனங்களில் வீழ்ந்து மூழ்கும் காலம் வரை இவ்விதமே உள்ளனர்.

அன்பின் விதியை உலக தத்துவங்கள் அனைத்தும் கூறுகின்றன. இது உலகின் பல மொழிகளில் கூறப் பட்டிருந்த போதும், கிறிஸ்து இதைத் தெளிவாகக் கூறுகிறார். அன்பின் விதி சட்டம், தீர்க்கதரிசிகள் என இருவராலும் கூறப்பட்டிருந்த போதும், சட்டம் பல விதி மாற்றங்கள், திசைதிருப்பலுக்குட்பட்டது எனத் தெளிவாகக் கூறுகிறார். உலக ஈடுபாட்டுடன் வாழ்வோர்க்கு இந்தச் சட்டத்தின் வளைவுகள் மிக ஆபத்தான விளைவுகளை உண்டாக்குகிறது என்பதை நேரடியாகச் சுட்டிக் காட்டுகிறது என்றார் ஏசு. அதை நியாயப்படுத்த அவர்கள் வன்முறையை ஏற்கின்றனர். அறைக்கு அறை என்பதை அவர் சுட்டிக்காட்டினார். நம்மிடமிருந்து எடுக்கப்பட்டன வற்றை அதே வன்முறையும் திரும்ப எடுப்பதை நியாயப்படுத்தினர். அனைத்து சிந்தனை உள்ள மனிதரைப் போலவும், கிறிஸ்துவும் அறிவார், வன்முறை அன்புக்கு ஈடாக முடியாது என்பதையும், அதுவே வாழ்வின் அடித்தள உண்மை என்பதையும் அறிவார். வன்முறையை ஒருமுறை அனுமதித்து விட்டால், அன்பு தன் தன்மையை இழந்துவிடும். அன்பின் விதி பொருளற்றதாகப் பின் மாறிவிடும். வெளித் தோற்றத்தில் அற்புதமானதாகத் தெரியும் கிறிஸ்துவ நாகரிகம், இத்தகைய வினோதமான முரண்பாடு கொண்ட தவறான புரிதலிலும், முரண் பாட்டிலும் சில வேளைகளில் தெரிந்தும், பல வேளைகளில் அறியாமலும் விழுந்து விடுகிறது.

எதிர்ப்பு என்பது அன்பினால் ஏற்றுக்கொள்ளப் பட்டால், போதும், பின் அன்புக்கு அங்கு இடமின்றிப் போய்விடும். விதிகளின் படியும் அன்பு வாழ்வது இயலாததாகி விடும். பின் வன்முறையே சட்டமாகி விடும். வலிமையே நியாயமானதாகிவிடும். இவ்வாறுதான் 19 ஆம் நூற்றாண்டு கிறிஸ்துவம் இருந்தது. உண்மையில் பல கால கட்டங்களில் மக்கள் வன்முறையையே சமூகத்தை முறைப்படுத்தப் பயன்படுமென நம்பினர். கிறிஸ்துவ லட்சியமும், பிறநாடுகளின் இடையேயான வேறுபாடுகளும் இதில் தான் காணப்படுகிறது. கிறிஸ்துவத்தில் அன்பின் விதி பிற மதங்களை விடவும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்துவர்கள் அவ்விதி களைப் பணிவுடன் ஏற்க வேண்டும். அதே வேளையில் அது வன்முறையை அனுமதித்த போதும், அதன் மீது தான் தன் வாழ்வு முழுவதையும் உருவாக்கியது. எனவே, கிறிஸ்துவர்கள் வாழ்வு அவர்களது தொழிலுக்கும், வாழ்வுக்கும் முரண்பட்டதாக உள்ளது. அன்பையே வாழ்வின் விதி என்றும், மறுபுறம் வன்முறை வாழ்வில் தவிர்க்க முடியாதது என்றும், அரசு சட்டம், ராணுவம் ஆகியவற்றில் அனுமதித்து, மதிக்கப்பட்டது. இந்த முரண்பாடு கிறிஸ்துவ உலகின் உள்ளேயே நிகழ்ந்தது. அதன் உச்சத்தை இன்று காண்கிறோம்.

நாம் எந்த ஒழுங்குமுறைகளையும் அனுசரிக்க வில்லை, மத, அற வழிகளில் வாழ்க்கையை அமைக்கவில்லை, சட்டமும், வன்முறையும் வரியும் தான் நம்மை ஓட்டுகின்றன என்பதை நம் வாழ்வில் காண்கிறோம். சட்டம், ராணுவம், போலீஸ் போன்றவை ஒழிக்கப்பட்ட சமூகமே சரியான மாற்றாக இருக்க முடியும்.

இந்த வசந்த காலத்தில் மாஸ்கோ பள்ளியில் நடந்த மதத் தேர்வில், பிஷப், இளம் பெண்களிடம் கூறிய பத்துக் கட்டளைகளில் ஆறாவது "நாம் கொலை செய்யாதிருப்போமாக" என்பது. இது ஏற்புடையதா என்று கேட்ட போது, கொலை புனித நூல்களால் எப்போதும் தடை செய்யப்பட்டுள்ளது. இது எல்லா இடங்களிலும் நடக்கிறதா? இதற்கு ஓர் இளம் பெண் எழுந்து, "இல்லை. எப்போதும் இல்லை. போரில் கொலை அனுமதிக்கப்படுகிறது. குற்றவாளிகள் சட்டப்படிக் கொலை செய்யப்படு கின்றனர்" என்றார். மற்றொரு பெண்ணிடமும் அதே கேள்வி கேட்கப்பட்டது. "கொலை செய்வது குற்றமா?" அவள் உறுதியுடன் "ஆம், குற்றமே" என்றார். கொலை பழைய ஏற்பாட்டிலும், ஏசுவின் வாசகத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது. நமது அண்டையாருக்குப் பாவம் இழைப்பதும் குற்றம் எனப்பட்டுள்ளது. இத்தனை பேச்சுத் திறத்தாலும் பிஷப் தோற்கடிக்கப்பட்டார். அந்த உண்மையான அறவழியைக் கூறிய இளம் பெண்கள் வென்றனர்.

நாம் விமானப் பயணம் போன்ற புதிய கண்டு பிடிப்புகளைப் பற்றியும், சிக்கலான அரசு உறவுகள் பற்றியும், பல அமைப்புகள், கலைகள் பற்றி விவாதிக்கிறோம். ஆனால் அந்த இளம் பெண் உறுதியுடன் கூறியதைத் துணிவுடன் விவாதிக்கத் தயாராக இல்லை. இத்தகைய மௌனம் கோழைத் தனமானது. ஏனெனில் கிறிஸ்துவ உலகின் ஒவ்வொரு நபரும் இவ்விதமே சிந்திக்கிறார். அந்தப் பெண் போல மேம்போக்காகச் சிந்திக்கின்றனர். சோசலிசம், கம்யூனிசம், காட்டுமிராண்டித்தனம், விடுதலைப் படை என குற்றக் குழுக்கள் நீள்கின்றன. வேலை யின்மை வளர்கிறது. கேவலமான ஆடம்பரம் பணக் காரர்களால் வெட்கமின்றிக் காட்டப்படுகிறது. ஏழை களின் துயர வாழ்க்கை தொடர்கிறது. தற்கொலை களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இவையாவும் நமது மனதின் உள் முரண்பாடுகளின் வெளிப்பாடே. இவற்றிற்குத் தீர்வு காண முடியாது. இவற்றை அன்பால் மட்டுமே சரிசெய்ய முடியும். அனைத்து வன்முறைகளையும் கைவிடுவதே தீர்வு. திரான்ஸ் வாலில் தங்களது சேவை, மிகவும் அடிப்படையான தேவை. எனினும் அடிப்படை உண்மையை உணர்த்தும் மிக முக்கியப் பணி அது. கனமான செயல்முறை விளக்கம் அது, அதை உலகமே பகிர்ந்து கொள்ள வேண்டும். இதைக் கிறிஸ்துவர்கள் மட்டுமல்ல. உலக மக்கள் அனைவருமே பின்பற்ற வேண்டியது.

ருஷ்யாவிலும் இத்தகைய அகிம்சை அமைப்பு வளர்ந்து வருகிறது, ராணுவ அதிகரிப்பை எதிர்க்கிறது, என்பதை அறிய நீங்கள் மகிழ்ச்சி கொள்வீர்கள். நம்முடன் பங்கு பெறுபவர் எண்ணிக்கை எவ்வளவு குறைவு, ராணுவப் பணியை மறுப்பவர் எத்தனை பேர் என்பதல்ல பெரியது. இவை "நமது நியாய மான நிலையை, கடவுள் நம்முடன் உள்ளார் மனித வலிமையை விடக் கடவுளின் வலிமை பெரியது" என்பதையே உணர்த்துகின்றன.

கிறிஸ்துவர்களிடையே எத்தனை குழப்பமிருந்த போதும், எத்தனை குறைவாகப் புரிந்துகொள்ளப் பட்ட போதும், ராணுவத்தின் கொலைகள் அதிகரித்தே வருகிறது. இந்த முரண்பாடு மிக விரைவில் அப்பட்டமாகத் தெரியவரும். இதன் விளைவாக அரசு அதிகாரத்தை, வன்முறைகளை விடுவதா, ராணுவத்தை முற்றாகக் கலைப்பதா, அனைத்து வகை வன்முறைகளையும் கைவிடுவதா, அதிகாரத்தைக் காக்க நடக்கும் வன்முறைக் கொலைகளை மறுப்பதா, அல்லது கிறிஸ்துவ மதத்தையே கைவிடுவதா என்பதை முடிவு செய்தாக வேண்டிய சூழல் உருவாகி வருகிறது. இதனை உலகின் அனைத்து அரசுகளும், பிரிட்டிஷ், ருஷ்ய அரசுகளும் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. பழமை வாதம் அரசுகள் மீது மேலாதிக்கம் செலுத்தலாம். தங்கள் கடிதத்தில் உள்ளது போலவே ருஷ்யாவிலும் அரசுக்கு எதிரான இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம்.


எவ்வகையில் வன்முறை, ஆபத்து வருகிறது என்பதையும், அதை எப்படித் தடுப்பது என்பதையும் அரசு நன்கு அறியும். ஆனால் தமது பேராசையைக் காத்துக் கொள்ளவும், தமது நலன்களைக் காத்துக் கொள்ளவும், தமது இருப்பைக் காத்துக் கொள்ளவும் முயல்கின்றன.

என் உன்னத மரியாதையுடன்,

**லியோ டால்ஸ்டாய்**

# அக்கினிக் கவிதைத் தொகுப்பு

## பொன்னீலன்




**காடுறையும் பெருவளரி**

அகிலா கிருஷ்ணமூர்த்தி

***வெளியீடு: முடிவிலி***

₹ 75/-

**நி**லா வாசம் என உலகெலாம் தழுவும் தாய்மை வாசத்தை எழுதிய அகிலா, இப்போது 'காடுறையும் பெருவளரி' என்னும் பெயரில் ஒரு கவிதை நூலைத் தமிழுக்குத் தந்துள்ளார். வளரி என்பது வனவேடரிடம் இருக்கும் ஒரு வேட்டைக்கருவி. குறி தவறாமல் வேட்டையைத் தாக்கும் கருவி. எறிந்தவரிடமே திரும்பி வரும் அன்புக் கருவி.

அகிலாவின் இந்தக் கவிதைக் கருவி எதைத் தாக்குகிறது? வாசித்தால் தெளிவு தரும். கவிதை என்பது தீக்குச்சி முனையில் திரண்டு நிற்கும் நெருப்பு என்னும் அகிலா. அதன் ஒளி என்னவாக இருக்க வேண்டும் என்பதைக் கவிஞரின் அனுபவ வெளி தீர்மனிக்கும் என்கிறார்.

தன்னையே இப்படி சொல்கிறார் கவிஞர்.

நிசப்த நிர்வாணத்தின்
இரகசியக் காடுறையும்
பெரும் வனம் நான்.

ஆழமான வரிகள். தன்னை ஒரு வனமாகச் சொல்கிறார் கவிஞர். பெரு வனமாகச் சொல்கிறார். காடுறையும் வனமாகச் சொல்கிறார். நிசப்த நிர்வாணத்தின் காடுறை வனமாகச் சொல்கிறார்.

தாலிச்சரடைக் கண்களில்
ஒற்றிக் கொண்டு முத்தமிடவில்லைதான்
என்ன நினைத்தாயோ
சுக்கு நூறாய் முற்றத்தில்
கிடந்தது புத்தகம்
திரும்பிய பக்கமெல்லாம்
கழுத்தறுபட்ட கதாபாத்திரங்களின் விசும்பல்
குரல்வளையை ஓங்கி மிதித்தாய்
வீடெங்கும் இரத்தக் கவிச்சி
கொலையெனப்படுவது யாதெனில்.....?

*அபூர்வ வேகம் கொண்ட வரிகள் இவை. கொலையெனப்படுவது யாதெனில் என அவர் முடித்திருக்கும் பாங்கு ஆழமானது. அந்த வரியே கவிதை முழுமை மீதும் ஒளி தெளிக்கிறது. ஒளி பட்ட புள்ளிகளெல்லாம் புதுப் புது வண்ணத்தில் மின்னுகின்றன.*

வேட்டை அய்யனோ, ஜக்கம்மாவோ,
யார் தொட்டும் அசையாச் சூலம்
தெருமுக்கில் தப்பட்டை
திமிறத் திமிற ஒலித்த கணம்
மிடுக்கிட்டு ஆடியது
மிளர மிளர ஆடியது
சூலமல்ல
முப்பாட்டன்.

*இன்றைய அடைமழை அரசியலை கடுமையாக தாக்கும் நாலுவரிகளைத் தந்திருக்கிறார் அகிலா.*

தெருவெங்கும் மிதக்கின்றன
ஊசிப்போன பிரியாணிப் பொட்டலங்களும்
ஊறிய ரூபாய் நோட்டுகளும்

கள்ளக் கர்ஜனையில்
காடுகள் அதிர்வதில்லை.

*அகிலா எந்தச் சூழலில் எழுதினாரோ, யாழ்ப்பாண யுத்த சூழலை எனக்குக் காட்டுகிறது இந்த கவிதை.*

அவனுக்கான ஆயிரம் கனவுகளை
பதுங்கு குழியில் வைத்திருக்கிறேன்
இதழ்கள் குவிக்கிற போதெல்லாம்
என் தலைக்குமேல்
கழுகுகள் வட்டமிடுகின்றன....
அப்பன் ஆத்தாளின் உருவச் சிதைவு
'வேண்டாம் விட்டு விடு'

அரற்றிய காதலை
பின்னங்காலால் உதைத்தபடி
யுத்த வேகப் புரவியைப்போல்
நெருங்கிக் கொண்டிருக்கிறேன்.
தொடைகள் தளர்த்தி கைகள் ஊன்றி...
.........
........
ஒற்றைக் கனவுதான்
ஓராயிரம் முறை வருகிறது.

*காதலின் முன்னும் பின்னும் ஆண்கள் நடந்து கொள்ளும் முறையை காட்டமாக சொல்கிறது கவிதை.*

காதலியின் பெயரை
சரடுபோல் இணைத்து
தெய்வீகக் காதலென
செருக்கோடு சலம்புகிறவன்
கணவன் ஆனதே
காதலன் பெயர் பொருட்டு என்பதை
வந்தவள் பிதற்றப் போவதில்லை
பெயர் உணர்த்தும் தெய்வீகம்!

அக்கினிக் குஞ்சு போல் மூன்று வரிகள்
திருநீரா? அஸ்தியா?
வறட்டியின் தேர்வல்ல
அதன் வாழ்க்கை.
வறட்டி யார்? பெண் தானே!

*இன்றைய அரசியலின் நடைமுறை லட்சியத்தைக் கேலி செய்கிறது ஒரு கவிதை.*

பள்ளிகளை மூடுங்கள்
படித்து என்னவாகப் போகிறோம்!
மருத்துவமனைகளை மூடுங்கள்
பிழைத்து என்னவாகப் போகிறோம்!
மதுக்கூடங்களை திறவுங்கள்
தெளிந்து என்னவாகப் போகிறோம்!

*இதே ஒரு கவிதை நெருப்பை கக்கும் எரிமலையாக...*

வெடிக்கத் திமிரும் வெப்பக் குழப்பை
கக்கக் காத்திருக்கும் எரிமலையாக
பிறப்புத்துளையை அடைத்துக் கொண்டு
உக்கிரத்தில் வெடித்துச்
சிதற வேண்டும் ஒருநாள்.
வக்கிர ஓநாய்களின் பலாத்கார
கிறுக்குப் புத்தியைக் கோர்த்தபடி.

*மொத்தத்தில் இது கவிதையல்ல. கனல் கக்கும் நெருப்புக் குழப்பு. அக்கினி குஞ்சொன்று கண்டேன் என ஒரு புதுமைப் பெண்ணைச் சென்னை கடற் கரையில் பார்த்துப் பாடினார் பாரதி. அந்த பாரதியின் புதுமைப் பெண்ணாக ஆணாதிக்கத்தின் மீது நெருப்புக் குழம்பை வீசுகிறார் அகிலா.*

*மொத்தத்தில் இது ஒரு அக்கினிக் கவிதைத் தொகுப்பு.*

# சுப்ரபாரதிமணியனின் படைப்புக்கலை

ராம பாண்டி



சுப்ரபாரதிமணியன் படைப்புகள் பற்றிய ஒரு பன்னாட்டு கருத்தரங்கம் திருநெல்வேலி மணோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ஏப்ரல் முதல் தேதியில் நடைபெற்றது.

இந்த கருத்தரங்கின் தொடக்கத்தில் சுப்ரபாரதி மணியனின் படைப்புக்கலை என்ற நூலை இலங் கையைச் சேர்ந்த பேராசிரியர் பிரசாந்தன் வெளியிட டெல்லி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியை உமா தேவி பெற்றுக்கொண்டார்

இலங்கை பிரசாந்தன் பேசுகையில் சுப்ரபாரதி மணியனின் எழுத்துக்களை இந்த நூற்றாண்டின் சிறந்த சிறுகதைகள் என்ற தொகுப்பில் இடம்பெற்ற ‘ஸ்தலங்கள்’ என்ற கதை மூலம் நான் அறிந்து கொண்டேன். பிறகு அவரின் படைப்புகளை வாசிப்பதை துவங்கியிருக்கிறேன். அவருடைய கவிதை தொகுப்புகளில் இடம் பெறும் அனுபவங்கள் வித்தியாசமானவை அவ்வகையில் பங்கன் தரை பாதாளம் குறித்த அவரின் கவிதை என்னை மிகவும் பாதித்து இருக்கிறது. நான் சுமார் 18ஆண்டுகள் அவ்வப்போது பங்கரில் வாழ்ந்து இருக்கிறேன்.

இலங்கையின் போர்ச் சூழல் காரணமாக விமானங்களிலிருந்து செல் அடிக்கிற போது தரையில் இருக்கிற பாதாள அறைதான் பாதுகாப்பாக இருக்கும். அப்படி பாதுகாப்பாக இருக்கிறதிற்காக பாதாள அறைக்குள் சென்ற அனுபவம் எனக்கு உண்டு அப்படி ஒரு அனுபவத்தை ஒரு கவிதையில் சுப்ரபாரதிமணியன் பதிவு செய்கிறார். அந்த பாதாள அறையில் கடவுளும் சாத்தானும் சக மனிதனும் சந்தித்துக்கொண்ட சந்திப்பு பற்றி எல்லாம் சொல்கிறார், என்னைப் பொறுத்தஅளவில் நான் பாதாள அறையில் கடவுளைச் சந்திக்கவில்லை. சாத்தான்களை மட்டும் சந்தித்திருக்கிறேன். அப்படி ஒரு அனுபவத்தை உள்வாங்கிக்கொண்டு எழுதியிருப்பதில் சுப்ரபாரதிமணியன் மிக நுணுக்கமாக செயல்பட்டிருக்கிறார். அதேபோல நான் முன்னர் குறிப்பிட்ட அந்த ஸ்தலங்கள் சிறுகதையில் ஒரு பிரம்மச்சாரியின் மேன்சன் வாழ்க்கை நுணுக்கமாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது கிராமத்திலிருந்து நகரத்திற்கு இடம் பெயர்கிறார். இடம் பெயர்கிற அனுபவம்... நகரம் ஒரு இளைஞனை துரத்திக் கொண்டிருக்கும் அவன்... அந்த நகரத்திற்குள் இருந்து சிதைவுற்று வெளியே செல்ல ஆசைப்படுகிற அனுபவம்... சமையலின் வாசனை, ருசி... இதெல்லாம் மிகவும் நுணுக்கமாக அந்தச் சிறுகதையில் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த கதையைப் பற்றி நினைக்கிற போதெல்லாம் இலங்கையின் மகாகவி என்ற கவிஞரின் (சேரனின் தந்தை) ஒரு கவிதைதான் எனக்கு ஞாபகத்தில் வரும். நுணுக்கமான பார்வையும் சம காலத் தன்மையும் சுப்ரபாரதிமணியனின் படைப்புகளில் அடையாளங்களாக சொல்லலாம்

பேராசிரியை உமா தேவி டெல்லி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர் சுப்ரபாரதிமணியனின் படைப்புக்கலை நூலைப் பெற்றுக் கொண்டு பேசினார்: சுப்ரபாரதிமணியன் படைப்புகளில் பின் நவீனத்துவக் கூறுகள் நிரம்ப உள்ளன அவரின் கவிதை, கதைகளை ஆய்வு செய்யும்போது இந்த பின்நவீனத்துவக்கூறுகள் சிறப்பாக செயல்படுவதை கண்டேன்- அதை அவர் இயல்பாக கொண்டிருக்கிறார். மையம் தவிர்த்த விஷயம் முதல் மனிதர்கள் சிதறுண்ட உலகம், தொடர்ச்சியின்மை ஆகியவை பல கதைகளில் வெளிப்பட்டு நவீனத்துவத்தின் சரியான கூறுகளை காட்டுகின்றன. அதே சமயம் அவரின் படைப்புகளை குறிப்பாக சிறுகதைகளை நவீனத்துவ அம்சங்களைக் கொண்டு சாதாரணமாக ஆய்வு செய்யலாம். ஆனால் பின்நவீனத்துவ ஆய்வு முறையில் அவை சரியான கட்டுமானத்தில் வந்துள்ளன என்பதும் அவர் சமகால தத்துவார்த்த விஷயங்களில் மட்டுமல்லாமல் வடிவங்களிலும் அக்கறை கொண்டு இருப்பது தெரிகிறது

பின்னர் நடைபெற்ற கருத்தரங்க அமர்வுகளில் புதுவைப் பல்கலைக்கழகம் இணைப்பேராசிரியர் மு. கருணாநிதி, முனைவர் யார் சுசந்திரா, மேலூர் கலைக் கல்லூரி முனைவர் கணேஸ்வரி, கோயம்புத்தூர் ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி ஹிந்தி பேராசிரியர் முனைவர் இரா. ரமேஷ் குமார் ஆகியோரின் தலைமைகளில் நடைபெற்ற அமர்வுகளில் பல்வேறு கட்டுரைகள் வாசிக்கப்பட்டன

அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் பல்வேறு தமிழ் அறிஞர்களும் எழுத்தாளர்களும் கலந்து கொண்டார்கள். திருநெல்வேலி மணோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தமிழியற்புலத் தலைவர், பேராசிரியர் ராமசாமி பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுப்ரபாரதிமணியன் சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், திரைப்படங்கள் குறித்த கட்டுரைகள் என்று பல்வேறு பரிமாணங்களில் தொடர்ந்து நாற்பது ஆண்டுகளாய் எழுதிக்கொண்டிருப்பவர். தமிழனின் பல்வேறு அடையாளங்களை வெளிப்படுத்துகிற அவர் தமிழில் மூத்த படைப்பாளிகளில் ஒருவர். கல்விப்புலம் அவரின் படைப்புகளை எவ்வாறு உள்வாங்கிக் கொண்டு இருக்கிறது. எப்படி அதை கல்விப்புலம் எதிர்கொண்டிருக்கிறது என்பதனுடைய அத்தாட்சியாய் சுப்ரபாரதிமணியனின் படைப்புக்கலை என்ற தலைப்பில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் வெளிக்காட்டின. கல்விப்புலத்தில் ஒரு எழுத்தாளனின் பிரதிகளுக்கான எதிர்வினையாக, எதிர்மறையாக அவை இருந்தன. எழுத்தாளர்களின் அனுபவத் தரவுகளின் தொகுதியாக அவரின் படைப்புகள் அப்பிக் கொண்டு இருக்கிறது. நெடுநல் வாடை படைப்பு மதுரையைப் பற்றி பேசுவது போல திருப்பூர் நகரத்தின் பாதிப்புகளை அவரின் படைப்புகளில் காணலாம். அவர் எந்த அடையாளத்தை நோக்கி எந்த தேடலை நோக்கி சென்று கொண்டிருக்கிறார். அவர் அந்தப் படைப்புகளில் அலைந்து கொண்டிருக்கிறாரா, உள்ளிருந்து கொண்டிருக்கிறாரா என்பதை அந்த படைப்புகள் எல்லாம் சொல்கின்றன. அந்தப் படைப்புகள் குறித்து நானும் கட்டுரைகள் எழுதி இருக்கிறேன். ஆய்வு மாணவர்களுக்கும் ஆய்வு செய்ய சிபாரிசு செய்திருக்கிறேன். சுப்ரபாரதிமணியனின் படைப்புகள் தேடலும் அலைதலும் கொண்ட ஒரு மனிதனின் அனுபவங்களாக விரிந்திருக்கின்றன. கி. ராஜநாராயணன் அவர்களை படைப்பு ரீதியாக அணுகினால் அவர் கரிசல் பூமியில் முன்பு இருந்தவர். படைப்பில் இப்போது இருந்து கொண்டிருப்பவர். வண்ணநிலவன் 50 ஆண்டுகளாக திருநெல்வேலியில் இருந்தவர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலியில் வாழ்ந்தவர். இப்போதும் அதே திருநெல்வேலி

அனுபவங்களுடன் வாழ்ந்துகொண்டிருப்பவர். ஜோடி குரூஸ் நெய்தல் நிலத்தின் வாழ்க்கை அனுபவங்களில் வாழ்ந்தவர். இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர். ஆனால் சுப்ரபாரதிமணியனின் அனுபவங்களை, படைப்புகளை கவனிக்கிற போது அவர் எங்கே வாழ்கிறார் என்பது தெரியும். அவர் ஒரு காலத்தில் வாழ்ந்த ஹைதராபாத், செகந்திராபாத் நகரங்கள் ஆகட்டும், அதன்பின் வாழ்கிற திருப்பூர் நகரம் ஆகட்டும். இடையே அவர் பயணப்படுகிறார். பல ஊர்கள் ஆகட்டும் அந்த ஊர்களின் வாழ்க்கையை அந்த மனிதர்களின் வாழ்க்கை அனுபவங்களை சுப்ரபாரதிமணியன் தன் படைப்புகளில் கொண்டு வந்துவிடுகிறார். அதுபோல் தான் திருப்பூர் நகரத்தின் சாயம் அப்பிய நகர மனிதர்களை அவர் காட்டியிருக்கிறார். கிராமங்களில் இருந்து நகரத்துக்கு இடம் பெயர்ந்த பெண்களின் வாழ்க்கை எல்லாம் சொல்கிறார். உதிரி மனிதர்கள் சாதாரண தொழிலாளி, சாதாரண தொழிலாளிகள், விளிம்பு நிலை மக்களைப் பற்றி அதிகம் எழுதி இருக்கிறார். இந்த மனிதர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் சுப்ரபாரதிமணியன் அலைகிறார். ஏன் இந்த மனிதர்கள் அலைகிறார்கள்? வாழ்க்கையின் பல்வேறு சிக்கல்கள் அவர்களை அலைய வைக்கிறது அவர்களுடன் சுப்ரபாரதிமணியன் அலைந்து கொண்டிருக்கிறார். ஒரு படைப்பாளியின் அடையாளமாக அவர் அனுபவம் சார்ந்த படைப்பாளியாக தென்படுகிறார். அந்த வரிசையில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார். பேசிக்கொண்டிருக்காமல் வாழ்க்கையினூடே அலைந்து கொண்டிருக்கிறார். மனித அனுபவமாகவும் அதை பதிவு செய்வதாகவும் அவர் இருக்கிறார். டெல்லியில் இருந்த ஆதவனின் படைப்புகள் டெல்லி வாழ்க்கையோடு முடிந்து விட்டிருக்கிறது. பல சமயங்களில் தி.ஜானகிராமனின் படைப்புகள் அனுபவங்கள் தில்லியில் இன்று பெற்றிருக்கின்றன. நீல பத்மநாபன் அனுபவங்கள் திருவனந்தபுரத்தில் தொடங்கியிருக்கின்றன. அசோகமித்திரனின் எழுத்துக்கள் ஹைதராபாத்தில் பலவிதங்களில் இருக்கிறது. ஆனால் சுப்ரபாரதிமணியன் தான் வசிக்கிற வாழ்கிற ஊர்களில் இருக்கிற சக மனிதர்களின் வாழ்க்கையை கூர்ந்து கவனித்து அந்த அக்கறையுடன் வாழ்க்கையில் அதனை விரிவாக படைப்புகளில் பதிவு செய்திருக்கிறார் என்பது ஒரு முக்கியமான அம்சமாகும்.

புதுச்சேரி மானுடவியல் துறை புதுவைப் பல்கலைக்கழகம் பேராசிரியர் முனைவர் செல்லப் பெருமாள் இவ்வாறு பேசினார்:

சமூகவியல் நோயியல் நோக்கு என்பது மானுடவியல் பண்பாட்டுக்கு அடித்தளமாக இருக்கிறது. சமூக நோயியலில் சமூக சீர்கேடுகளை பார்க்கும் நுணுக்கமான பார்வை சுப்ரபாரதிமணியனின் படைப்புகளில் இருக்கிறது. நவீன வாழ்க்கை ஒரு சாதாரண மனிதனை எப்படி சீரழிக்கிறது அல்லது நவீன வாழ்க்கை மனிதன் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் என்ன என்பதைப் பற்றி தீவிரமாக அவர் படைப்புகளில் ஆய்வு செய்கிறார். இன்றைக்கு நமக்கு முன்னால் இருக்கிற கேள்வி பொருளாதார முன்னேற்றம், சுற்றுச்சூழல் பிரச்சனையா என்பது முக்கியமாக இருக்கிறது. அந்த விவாதங்களை தமிழில் துவக்கி வைத்த படைப்புகள் சுப்ரபாரதிமணியன் உடையவை. அவரின் படைப்புகளில் குடும்ப வாழ்க்கை, சேவல் கட்டு அம்சங்கள் தவிர மற்றவை அனைத்தும் இந்த சமூக நோயியல் நோக்கு கொண்டவை. குடும்ப கதைகள் மற்றும் சேவல்கட்டு கதைகளில் பண்பாட்டு ஏற்றத்தாழ்வை காட்டுகிறார். ஜாதி கட்டுமானம் இந்தியாவில் எப்படி இருக்கிறது என்பதையும் கிராம சூழலில் அந்த ஜாதி கட்டுமானம் தரும் கட்டுப்பாட்டையும் விளக்குகிறார். இவை ஒரு வகையில் பண்பாட்டுத் தளம் சார்ந்த பிரச்சினைகளாக இருக்கின்றன. இவை தவிர மற்ற எல்லாமே சமூக நோயியல் சார்ந்த கூறுகள் தான். இடப்பெயர்ச்சி எந்த வகையான மனிதர்களை சிதைத்து வழிகாட்டிக் கொண்டு இருக்கிறது என்பதை அவர் பல்வேறு படைப்புகளில் காட்டுகிறார். அது இந்தியாவிற்குள் ஆனாலும் இந்தியாவிற்கு வெளியே ஆனாலும்... வட இந்தியா ஆனாலும்... திருப்பூர் ஆனாலும் ஹைதராபாத் செகந்திராபாத் ஆனாலும்... மலேசிய ஆனாலும் என்று பல்வேறு தளங்களில் அவற்றை காட்டுகிறார். நவீன வாழ்க்கை தனிமனிதனுக்கு தரும் சிரமங்கள் நவநாகரீகம் தந்திருக்கிற வளர்ச்சிப் போக்கும் அடையாளம் சிதைத்த போக்கும் இவற்றினூடே தனிமனிதனின் வாழ்வுப் போராட்டமும் அவரின் படைப்புகளில் சிறப்பாக சொல்லப்பட்டிருக்கின்றன. சித்தாந்த பின்புலம் இருந்தாலும் அதன் வாடை எங்கும் இல்லை. அதற்கான விஷயங்கள் வலிந்து தெரிவதில்லை. அதிகார பீடங்களில் ஆட்சியாளர்களும் சமூகத்தில் பின்புலமாய் இருந்து கொண்டு கட்டமைக்கிற விஷயங்களைப் பற்றி இவரின் படைப்பை படங்கள் பேசுகின்றன இது தமிழில் மிக முக்கியமான கோணமாகவும் இருக்கிறது

விழாவில் நிறைவு விழாப் பேருரை ஆற்றினார் ஓவியர் சந்துரு அவர்கள். அவர் பேசும்போது இவ்வாறு குறிப்பிட்டார்:

ஒவ்வொரு மனிதனும் தனக்குள் பல மனிதர்களைக் கொண்டிருக்கிறான். அந்த மனம் பிளவுண்ட மனம் அவனை துரத்துகிறது. காட்டுக்குள்ளும் செல்லும்படி துரத்துகிறது. அங்கு சென்றபின் பல சமயங்களில் ஏற்படும் பசி அவனை ஊரை நோக்கி

விரட்டுகிறது பாதுகாப்பான சுவையை அவன் எண்ணுகிறான் அந்த சுவையால் காதல் பெருகும். பொழுது நீடிக்கும். காலம் கழியும். ஓவியம் வரைவதும், எழுதுவதும் கழுதை மேய்ப்பதும் ஒன்றுதான். அந்தந்த விஷயங்களில் இருக்கும் ஈடுபாடும் தான் முக்கியம். தொழில்முறை படைப்பாளிகள் வாழ்க்கையை வியாபாரத்திற்காக பயன்படுத்துகிறார்கள். ஆனால் படைப்பிலக்கிய வாதிகள் வாழ்க்கையை கூர்ந்து கவனித்து ஓவியம் போல் பதிவு செய்கிறார்கள். பூவின் அமைதிக்குள் இருக்கும் நிதானம் முக்கியமானது. அது தரும் வாசம் முக்கியமானது. அது காட்டும் சிவப்பு பச்சை என பல வர்ணங்கள் முக்கியமானவை. அவன் சக மனிதர்களுடன் கொள்ளும் உறவு முக்கியமானது. அவற்றுள் அவனின் உறவும் தேடலை நோக்கிய பயணமும் முக்கியமானது. அதிலும் இயற்கையை நோக்கிய பயணம் மானுட புதுமை. இங்கு நாம் பங்கு போட்டுக் கொள்கிறோம். வாழ்வதே கலை. அது ஏகாந்தமாக இருப்பது கலைத் தேடலாகும். சந்தோசமாக வைத்து இருப்பது கலை. கலை சிந்திக்கவும் செய்யும். சமாதி பழக்கமல்ல சர்வ பழக்கம் என்று வலியுறுத்தவும் செய்கிறது. அன்பை ஆத்மாவைப் பற்றி பேசிவிட்டு காசு கேட்காதே... ஞானமாய் வாழ் என்று வலியுறுத்துகிறது. சுப்ரபாரதி மணியன் இவற்றை வலியுறுத்துகிறார். அவரின் முதல் தொகுப்பான நான்கு பேரும் 15 கதைகளும் தொகுப்பில் நான் ஓவியங்கள் வரைந்து இருக்கிறேன். அவரின் கனவு இதழில் ஆரம்ப காலத்தில் ஓவியங்கள் வரைந்து இருக்கிறேன் அவற்றில் என் ஓவியங்கள் அட்டைப் படங்களாக வந்திருக்கின்றன. அவர் தொடர்ந்து சுற்றுச்சூழல் சார்ந்து இயங்கி வருகிறார். இயற்கையை தேடிய பயணம் அவை.

இந்த விழாவில் திருநெல்வேலி மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி சங்கரன்கோயில் கல்லூரியின் முதல்வர் முனைவர் குமரகுருபரன் வரவேற்புரை நிகழ்த்தினார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் முனைவர் ஞான ஸ்டீபன் வாழ்த்துரை வழங்கினார். கருத்தரங்க அறிமுக உரையை கருத்தரங்க உரிமை ஒருங்கிணைப்பாளரும் மனோன்மணியம் பல்கலை கழக உறுப்புக் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் ராம பாண்டி நிகழ்த்தினார். ஆய்வு மாணவர்களும் பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த பேராசிரியர்களும் கலந்து கொண்டு தங்கள் கட்டுரைகளை வாசித்தனர்.

இந்த கருத்தரங்கின் முக்கிய அம்சங்களாக சுப்ரபாரதிமணியன் படைப்புகள் பற்றிய விவாதங் களும் நாட்டுப்புறவியல் சார்ந்த பல்வேறு பேராசிரி யர்கள் நவீன இலக்கியத்தை அணுகியதும், கல்லூரி மாணவ மாணவிகள் படைப்புகளை எதிர்கொள்ளும் விதம் பற்றி தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டதும் முக்கியமான அம்சங்களாக கொள்ளலாம்.

படைப்புக்கலை கருத்தரங்க விழாவில் சுப்ரபாரதிமணியன் ஏற்புரை நிகழ்த்தினார்:

பின்நவீனத்துவத்தின் தாக்கம் தமிழில் தொண்ணூறுகளில் அதிகம் இருந்தது. சோவியத் வீழ்ச்சிக்குப்பின் சோசலிசத்தின் பலவீனத்திற்குப் பின் பின்நவீனத்துவம் உலக அளவில் அதிக தாக்கத்தை செய்தது. அந்த வகையில் பின் நவீனத் துவத்தின் கட்டுடைத்தலும் மையம் இல்லாததும் உதிரி மனிதர்களின் வாழ்க்கையும் என் படைப்பு களில் சாயத்திரை நாவல் முதல் கொண்டு வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் அதன் தாக்கத்தை செய்தது. திருப்பூர் நகரம் இன்றைக்கு பத்து லட்சத்திற்கும் மேலான மக்கள் வாழக்கூடிய நகரம். அந்த நகரத்தில் ஜனத்தொகையில் பாதிக்கு மேல் இடம் பெயர்ந்த தொழிலாளர்கள். அவர்களின் பிரச்சனைகளும் வாழ்வியலும் என்னை தொடர்ந்து பாதிக்க வைத்து படைப்புகளை வெளிப்படுத்தச் செய்கிறது. உலக மயமாக்கல் ஆனாலும் சரி உள்ளூர் வணிகம், ஜிஎஸ்டி வரி விதிப்பு ஆனாலும் சரி கார்ப்பரேட்டுகளின் சமூக பொறுப்புணர்வு ஆனாலும் சரி எல்லாமே நேரடி விளைவுகளை கொடுக்கிற வியாபார நகரமாக திருப்பூர் இருக்கிறது. அந்த வகையில் அந்த நகரத்தின் மக்களின் வாழ்வியலை பதிவு செய்வது முக்கிய கடமையாக இருக்கிறது. அப்படித்தான் சாயத்திரை முதற்கொண்டு என் நாவல்கள் மக்களின் வாழ் வியலைப் பதிவு செய்கிற வெளிப்பாட்டு சாதனங் களாக இருக்கின்றன. இந்த கருத்தரங்கில் சாயத்திரை நாவல் குறித்து அதிக அளவில் பேசப்பட்டது. கோமணம் போன்ற நாவல்களில் இருக்கும் நாத்திக பார்வையை மீறி ஒரு ஆன்மீக தளமும் வழக்கமான தென்படும் பொருள் இருப்பதை சிலர் சுட்டிக் காட்டினார்கள். நீர்த்துளி போன்ற நாவல்கள் சுற்றுச்சூழல் சார்ந்தது மட்டுமல்லாமல் இன்றைக்கு பாலியல் சார்ந்த விஷயங்களிலும் ஒற்றைப் பெற்றோர் முறையிலும் திருப்பூர் நகரத்தின் பாதிப்புகளை குறிப்பாக பெண்களின் வாழ்வியலை சொல்லும் படைப்புகளாக இருக்கின்றன. அந்த வகையில் மக்களுடன் இணைந்து அவருடைய வாழ்க்கையை கூர்ந்து பார்ப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத் திருக்கிறது. நான் இடதுசாரிதான் இடதுசாரி அழகியலை படைப்புகளில் கொண்டுவர முயன்றிருக் கிறேன். வறட்டுத்தனம் தவிர்த்த அழகியல் தன்மைக்கே முயன்றிருக்கிறேன். சமூகத்துடன், சமூகவியல் மனிதர் களுடன் அன்பும் பகிர்வும் தான் இந்த படைப்புகளின் ஆதாரமாக இருக்கிறது. ●

- கட்டுரை -

# திருக்குறளின் கருத்தியல் தாக்கம்:

## ரா.பி.சேதுப்பிள்ளையின் வழிவழி வள்ளுவர் நூலை முன்வைத்து

**ந.முருகேசபாண்டியன்**




**ச**ங்க காலத் தமிழரின் திணை சார்ந்த இனக்குழு வாழ்க்கை சிதலமாகி, சமயங்களின் ஆதிக்க அரசியல் மேலோங்கிய காலகட்டத்தில், அதற்கேற்ற வகையில் மனித உடல்களைத் தயாரிக்கும் நுண்ணரசியல் வலுவடைந்ததது. வீரமும், காதலும் முன்னிலைப் படுத்தப்பட்ட சூழலில் மாற்றம் ஏற்பட்டது. விண்ணுலகு பற்றிய கற்பிதத்துடன் புராணக் கதைகளும் அதியற்புத ஆற்றல்களும் பற்றிய பேச்சுகளை மக்களிடம் உருவாக்கிட சமயங்கள் முயன்றன. இனக்குழுத் தலைவன், குறுநில மன்னன் போன்றோரின் ஆளுகைக்குட்பட்டிருந்த நிலப் பரப்பானது, தமிழ் அடையாளத்துடன் விரிவடைந்து, வேந்தனின் ஆட்சியதிகாரம் பரவலானது. இத்தகு சூழலில் ஆள்வோரின் நலன்களுக்கேற்ற வகை யிலான விதிகளும் விலக்குகளும் உருவாக்கப் பட்டன. அறம், ஒழுங்கு என்ற பெயரில் மக்களிடம் வலியுறுத்தப்பட்ட நியதிகள் உருவாக்கத்தில் நீதி

அல்லது அறத்தை வலியுறுத்துவதற்காக எழுதப் பட்ட திருக்குறள் உள்ளிட்ட அறநூல்கள் தனித்துவ மானவை. ஜைன சமயக் கருத்துகளுக்கு முக்கியத் துவம் தந்து திருவள்ளுவரால் எழுதப்பட்ட அற நூலான திருக்குறள், காலந்தோறும் தமிழர் வாழ்க் கையில் செல்வாக்குச் செலுத்தி வருகிறது. திருக்குறளை இந்தியாவின் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்ற அரசியல் ஒருபுறமும், திருக்குறள் உலகப் பொதுமறை என்ற அரசியல் இன்னொருபுறமும் நிலவுகின்றன. இன்றைய உலகமயமாக்கல் கால கட்டத்தில் தமிழர் வாழ்க்கையின் அடையாளமாகக் கருதப்படுகிற திருக்குறள், அதற்குப் பின்னர் எழுதப்பட்ட பல்வேறு படைப்புகளில் கருத்தியல் ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. திருக்குறளின் சிறப்புக் குறித்து ஆராய்ந்திட்ட தமிழறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளை, அந்நூலின் கருத்துகள் சிலப்பதி காரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்ப ராமாயணம் போன்ற காப்பியங்களிலும், பாரதியார் பாடல்களிலும் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிந்துள்ளார். பிற இலக்கியப் படைப்புகளில் திருக்குறளின் தாக்கம் குறித்த சேதுப்பிள்ளையின் ஆழமான திறனாய்வுப் பார்வை அடங்கிய கட்டுரைகள், தொகுக்கப்பட்டு, வழிவழி வள்ளுவர்(1953) என்ற நூலில் இடம் பெற்றுள்ளன. அன்றைய காலகட்டத்தில் ஒப்பியல் நோக்கில் நோக்கில் இலக்கியத்தை ஆராய்வது வழக்கற்ற நிலையில், சேதுப்பிள்ளை, பரந்துபட்ட இலக்கிய அறிவுடன் இலக்கியப் பிரதிகளை ஒப்பிட்டு ஆராய்ந் திருப்பது, தனித்துவமானது.

ஓலைச்சுவடிகள் மூலம் பிரதியெடுக்கப்பட்டுத் தலைமுறைகள்தோறும் வாசிக்கப்பட்டுப் பாதுகாக்கப் பட்ட பண்டைய இலக்கியப் பிரதிகள், பெரிதும் மனனம் செய்யப்பட்டு வந்தன. கவிராயர் பரம் பரையில் வந்த புலவர் ஒருவர், சிலப்பதிகாரம் முழுவதையும் நினைவில் இருந்து சொல்லும் ஆற்றல்மிக்கவராக விளங்கினர். இத்தகு சூழலில் ஓலைச்சுவடிகள் மடங்கள், அரண்மனைகள், பணக் காரர்கள், புலவர் பரம்பரையினர் வீடுகளில் மட்டும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. ஓரளவு கல்வியறிவு பெற்றவரும் முன்னர் எழுதப்பட்ட படைப்புகளில் சிலவற்றை மட்டும்தான் அறிந்து வைத்திருப்பர். முந்தைய நூலின் கருத்து, அடுத்தத் தலைமுறை யினரால் எழுதப்படுகிற புதிய நூலில் இடம் பெறுகிறது எனில், அந்நூல் இலக்கிய வட்டாரத்தில் கவனம் பெற்றிருக்க வேண்டும். பண்டைத் தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில், சங்க இலக்கியப் படைப்புகளைவிடத் திருக்குறள் கருத்தியல்ரீதியில் இன்றுவரை பரவலாகக் கவனம் பெற்றிருக்கிறது. சராசரியான மனிதன் அன்றாட வாழக்கையில் பின்பற்ற வேண்டிய நெறிமுறை களைப் போதித்திடும் திருக்குறள், சமயம் சாராத தன்மையின் காரணமாகப் பரவலாகத் தமிழர்களிடம் தொடர்ந்து செல்வாக்குப் பெற்றுள்ளது. எனவேதான் சிலப்பதிகாரம் தொடங்கி இன்றளவும் திருக்குறள், இலக்கியப் படைப்புகளில் நுட்பமான முறையில் ஆளுகை செலுத்துகிறது. திருக்குறளின் கருத்துகள், காலந்தோறும் படைப்புகளில் பெற்றிருக்கும் செல்வாக்குக் குறித்த சேதுப்பிள்ளையின் ஆய்வுக் கருத்துகள் ஆய்விற்குரியன.

திருக்குறள், இதுவரை இன்பம், பொருள், அறம் என இருந்த தமிழர் வாழ்க்கைப் போக்கினை அறம், பொருள், இன்பம் என வரிசை மாற்றியமைத்தது, பருண்மையான அரசியல் பின்புலமுடையது. தமிழர்கள் எப்படி வாழ வேண்டுமென நியதிகளை வலியுறுத்திய திருவள்ளுவரின் நோக்கமானது, அடிப்படையில் ஆள்வோர், ஆளப்படுவோர் என இரு வேறு நிலைகளில் அமைந்திட்ட சமுதாயத்தின் நலன்களை முன்னிலைப்படுத்தியது. இதனால்தான் திருக்குறள் உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியப் படைப்புகள், பெரும்பாலும் பூமியில் புலன்கள் மூலம் பெறுகின்ற இன்பங்களை ஒதுக்கிவிட்டு, விண்ணுலகில் கிடைக்கவிருக்கிற வீடுபேறு குறித்த புனைவுகளைக் கட்டமைத்திட முயன்றன.

ஒரு நாட்டின் வளம் எவ்வாறு இருக்க வேண்டு மென விவரிக்க முயலுகிற திருவள்ளுவர், பிற நாடுகளில் இருந்து, போர், பஞ்சம் போன்ற காரணங் களினால் புலம்பெயர்ந்து வருகிற மக்களை ஆதரிக்கிற வளமுடையதாக இருக்க வேண்டும் என்கிறார்.

பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறைஒருங்கு நேர்வது நாடு

சோழ நாட்டின் வளத்தைச் சிறப்பிக்க முயன்ற இளங்கோவடிகள் காவிரிப்பூம்பட்டினம் பற்றிக் குறிப்பிடுவது பின்வருமாறு:

முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி

அலைகள் ஆர்ப்பாரிக்கிற கடல் அலைகள் சூழ்ந்த உலகத்து மக்கள் திரண்டு வந்தாலும், அயராது வழங்கத்தக்க வளமுடைய காவிரிப் பூம்பட்டினம் என்ற இளங்கோவடிகளின் விவரிப்பு, வள்ளுவரின் கருத்தைத் தழுவியது என்கிறார்

சேதுப்பிள்ளை. நாடு என்ற சொல்லினை முன் வைத்துத் திருவள்ளுவரும் இளங்கோவடிகளும் ஒத்திசைவது பற்றிய விளக்கம் ஏற்புடையது.

வள்ளுவரின் அரசியல் கருத்தியலில் நாட்டை யாள்கிற மன்னனுக்கும் அமைச்சருக்குமான உறவு எப்படி இருக்க வேண்டுமென்ற வரையறை முக்கிய மானது. மதிநலம், சொல்வன்மையுடன் சுயநலம் அற்றவராக அமைச்சர் இருப்பின் நாட்டுக்கு நன்மை உண்டு. இத்தகைய அமைச்சர், அரசன் தவறு செய்யும் போது, தடுத்துச் சொல்லத் தயங்கிட மாட்டார் என்ற நிலையை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**அறிகொன்று அறியான் எனினும் உறுதி**
**உழையிருந்தான் கூறல் கடன்**

வள்ளுவர் சிறப்பித்துக் குறிப்பிடுகிற அமைச்சர்கள், கோசல நாட்டையாண்ட தசரதனுடைய அவையில் இருந்தனர் என்ற கம்பரின் வரிகள் ஒப்பு நோக்கினுக் குரியன.

**தம்முயிர்க்கு உறுதி எண்ணார்**
**தலைமகன் வெகுண்ட போதும்**
**வெம்மைத் தாங்கி நீதி**
**விடாதுநின்று உரைக்கும் வீரர்**

**செம்மையின் திறம்பல் சொல்லாத்**
**தேற்றத்தார் தெரியும் காலம்**
**முமையும் உணர வல்லார்**
**ஒருமையே மொழியும் நீரார்**

கோசல நாட்டு அமைச்சர்கள் அரசனின் கருத்தை மறுத்துப் பேசினால், அவனது கோபத்திற்கு ஆளாக நேரிடுமே என்று அஞ்சாமல் உண்மையை எடுத்துரைக்கும் இயல்பினர் என்ற கம்பரின் கூற்று, வள்ளுவரின் வழிப்பட்டதாகும் என ஒப்பீட்டுள்ளார் சேதுப்பிள்ளை. மேலும் அமைச்சர்களால் கோசல நாட்டுக்குக் கிடைத்த நன்மைகளை தசரத மன்னனே மனதாரப் போற்றுகிறான்.

**உம்மையான் உடைமையின் உலகம் யாவையும்**
**செம்மையின் ஓம்பிநல் லறமும் செய்தனன்**

என்று அமைச்சர்களைப் பார்த்துத் தசரதன் கூறினான். அமைச்சர்கள் சொல்கிற மாறுபட்ட கருத்துகளை அறிவினால் ஆராய்கிற தன்மையினராக இருத்தல் வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

**செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்**
**கவிகைக்கீழ்த் தங்கும் உலகு**

திருக்குறள் குறிப்பிடுகிற பண்பு வாய்ந்த மன்னன் தசரதன் என்பது சேதுப்பிள்ளையின் கருத்து.

சீவக சிந்தாமணி காப்பியத்தில் அமைச்சரின் ஆலோசனையைப் புறக்கணித்த மன்னன், கட்டியங் காரனிடம் நாட்டை ஒப்படைக்க முடிவெடுக்கிறான். அப்பொழுது அமைச்சர்

**மூரித்தேன் தாரினாய் நீ முனியினும் உறுதி நோக்கிப்**
**பாரித்தென் தரும நுண்ணூல் வழக்குஅது ஆதல்கண்டே**

என்று பேசுகிறார். ''உனக்கு உறுதியான அறிவுரை சொல்வது என் கடமை என அற நூல் கூறுகிறது. என் கடமையை நிறைவேற்றி விட்டேன். இப் பொழுதே இந்நாட்டை விட்டுச் செல்கிறேன்'' என்ற அமைச்சரின் பேச்சின்மூலம் திருக்குறளைத் தரும நுண்ணூல் எனப் போற்றுகிறார் திருத்தக்கத்தேவர். மன்னன்-அமைச்சன் உறவு பற்றிய விவரிப்பில் கம்பரும் திருத்தக்கத்தேவரும் எங்ஙனம் திருவள்ளுவரின் கருத்தை வழிமொழிந்துள்ளர் என்ற சேதுப்பிள்ளையின் ஆய்வு நுட்பமானது.

மனித வாழ்க்கையின் நிலையாமையைப் பற்றிக் குறிப்பிடுகிற திருவள்ளுவரின் பார்வை நுட்பமானது.

**உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு**

சாவு-பிறப்பு என இரு எதிரிணைகளின் வழியாகக் கட்டமைக்கப்பட்டுள்ள உயிரினங்களின் இருத்தலைக் கேள்விக்குள்ளாக்கும் வள்ளுவரின் கருத்துப் பின்புலத்தில் திருத்தக்கத்தேவரும் கருத்துரைத்துள்ளார்.

**பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்**
**உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்**

என்ற சீவகசிந்தாமணியின் வரிகள், உறங்குதல், விழித்தல் என இரு சொற்கள்மூலம் மனித வாழ்க் கையின் சூட்சுமத்தை விளக்குகிறன. மரணம் பற்றிய திருத்தக்கத்தேவரின் கருத்திய உருவாக்கத்திற்குப் பின்புலமாகத் திருக்குறள் அமைந்துள்ளது எனச் சேதுப்பிள்ளை குறிப்பிடுகிறார்.

சங்க இலக்கியப் பிரதிகள், குடும்ப நிறுவனத் தினை வலியுறுத்துவதன் மூலம், நிலவுகிற சமூக அமைப்பினுக்குச் சார்பான போக்கை வலியுறுத்து கின்றன. பால் அடிப்படையில் பெண்ணின் இடத்தை வரையறுத்திட முயன்ற நிலையானது, வளர்ச்சியடைந்த சூழலைத் திருக்குறள் உள்ளிட்ட அறநூல்களில் கண்டறிய முடியும்.

பெண் பற்றிய கட்டமைப்பை உருவாக்கிய திருக்குறள் புனைந்துரைந்த நெறிகளின் வழியாகப் பெண் பற்றிய மதிப்பீடுகள், இன்றளவும் தமிழர் களிடையே நிலவுகின்றன.

பெண் பற்றிய பிம்ப உருவாக்கத்தில், பாலியல் ரீதியில் பெண்ணுடலைக் கொண்டாடுவது பற்றிய திருவள்ளுவரின் கருத்தானது, ஆண் மையவாத நோக்கில் அமைந்துள்ளது.

**கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்டொடிக் கண்ணே யுள**

பெண்ணுடல் தரும் இன்பம் என்ற ஆணின் வியப்பு, திருக்குறளில் இடம் பெற்றுள்ளது. வள்ளுவரின் கருத்தையொட்டி இளங்கோவடிகள் கோவலன், மாதவியின் உடலழகைப் போற்றுவதாகப் பாடியுள்ளார்.

**மாசுஅறு பொன்னே வலம்புரி முத்தே**
**காசுஅறு விரையே கரும்பே தேனே**

கண்ணகி பற்றிய கோவலனின் விவரிப்பு, குறளின் கருத்தை உள்வாங்கிகொண்டு இளங்கோவினால் எழுதப்பட்டுள்ளது என்று ஒப்பீட்டுள்ளார், சேதுப் பிள்ளை.

கோவலன், மாதவியின் மீதான ஈடுபாட்டினால் கண்ணகியைப் பிரிந்து வாழ்கிறான். அப்பொழுது மாதவி மகிழ்ச்சியடைந்தாள்; கண்ணகி துயருற்றாள். இந்நிலையைக் காட்சிப்படுத்துகிற இளங்கோ வடிகள் குறிப்பிடுகிற வரிகள் முக்கியமானவை.

**கூடினார் பால்நிலவாய் கூடார்பால் வெய்யதாய்க்**
**காவலன் வெண்குடைபோல் காட்டிற்றே கூடிய**
**மாதவிக்கும் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து**
**போதவிழ்க்கும் கங்குற் பொழுது**

வெண்ணிலா ஒளி சிந்துகிற வேளையில் போதாக இருந்த பூக்கள், கட்டவிழ்ந்து இதழ்களை விரிக்கிற அந்திப் பொழுதில் மாதவி இன்பத்தில் திளைத்தாள்; கண்ணகி துயரமுற்றாள். இயற்கையுடன் மனித உணர்வினைத் தொடர்புபடுத்திடும் காப்பியப் போக்கின் முன்னோடியாக பின்வரும் திருக்குறளின் வரிகள் அமைந்துள்ளன எனக் குறிப்பிடுகிறார் சேதுப்பிள்ளை.

**காலை அரும்பி பகலெல்லாம் போதாகி**
**மாலை மலரும்இந் நோய்**

பூ காலையில் அரும்பி, பொழுது செல்லச் செல்ல முதிர்ந்து மொட்டாகி, மாலையில் பூப்பது போலக் காதலும் மனித மனதில் வினையாற்றுகிறது என்ற வள்ளுவரின் நுட்பமான காதல் பற்றிய பார்வையானது, மாதவியின் காதல் வயப்பட்ட நிலையைச் சித்திரிக்கப் பயன்பட்டுள்ளது.

பெண்ணுக்குக் கற்பினை வலியுறுத்தும் போக்கில், அதுவே சிறந்த பெண்ணின் இலக்கணம் என நீதிநூல்கள் தொடர்ந்து வலியுறுத்துவதற்கு முன்னோடியாக விளங்குவது திருக்குறள் ஆகும். திருவள்ளுவர் கட்டமைக்க விரும்பிய பெண், தமிழ்ப் பண்பாட்டில் முக்கிய இடம் வகிக்கிறாள்.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை**

வள்ளுவரின் மொழியைப் பின்பற்றுகிற இளங்கோவடிகள், கண்ணகியின் கற்பினைப் போற்றிடப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாளைத்**
**தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால் தெய்வமாய்**
**மண்ணக மாதர்க்கு அணியாய் கண்ணகி**
**விண்ணக மாந்தர்க்கு விருந்து**

திருக்குறளில் இடம்பெற்றுள்ள வரியை அப்படியே சிலப்பதிகாரத்தில் எடுத்தாண்டுள்ளார் இளங்கோவடிகள்.

மணிமேகலைக் காப்பியத்தில் சீத்தலைச் சாத்தனாரின் பெண்ணின் கற்பு பற்றிய விளக்கம் குறிப்பிடத்தக்கது.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்**
**பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்**

குறளின் முதலடியை அப்படியே எடுத்தாண்டுள்ள சாத்தானார், திருவள்ளுவரைப் பொய்யில் புலவன் என்றும் அவர் அருளியது பொருளுரையே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'இளங்கோவடிகளும் சீத்தலைச் சாத்தானாரும் பெண்களின் கற்பு பற்றிய விளக்கத்தில் திருவள்ளுவரின் திருக்குறளின் வழிப்பட்ட போக்கினைச் சார்ந்திருப்பதைச் சான்றுகளுடன் எடுத்துரைப்பது, சேதுப் பிள்ளையின் விமர்சன அணுகுமுறைக்கு எடுத்துக் காட்டு.

கட்டுப்பாடும் காவலும் மகளிர் கற்பினைக் காக்குமென்ற மரபு வழிப்பட்ட சிந்தனைப் போக்கை மறுக்கிறார் திருவள்ளுவர்.

**சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை**

பெண்ணின் மனம்தான் முக்கியம் என்ற வள்ளுவரின் வழியில் பாரதியார் குறிப்பிட்டுள்ள பாடலைச் சேதுப்பிள்ளை ஒப்பிட்டு எடுத்துரைக்கிறார்:

**வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போம்என்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்.**

*பெண்ணுக்குக் காவல் என்பது பொருளற்றது என்ற நிலைப்பாட்டில் வள்ளுவரும் பாரதியாரும் ஒன்றுபடுகின்றனர்.*

*நுண்மான் நுழைபுலம்மிக்க திருவள்ளுவர் சமூக விமர்சனத்தின்போது, அறச்சீற்றத்துடன் வரிகளைப் புனைந்துரைத்துள்ளார். ஒருவன், பிறரிடம் இரந்து பிச்சையெடுத்துத்தான் வாழ வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், இந்தச் சீரழிந்த உலகத்தைப் படைத்தவன் சிதைந்து ஒழிக என கோபமடைகிற திருவள்ளுவர் ஒருவகையில் சாபம் விடுத்துள்ளார்.*

**இரந்தும் உயிர்வாழ்தல்வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்**

*வள்ளுவரின் சீற்றத்தை வழிமொழிகின்ற பாரதியார்*

**தனியொருவனுக்கு உணவில்லை எனில்**
**சகத்தினை அழித்திடு வோம்**

*எனச் சாபம் விடுகிறார். வயிற்றுக்கு உணவு இல்லாத கொடுமையான நிலையில் மனிதர்கள் படுகிற துயரத்தைக் கண்டு கோபமடைகிற பாரதியாரின் பாடலில் வள்ளுவரின் குறள் செல்வாக்குச் செலுத்து வதைப் பொருத்தமுடன் சேதுப்பிள்ளை குறிப்பிட்டு உள்ளார்.*

*இருபதாம் நூற்றாண்டின் புதுமைக் கவிஞர் எனப் போற்றப்படுகிற பாரதியார், பண்டைத் தமிழிலக்கிய வாசிப்புக் காரணமாக மரபின் தாக்கத்துடன் பாடல்கள் பாடியுள்ளார் என்பதற்கு ஆதாரமாக ஒப்பீடுகளைச் சேதுப்பிள்ளை தந்துள்ளார். அறம் வேண்டும் என வலியுறுத்துகிற வள்ளுவர், இல்லறம், துறவறம் ஆகியவற்றின் பெருமைகளை எடுத்துரைத்துள்ளார். மேலும் அவர் துறவு மேற் கொள்கிறவர் அதற்குரிய நெறியில் வாழ்ந்திடாமல், போலித்துறவைப் பின்பற்றுவதைக் கடிந்துரைத்து உள்ளார்.*

**மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தது ஒழித்து விடின்**

*துறவு என்பது ஒழுக்கம் சார்ந்த நிலையில் சடையை வளர்த்தலும் தலையை மழித்தலும் தேவையற்றவை என்ற வள்ளுவரின் கருத்தில் பாரதிக்கு உடன்பாடு உண்டு. பாரதியாரின் துறவு பற்றிய வரிகள்:*

**காவிதுணி வேண்டா கற்றைச்சடைவேண்டா**
**பாவித்தல் போதும் பரமனிலை எய்துதற்கே**

*என்ற பாரதியாரின் வரிகள் துறவிகளின் உடல், உடை பற்றிய விமர்சனத்தைப் பாரதியின் வழியில், முன் வைத்துள்ளது.*

*அறத்தை உடனடியாகச் செய்ய வேண்டுமென வலியுறுத்துகிற வள்ளுவரின் வாக்கு குறிப்பிடத் தக்கது.*

**அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை**

*இவ்வுலகில் உடலும் பொருளும் நிலையற்றவை; அழியாத செல்வம் அறம் மட்டும்தான் என்ற வள்ளுவரின் மொழியை இளங்கோவடிகள், மாடலன் மூலம் உரைத்துள்ளார்.*


**நாளைச் செய்குவம் அறமெனில் இன்றே**
**கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்**
**இதுவென வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்**
**முதுநீர் உலகில் முழுவதும் இல்லை**

*அறத்தை விரைந்து உடனடியாகச் செய்ய வேண்டியதன் அவசியத்தை விளக்குகிற இளங்கோவடி களுக்கு வள்ளுவரின் குறள் வரிகள் உதவியிருப்பதை நுணுக்கமாகக் கண்டறிந்து சேதுப்பிள்ளை குறிப்பிட்டு உள்ளார்.*

*இன்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை வகுத்துத் தந்திட்ட திருவள்ளுவரின் குறள் கருத்துகள், காலந் தோறும் புலவர்களின் புதிய படைப்புகளில் தாக்கம் செலுத்தியிருப்பதை ரா.பி.சேதுப்பிள்ளை கண்டறிந் திருப்பது. அவருடைய பரந்துபட்ட வாசிப்பினுக்குச் சான்றாக உள்ளது. இன்னொருபுறம் மூலநூலின் கருத்துகள், அடைந்திருக்கும் வளர்ச்சி நிலையை அறிந்திட சேதுப்பிள்ளை வகுத்துள்ள வழி, முக்கிய மானது. நவீனச் செவ்வியல் கவிஞரான பாரதி யாரிடமும் வள்ளுவரின் தாக்கம் கணிசமாக உள்ளது என்ற விமர்சனப் பார்வை, குறிப்பிடத்தக்கது. ஐம்பதுகளில் ஒப்பிலக்கியம் என்ற கருத்தியல் தமிழில் அறிமுகமாயிராத சூழலில், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், பாரதியார் பாடல்கள் ஆகிய படைப்புகளுடன் திருக்குறளின் கருத்துக்களை ஒப்பீட்டு எழுதியுள்ள ரா.பி.சேதுப் பிள்ளையின் தனித்துவமான ஆய்வுப் போக்கு, இன்னும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியதாகும். அவ்வகையில் ரா.பி.சேதுப்பிள்ளை, திருக்குறள் பற்றிய ஆய்வில் தனித்து விளங்குகிறார்.*

**சான்றாதாரம்**

*சேதுப்பிள்ளை, ரா.பி., வழிவழி வள்ளுவர். சென்னை: பழனியப்பா பிரதர்ஸ், 1953.*



காவ்யாவின்
புதிய வெளியீடுகள்
காவ்யா
சி.ஆர்.ரவீந்திரன் நாவல்களில் பெண்ணின் நிலை
முனைவர் ஜெயா வேணுகோபால்
சி.ஆர்.ரவீந்திரன் பொன்னீலன்
படைப்புகள் வழி மக்கள் வாழ்வியல் போராட்டம்
முனைவர் ஜெயா வேணுகோபால்
கூடல்
மதுரை மகளிரின் தாலாட்டு ஒப்பாரிப் பாடல்கள்
முளைப்பாரிச் சடங்கு
பன்முகக் கோட்பாட்டு ஆய்வு
முத்தொள்ளாயிரம்
பதிப்பு வரலாறு
[1905-2018]
அ. செல்வராசு
முத்தொள்ளாயிரம்
உரை வரலாறு
[1943-2018]
அ. செல்வராசு
செம்மொழித் தமிழ் நூல்கள் பதிப்புரைத் தொகுப்பு
பதிப்பாசிரியர்
கா.அய்யப்பன்
முத்துபழனி
ராதிகா சாந்தவனம்
ஸ்டெம் செல்
ஓர் உயிர்மீட்புச் செல்
சிற்பியின் படைப்புத்தளம்
சமூக உறவுக் கட்டமைப்பில்
வீரக்குமாரசாமி கோயில்
[வெள்ள கோயில்]
வேடர்களும் வேடங்களும்
16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024
பேச : 044 - 23726882 , 9840480232
மின்னஞ்சல் : kaavyabooks@gmail.com இணையம் : www.kaavyaa.com

- கட்டுரை -

# குழந்தை இலக்கியத்தின் மொழி

**சுகுமாரன்**



குழந்தை இலக்கியத்தின் மொழி எது? குழந்தையின் மொழியே குழந்தை இலக்கியத்தின் மொழி. கொஞ்சம் என்பதற்கான குழந்தையின் மொழி 'த்தூண்டு'. குழந்தைகள் பயன்படுத்தும் அல்லது புரிந்துகொள்ளும் சொற்களைக் கொண்டதே குழந்தைகளின் மொழி. அதுவே குழந்தை இலக்கியத்தின் மொழி.

குழந்தை மொழி தெரிந்தவர்களே குழந்தை இலக்கியம் படைக்க முடியும். பெரியவர்களுக்கு எழுதும்போது அந்த பிரச்சினை இல்லை. குழந்தைகள் எழுதினால் அது குழந்தை மொழியில் தான் இருக்கும். பெரியவர்கள் குழந்தைகளுக்கு எழுதும் போது அவர்கள் குழந்தைகள் மொழியை கையாள வேண்டியிருக்கிறது. அவர்கள் கூடு விட்டு கூடு பாய வேண்டியிருக்கிறது. அதனால்தான் குழந்தைகளுக்கு எழுதுவது எளிதல்ல என்று கூறுகிறார்கள்.

எண்ணங்களையும் உணர்வுகளையும் மொழியில் முழுமையாக சொல்லிவிட முடியாது என்று கூறுகின்ற நிலையில் குழந்தையின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் மொழியைத் தெரிவித்துக் கொள்ளாமல் எழுதுவது எப்படி?

மொழியினால் உருவாக்கப்படும் சூழலில்தான் குழந்தை வாழ்கிறது, வளர்கிறது என்பதால் குழந்தையின் உலகை மொழிதான் வடிவமைக்கிறது. ஆதலால் குழந்தையின் உலகோடு உறவாடும் போதே குழந்தையின் மொழியைக் கற்றுக் கொள்ள முடிகிறது.

குழந்தை இலக்கியத்தில் அனுபவமிக்க எழுத்தாளர் கவிஞர் செல்ல கணபதி அவர்களும் 'குழந்தை எழுத்தாளர் ஆவது எப்படி?' என்ற கட்டுரையில் 'குழந்தைகளோடு பழகினால் அவர்கள் மொழி வசப்படும்' என்றே கூறுகிறார்.

குழந்தை இலக்கியத்தின் மொழி பற்றி பல்வேறு கருத்தோட்டங்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் குழந்தை இலக்கியத்தின் மொழி இவ்வாறு இருக்கின்றன என்று விவாதிக்கின்றன.

தமிழில் பொது கல்வி முறையால் ஒரு பொது மொழி உருவாகியிருக்கிறது. ஆங்கிலம், வடமொழி, உருது ஆசிய மொழிகளின் சொற்கள் கலந்தே

இப்பொது மொழி இருக்கிறது. ஆகையால் மொழிக் கலப்பு என்பது பிரச்சினையா? என்று கேட்கிறவர்கள் இருக்கிறார்கள்.

ஆங்கிலத்தை தமிழ்ச் சொற்களில் எழுதுகிற வர்கள் இருக்கிறார்கள். நேரடியாக ஆங்கிலத்தையே கலந்து கவிஞர் லெமன் 'மஹா குறும்பு' செய்திருக் கிறார், அந்த பாடல் இது:

'MONKEY WEDDING MONKEY WEDDING மகிழ்ந்து பாருங்க.

மங்கேஷ் வீட்டுக் காலண்டர் முன் வந்து கூடுங்க!

MON MON எல்லாம் KEY KEY சேர்ந்து WEDDING ஆச்சுங்க!

MONKEY WEDDING MONKEY WEDDING மாதம் தோறுங்க!

மங்கேஷ் வீட்டு காலண்டரை வந்து பாருங்க!

'பிற மொழி கலக்காத தமிழ்நடையில் பாடல் களையும் கதைகளையும் எழுத வேண்டும். தனித் தமிழ் மொழியின் சிறப்பை வளர்க்க வேண்டும்' என்று அதே கட்டுரையில் கவிஞர் செல்ல கணபதி வலியுறுத்தி உள்ளார்.

மொழிக் கலப்பினால் குழந்தைகளுக்கு சொற் களஞ்சியம் உருவாகுவது பாதிக்கும். ஆங்கிலத்தில் தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்த அனுமதியில்லை. Dog Says 'லொள்' என்று சொல்ல முடியாது. BOW என்றே சொல்ல வேண்டியிருக்கிறது என்று கவிஞர் வெற்றிச் செழியன் வாதிடுவதில் அர்த்தமிருக்கிறது.

தனித்தமிழில் பாட்டு எழுதி அதற்கு தமிழ் இசையும் அமைத்துள்ளார் 'தமிழிசைத் தென்றல்' அரும்பியன் அவர்கள்.

**'உதிர்மா வேண்டும் உதிர்மா வேண்டும்**
**உதிர்மா வேண்டுமம்மா!**
**உள்ளம் களிக்க உடனே சிரிக்க**
**உதிர்மா வேண்டுமம்மா!**
**துளிமா வேண்டும் துளிமா வேண்டும்**
**துளிமா வேண்டுமம்மா!**
**துள்ளித் திரிந்து துயரை மறந்திடத்**
**துளிமா வேண்டுமம்மா!'**

அரும்பியனின் மேற்கண்ட பாடலில் வரும் தூய தமிழ்ச் சொற்கள் உதிர்மா என்பதற்கு பகோடா என்பது பொருள், துளிமா என்பதற்கு காராபூந்தி என்பது பொருள். மேலும் வரும் சொற்களான நெளிமா என்பதற்கு அல்வா, அரிமா என்பதற்கு சிங்கம், ஊரி என்பதற்கு கார் என்பது பொருள். தூய தமிழ்ச் சொற்களை மூத்தோர் துணையுடனே குழந்தைகள் புரிந்து கொள்ள முடியும்.

சாதி, மதம், இனம், நிலம் இவற்றின் தாக்கத் தோடு தான் மொழி உள்ளது. இத்தாக்கமே வட்டார மொழி ஏற்படக் காரணம். ஓர் இலக்கியம் வட்டார மொழியிலேயே உயிர்ப்புடன் வெளிப்படுகிறது. குழந்தை இலக்கியத்தில் மட்டும் அது வேறாகவா இருக்கப் போகிறது? என்ற கருத்தோட்டமும் உள்ளது.

வட்டார மொழியே குழந்தையின் வாழ்க்கை மொழியாக இருக்கிறது. செயற்கையான வாக்கிய கட்டமைப்பும் சொல்லாட்சிகளும் வாழ்க்கை மொழியான வட்டார மொழியில் கிடையாது.

குழந்தை இலக்கியத்தில் தாலாட்டுப் பாடல் களும், நாடோடிப் பாடல்களும், கதைகளும் மொழிப் புலமைப் பெற்றவர்களிடமிருந்து பிறக்க வில்லை. பெரும்பான்மையான குழந்தை எழுத்தாளர் களுக்கு வட்டார மொழி தெரியாது. அவர்கள் வேரற்று இருக்கிறார்கள். அதனாலேயே நாடோடிப் பாடல்களுக்கும், கதைகளுக்கும் ஈடான படைப்புகள் இப்போது உருவாகவில்லை.

வட்டார மணத்துடன் கவிஞர் ம.லெ. தங்கப்பாவின் 'சோளக் கொல்லை பொம்மை', 'தொடர் வண்டி' பாடல்களும் கி. ராஜநாராயணனின் 'பிஞ்சுகள்' என்ற நாவலும் உள்ளன. இப்படைப்பு களில் மொழி இயல்பாக, வேடிக்கையாக, விளை யாட்டாக இருக்கிறது. இம்மொழியே குழந்தை களுக்கு நெருக்கமானது.

குடும்ப மொழியே குழந்தையின் மொழியாக இருக்கிறது. ஆகையால் பேச்சு வழக்கில் படைப்புகள் அமைவது சிறப்பானது என்ற கருத்தும் உள்ளது. பேச்சு மொழி, மொழியைச் சிதைத்து விடும் என்று எதிர்ப்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால் நிறைய மழலைப் பாடல்கள் பேச்சு மொழியிலே அமைந்து நீள்ளன.

**'குயிலு ஒண்ணு கூவுது**
**மயிலு ஒண்ணு ஆடுது**
**முட்டிப் பார்க்கும் கண்ணுல**
**முயலு ஒண்ணு தாவுது'**

எனும் மேகலா செழியனின் பாடல் பேச்சு மொழியில் அமைந்துள்ள சிறப்பான பாடல்,

குழந்தை இலக்கியத்திற்கான மொழியைத் தீர்மானிக்கும் அடிப்படைகளில் முக்கியமானது குழந்தைகளின் வயது பிரிவுகளாகும்.

3 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு 3000 சொற்கள் வரை தெரிந்திருக்கும் என்று மொழி அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர்களை மயக்குவது என்னமோ ஓசையின்பம் ஏற்படுத்தும் சொற்களே குழந்தைகளின் மனம் சந்தத்திற்கு கட்டுப்பட்டது.

**'சலக்குச் சலக்குச் சலக்குச் சலக்குச்**
**சலங்கை சத்தமாம்'**

என்று தொடங்கும் கவிஞர் செல்ல கணபதியின் பாடல் ஓசையின்பத்தைத் தருகிறது.

**'மாமி சுட்ட பிட்டு**
**மடியில் வாங்கிக் கட்டு**
**சீனி சர்க்கரை இட்டு**
**சிறிது நெய்யும் சொட்டு**
**உண்டு ஏப்பம் விட்டு**
**ஓடி வா நீ பட்டு'**

எனும் மயிலை சிவ முத்துவின் பாடல் சந்த சொற்களுக்கு நல்ல எடுத்துக்காட்டு, புரட்சிக் கவிஞரின் குழந்தைப் பாடல்கள் ஈற்றடி சந்தத்திற்கு பெயர் பெற்றது.

6 முதல் 8 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு மொழியும் அறிவும் வளர வேண்டியுள்ளது. அவற்றை வளர்க்கும் விதமாக குழந்தை இலக்கியத்தின் மொழி அமைய வேண்டும். இவ்வயதினர் 6000 சொற்கள் வரை அறிந்திருப்பார்கள்.

9 முதல் 11 வயது குழந்தைகளுக்கான மொழி அவர்களின் கற்பனை, சிந்தனையைத் தூண்டுவதாக அமைய வேண்டும்.

**'ஊருக்கெல்லாம் ஒரு விளக்காம்**
**உயரக் காணும் தெரு விளக்காம்**
**யாரும் ஏற்றி வைக்கவில்லை**
**அழகு நிலா, அதே பார்!**
**அழகு நிலா, அதோ பார்!'**

எனும் அழ. வள்ளியப்பாவின் பாடல் குழந்தைகளின் கற்பனை ஆற்றலைத் தூண்டும் மொழியில் அமைந்து உள்ளது.

12 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகளிடம் படைப்புத் திறன்கள் வளரும். அவர்களுக்கான படைப்பும் படைப்பின் மொழியும் படைப்பாற்றலைத் தூண்டும் விதமாக அமைய வேண்டும். இவ் வயதினருக்கான குழந்தை இலக்கிய மொழியில் புதிய சொற்கள் இருக்க வேண்டும். 'ஒவ்வொரு பாட்டாலும் குழந்தை இரண்டோர் அருஞ்சொற்களேனும் அறிந்து கொள்ளாராயின் அப்பாட்டினால் ஏற்படும் பயன்தான் என்ன என்று கேட்கிறேன்' என்பது பாவேந்தர் பாரதிதாசனின் கேள்வியாகும்.

குழந்தை இலக்கியத்தின் மொழி இயல்பாகவே எளிமை, இனிமை, தெளிவு ஆகிய முப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். பாடல் என்றால் பண்புகளின் வரிசை இனிமை, எளிமை, தெளிவு என்று மாறும். கதை என்றால் எளிமை, இனிமை தெளிவு என்று மாறும். கட்டுரை என்றால் தெளிவு, எளிமை, இனிமை என்று மாறும்.

குழந்தை இலக்கியத்தின் மொழி இறுகியதாக இருக்கக் கூடாது. அது நெகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். பாடலில் அது இசை மொழியாக இருக்க வேண்டும்.

கதை, கட்டுரை போன்ற உரைநடையில் எளிய சொற்கள், சிறிய சொற்றொடர், குறுகிய வாக்கியங்களுடன் இருக்க வேண்டும்.

மருது எழுதியிருக்கிற 'திருவள்ளுவர் தாத்தா' என்ற சிறுகதையில் வரும் ஒரு வாக்கியம் இது. 'உனக்கு விருப்பமில்லாத ஒன்றை உனக்குத் துன்பம் தருகின்ற ஒன்றைச் செய்கிற ஒருவரை நீ தண்டிக்க வேண்டுமென்று சொன்னால் அவர் தான் செய்வது தவறு என்று உணர்ந்து கொள்ளும்படி அவருக்குத் திருப்பி நன்மையைச் செய்து விடு' என்று அந்தக் குறள் குறிப்பிடுவதாக விளக்கம் அளித்தார்.

ஒரு பத்தி போலிருக்கும் ஒரு வாக்கியத்தை எந்த குழந்தை படித்து புரிந்து கொள்ள முடியும்? அதுவும் கதையில்!

கதையின் நடை கலகலப்பாக அல்லவா, இருக்க வேண்டும்.

'மந்திர அடுப்பு' என்ற தி.ஜ.ர. வின் சிறுகதையைப் பாருங்கள்.

'ஒரு ராஜா அரண்மனையில் ஒரு மந்திர அடுப்பு இருந்தது. ராணி அதில்தான் சமையல் செய்வாள்.

**அடுப்பே டும் டும்**
**சமைத்து வை.**
**அரசர் விருந்து**
**படைத்து வா.**

இந்த பாட்டை ராணி பாடினால் போதும். உடனே அடுப்பு சமைத்து விடும்.


'மந்திர அடுப்பு' கதையின் வெற்றியை அதன் மொழிதான் சாதித்திருக்கிறது. க. உதயசங்கரின் 'மாயக் கண்ணாடி' தொகுப்பிலுள்ள கதைகளும் கலகலப்பான மொழியில் எழுதப்பட்டுள்ளன.

குழந்தை இலக்கியத்தில் மொழிபெயர்ப்புக்கான மொழியும் சிக்கலாக இருக்கக் கூடாது. மூலத்தின் தன்மை மாறாமலும் அதே நேரத்தில் அந்நியத் தன்மை மிகுந்து விடாமலும் மொழி அமைய வேண்டும்.

'வேண்டுமடா சொல்லின்பம் மந்திரம் போலே' என்பார் மகாகவி பாரதி,

குழந்தை இலக்கியத்தின் மொழி குழந்தைகளுக்கு இன்பம் தருவதாக அமைய வேண்டும் என்று கூற விரும்புகிறேன். ●

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் அரசியல் நூல்கள்





**மோடியின் ஆட்சி ஒரு விமர்சனப் பார்வை**
டாக்டர் சித்தன கௌட பட்டீல்
முரளிதரா
எம். சத்தியானந்த்
₹ 30.00





**மதமா? அரசியலா?**
தா.பாண்டியன்
₹ 45.00





**இந்துத்துவாவா இந்திய சுயராஜ்யமா?**
யு.ஆர்.அனந்தமூர்த்தி
தமிழில்: டாக்டர் வெ.ஜீவானந்தம்
₹ 65.00




**பீகாரிலிருந்து திகார் வரை**
கன்னையா குமார்
₹ 110/-





**கார்ல் மார்க்ஸ் வாழ்வும் பணியும்**
தா.பாண்டியன்
₹ 140/-




**லெனின் என்னும் மனிதர்**
தொமாஸ் க்ரொவ்ஸ்
தமிழாக்கம் எஸ்.வி.ராஜதுரை
₹ 155/-

# தமிழ் 'வேர்ச் சொல்' அறிஞர் சுவாமி ஞானப்பிரகாசர்

பி.தயாளன்



"தமிழே யுலகத் தாய்மொழியென்று
பறையடித் தோதிய பன்மொழிப் புலவன்
சொல்லாராய்ச்சியும் தொல்லா ராய்ச்சியும்
வல்லவன் 'பைபிள்' வழியே நடப்போன்
மலையுப தேசமே கலையெனக் கொண்ட
ஞானப் பிரகாச நாவலன் இலங்கை
என்றும் போற்றும் எழிலார் வித்தகச்
செல்வனைத் தமிழர் சிந்தித்து நிதம்
புரிக தமிழ்ப்பணி பொலிக நல்லறிவே"

என சுவாமி ஞானப்பிரகாசரை கவியோகி சுத்தானந்த பாரதியார் பாராட்டி புகழ்ந்து கவிதை பாடியுள்ளார்.

தமிழ் மொழிக்கும், கிறிஸ்துவ சமயத்திற்கும் ஈடில்லாச் செவை புரிந்தவர். கிறிஸ்வத்துடன் தமிழியும் வளர்த்தார். தமிழ் அவரால் வளர்ந்தது, சிறப்புற்றது, புதுப்பொலிவுற்றது.

சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ் ஆராய்ச்சியிலும், வரலாற்று ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு உழைத்தார். அறிவும், ஆற்றலும், சிந்தனைத் தெளிவும் அவரது ஆராய்ச்சியில் மிளிர்வதை அறிஞர் உணருவர்.

சுவாமி ஞானப்பிரகாசர், வரலாறு, அரசியல், மானிடவியல், சமூகவியல், எழுத்துமுறை, சொல்லொற்றுமை, இடப்பெயர்கள், சமய வரலாறு, சமய வழிபாடுகள், பழக்க வழக்கங்கள் முதலிய வற்றினை அடிப்படையாகக் கொண்டு தமது ஆராய்ச்சியினை மேற்கொண்டார்.

சுவாமி ஞானப்பிரகாசர், மொழியின் வரம்பாக மட்டுமே இருந்த இலக்கண உலகை ஆராய்ச்சி உலகாக மாற்றியமைத்தவர்.

மண்ணோடு மண்ணாகப் புதையுண்டு கிடந்த திராவிட நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் என அனைத்தையும் தமது ஆய்வு நூல்கள் மூலம் அகிலத்துக்கு வெளிப்படுத்தியவர் சுவாமி ஞானப் பிரகாசர்.

கத்தோலிக்க தேவாலயங்களில் தமிழில் செபம் செய்தல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட போது, செபங்களை தமிழில் மொழிபெயர்த்து அளித்தவர் சுவாமிஞானப்பிரகாசர்.

சுவாமி ஞானப்பிரகாசர் ஈழத்தில் யாழ்ப்பாணத்துக்கு அருகில் உள்ள மானிப்பாய் என்னும் ஊரில் சுவாமி நாதப்பிள்ளை-தங்கமுத்து வாழ்வினை யருக்கு 30.08.1875 அன்று மகனாகப் பறிந்தார். பெற்றோர் சூட்டிய பெயர் வைத்தியலிங்கம், இவரது தந்தை, இவர் குழந்தையாக இருக்கும் போது திடீரென்று இறந்து விட்டார். இவரது தாய் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்த தம்பிமுத்துப்பிள்ளையை மறுமணம் செய்து கொண்டார். இவரும் கத்தோலிக்க சமயத்தைத் தழுவி ஞானஸ்தானம் பெற்று 'ஞானப் பிரகாசர்' எனப் பெயர் சூட்டப்பட்டார்.

அச்சுவேலியில் சூசையப்பர் திண்ணைப் பள்ளியில் கல்வி பயின்றார். இவருடையே வளர்ப்புத் தந்தையான தம்பிமுத்துப்பிள்ளையிடம் தமிழ்ச் செய்யுள், தமிழக வரலாறு, தமிழ் இலக்கணங் களைக் கற்றுத் தேர்ந்தார். பின்னர் மானிப்பாய் மெமோரியல் பாடசாலையில் சேர்ந்து ஆங்கில மொழிக் கல்வி கற்றார்.

யாழ்ப்பாணத்தில் பத்திரிசியார் கல்லூரியில் தமது உயர்கல்வியை முடித்தர். இளம் வயதிலேயே தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார்.

தமது படிப்பை முடித்த பின்னர் பெருந் தோட்டமொன்றில் கணக்காளராகப் பணிபுரிந்தார். பணிபுரிந்து கொண்டே இரயில்வே துறை பணிக்கான தேர்வெழுதி தேர்ச்சி பெற்று, கொழும்பு இரயில்வே தலைமையகத்தில் பணியில் சேர்ந்தார்.

இரயில்வே துறையில் பணிபுரிந்தாலும், இவரது மனம் இறைபணியை நோக்கித் திரும்பியது. அதனால், இரயில்வேதுறை பணியிலிருந்து விலகினார். பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள இறையியற் கல்லூரியில் சேர்ந்து, இறையியல் பயின்று தேர்ச்சி பெற்று 01.12.1901 அன்று குருவானார்.

ஞானப்பிரகாசர் ஊர்காவற்துறையில் குருவாக நியமிக்கப்பட்டார். அவ்வூரில் குருவாகப் பணியாற்றிய போது, மக்களிடம் நிதி வசூல் செய்து, புனித அந்தோனியார் கோவிலின் அருகில் 'திரு இருதய வாசக சாலை'யை 1903 ஆம் ஆண்டு நிறுவினார். தமிழில் வெளிவந்த அனைத்து நூல்களிலும் ஒவ்வொரு பிரதியைக் கொண்டு நிறுவப்பட்ட இவ்வாசக சாலையே, வட இலங்கையில் இரவலாக நூல் வழங்கும் முதலாவது வாசக சாலையாகக் கருதப் படுகிறது.

பின்னர், யாழ்ப்பாணத்து நல்லூரில் தங்கி நாற்பத்து மூன்று ஆண்டுகள் குருத்துவத் திருத் தொண்டு செய்தார். அதனால் 'நல்லூர் ஞானப் பிரகாசர்' என்று அழைக்கப்பட்டார். கிறிஸ்துவ சமயப் பணியாற்றியதுடன், ஏழை எளிய மக்களின் குழந்தை களுக்கு கல்வி அளித்திட கல்வி நிலையங்கள் பல தோற்றுவித்தார்.

ஞானப்பிரகாசர் கிறிஸ்துவ சமயத் தொண்டு புரிந்து கொண்டே, தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் வரலாறு முதலியவற்றில் ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

ஞானப்பிரகாசர் பன்மொழிப் புலவர், மொழி நிபுணர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இத்தாலி, பிரஞ்சு முதலிய 18 மொழிகளைப் படிக்கவும், எழுதவும், பேசவும் கற்றிருந்தார். சமஸ்கிருதம் மூலம் பிற ஆரிய மொழிகளை அறிமுகமாக்கிக் கொண்டார். சிங்கள மொழியின் வழி பாளி மொழியையும், மேலும் திபெத், பர்மிய, கூர்க்க மொழிகளையும் கற்றார். அவர் அறிந்த பிற மொழிகள் இலத்தீன், கிரேக்கம், போர்த்துக்கீஸ், டச்சு, ஜெர்மன் உட்பட 70 மொழிகளை அறிந்திருந்தார்.

ஞானப்பிரகாசர் கிருஸ்துவ சமய அனுசார நூல்கள், பிரசங்க நூல்கள், செப நூல்கள், வரலாற்று ஆராய்ச்சி நூல்கள், சமய வரலாற்று நூல்கள், மொழி ஆராய்ச்சி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என நூற்றுக்கணக்கான நூல்களை எழுதி அளித்துள்ளார்.

யாழ்ப்பாண வைபவ விமர்சனம், தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும், தமிழரின் ஆதி இருப்

பிடமும் பழஞ்சீர்திருத்தமும், தமிழ் அமைப்புற்றா தெவ்வாறு, திராவிட சொல்லிணக்கத்திற்கு சில விதிகள், யாழ்ப்பாணத்து தொல்குடிகள், தமிழரில் சாதி உற்பத்தி, தமிழ் மொழி ஒப்பியல் அகராதி, தமிழ் சொற்பிறப்பாராய்ச்சி, தமிழ் மொழி ஆராய்ச்சி, பு+ர்வீக இந்திய வரலாறும் காலமும், யாழ்ப்பாண இடப்பெயர் வரலாறு, முதலிய தமிழர் வரலாறு முதலிய நூல்களையும் தமிழ் மொழி குறித்த ஆராய்ச்சி நூல்களையும் படைத்தளித்துள்ளார். 'செகராசசேகரன்' என்னும் நாவலை எழுதி அளித்துள்ளார்.

kings of Jaffna during the portuguers period, Histroy of Jaffna under the portugues and Dutch Rule, Ancient kings of Jaffna, Early History of Tamils and the religion, 0rigin of caste among the Tamils, Indian ancient Chronology and Civilization, Life from the Excavations of the Indus Valley, Early History of the Ancient popes, Catholicism in Jaffna, 25 years of catholic progress in the Diocase of Jaffna, Origin and History of the Catholic Church in Ceylon, Philosophical Saivaism or Saiva Siddhanta, Historical aspect of Christianity and Buddhism, How Tamil was built up, An English – Tamil Dictionary, Some laws of Dravidian Etymology, The Dravidian Element in Sinhalese, Root words of the Dravidian group of Languages, The Proposed comparative Tamil Lexicon முதலிய ஆங்கில நூல்களையும் எழுதி அளித்துள்ளார்.

மேலும், ஆண்டவர் சரித்திரம், சுப்பிரமணியர் ஆராய்ச்சி, பிள்ளையார் ஆராய்ச்சி, மிருகபலி ஆராய்ச்சி, மறுபிறப்பு ஆட்சேபம், சைவர் ஆட்சேப சமாதானம், புதுச் சைவம், புதுச் சைவமும் புலால் உண்ணாமையும், இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை வரலாறு, ஆதிகாலத்துப் பாப்புமார் சரித்திரம் முதலிய சமயத் தொடர்பான நூல்களை எழுதி வழங்கி யுள்ளார்.

உபதேசியார் சந்தியாபிள்ளை நற்சரிதை, பரிமான் என். ஆர். முத்துக்குமாரு, Life of Cecilia Rasamma, Chryasanthus Daria முதலிய வாழ்க்கை வரலாற்று நூல்களையும் எழுதியுள்ளார்.

ஞானப்பிரகாசர் தமது வரலாறு மற்றும் தமிழ்மொழி ஆராய்ச்சி கட்டுரைகளை Ceylon Antiguary and Literary Register, Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, Journal of the Mystic Society, Indian Historical Quarterly, Daily News, Times, Tamil Culture முதலிய ஆங்கில இதழ்களிலும், மதுரைத் தமிழ்ச் சங்க இதழான செந்தமிழ், ஈழத்து ஈழகேசரி, இந்து சாதனம், பாதுகாவலன் மற்றும் தமிழகத்திலிருந்து வெளிவந்த கலாநிலையம், கலைமகள், ஞாயிறு முதலிய இதழ்களில் கட்டுரைகள் எழுதினார்.

'சத்திய வேதப் பாதுகாவலன்', 'குடும்ப வாசகம்', அமலோற்பவ இராக்கினி தூதன்' முதலிய மாத இதழ்களுக்கு ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

தமிழ் மொழியின் அடிப்படை பற்றியும், ஏனைய மொழிகளுடன் அதன் தொடர்பு பற்றியும் ஆராய்ந்து, அவரது காலம் வரை யாரும் எடுத்துரைக்காத, தமிழ் மொழிக்கு முதன்மை அளிக்கும் கோட்பாடு ஒன்றை நிறுவினார். இவர் கடும் முயற்சி செய்து, 'தமிழ் மொழியின் சொற்பிறப்பு ஒப்பியல் - அகராதி' என்ற நூலை எழுதி இரண்டு தொகுதிகள் வெளியிட்டார்.

ஒப்பியலாய்வினைச் சுவாமிகள் தமிழ் மொழி ஆராய்ச்சியிலும், பண்டைத் தமிழர் வரலாற்றாய்விலும் பயன்படுத்தியுள்ளார். தமிழர் வரலாற்றினை, ஆரியர், சீனர் குறிப்பாக ஆதிகால மேற்காசிய, எகிப்திய சமூகங்கள் முதலிய பிற வரலாற்றுடன் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார்.

"பழமையான சீர்திருத்தத்தினால் புகழ் படைத்தவர்களாய், உலகத்திலெல்லாம் அதி இனிமை யான மொழிகளுள் ஒன்றைப் பயிலுகின்றவர்களாய், தென்னிந்தியாவைத் தங்கள் சுய பூமியெனக் கொண்டவர்களாய், பல நூற்றாண்டுகள் தொட்டு விளங்கியிருக்கின்றவர்கள் தமிழரோயாவர். அவர் களது பூர்வீகம் யாது. அவர்களது ஆதிச்சமயம் எத் தன்மையது என ஆராயும் இச்சிறுநூல்" எனத் 'தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும்' என்ற நூலின் முகவுரையில் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டு உள்ளார்.

சுவாமி ஞானப்பிரகாசர் தமது ஆராய்ச்சி முடிவுகளை ஆங்கிலம் போன்ற பிற மொழியில் மட்டுமின்றிக் குறிப்பாகத் தமிழில் எழுதியுள்ளார். தமிழ் மொழி தக்க இடத்தினைப் பாடத் திட்டத் திலோ, சமூகத்திலோ பெற்றிராத காலத்தில், தமது தாய் மொழியான தமிழிலேயே ஆராய்ச்சிக் கட்டுரை களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

'தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும்' எனும் நூலில், பழந்தமிழ், ஆரியத் தொடர்புகள், பழைய தமிழ் நூல்கள், பழந்தமிழர் மத்தியில் நிலவிய சமூக நிலைமைகள் முதலியவைகள் குறித்து ஆராய்ந்து விரிவாக விளக்கியுள்ளார்.

மொழி ஆக்கத் துறையில் அவரது தனிப்பெரும் சாதனை, அவர் எழுதி அளித்த 'சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி' ஆகும்.

"திராவிட மொழிகளிலுள்ள வேர்ச் சொற்கள் வெற்றொலிகள் அல்ல. அவை அனைத்தும் பொருள்

பொதிந்த மொழிகள் என்பதை நிறுவியுள்ளார். தமிழ்ச் சொற்களுக்கு மிக எளிதாக சமஸ்கிருத வேர்ச்சொற்களை மூலமாகக் காட்டுவது ஒரு சம்பிரதாயம், இதையொட்டியே உலகம், கலை, நகுலம் போன்ற பல சொற்களுக்கு சமஸ்கிருதர்தாது காட்டப்பெற்றன. சுவாமி ஞானப்பிரகாசர் இச் சொற்களுக்கெல்லாம் தமிழ் வேர்ச் சொற்களை ஆராய்ந்து காட்டியுள்ளார்'' எனப் பேராசிரியர். மாஸ்கரேனஸ் பதிவு செய்து உள்ளார்.

''இதற்கு முன்பு தமிழ் அகராதி செய்தோர் எல்லாம், ஒவ்வொரு சொல்லிற்கும் உரிய பொருளை ஆராய்ந்து மேலும், மேலும் சிறப்புற விளக்கினரே அன்றி, சொற்களுக்குப் பிறப்பிடமாய் நின்ற அடிகளை முறைப்படி தேடிக் கண்டு அவற்றின் கீழ் உள்ள கிளைச் சொற் கூட்டங்களை அமைத்தவரல்லர். அது மட்டும் அன்று, தமிழடிகளை அறுதியிடுவதற்கு உரிய கட்டளைகளை வகுப்போரும் எக்காலத்தாவது தோன்றியிராமையால், தமிழிற்கு அடிகள் தாம் உளவா, என்ற ஐயுறவிற்கும் இடம் உண்டாயிற்று. ஆயிரத்தில் ஒரு தமிழ்ச் சொல்லுக்கு அடியொன்று இருப்பதாக ஆசிரியர் சிலர் ஆங்காங்குக் குறித்தறிந்தது உண்மையே. ஆயினும், தமிழ்ச் சொற்றொகுதி முழுதும் ஒரு சில தலையடிகளிலே நின்று முளைத்துக் கிளைத் துள்ளது எனும் உண்மை இதுவரையிலும் பிறரால் நிலைநாட்டப்படாதது ஆயிற்று. அதனால், பிற மொழிகளோடு தமிழுக்கு உள்ள ஒப்பியலைத் தெளிவித்தல் பற்றி கூறவும் வேண்டுமல்லவா, ஆகையினால் 'சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி' எழுந்தது என்க'' என இந்நூல் உருவானதற்கான தேவையை தெளிவுபடுத்தியுள்ளார் சுவாமி ஞானப் பிரகாசர்.

'தமிழ் அமைப்புற்ற வரலாறு' (How Tamil was Built up) என்ற நூல் தமிழ் சொற்களின் உண்மைப் பிறப்பை விளக்கும் நூலாகும். மேலும், இந்நூலில் தமிழ் சொற் தொகுதிகள், இடம் பற்றிய பெயரிடு, முதற் சொல்லடிகள், வழிச் சொல்லடிகள், சொல் அர்த்தங்கள் விரிந்த விசித்திரம், பிரதிப் பெயர்கள், பெயர் விகுதிகள், வேற்றுமை உருபுகள், காலங் காட்டும் இடைநிலைகள், செயவெனச்சம், வியங் கோள், எதிர்மறை, பிறமொழிகளிற் தமிழடிகள் முதலிய தலைப்புகளில் ஆராய்ச்சி கட்டுரைகள் எழுதியளித்துள்ளார் சுவாமி ஞானப்பிரகாசர்.

தமிழ்ச் சொற் பிறப்பாராய்ச்சி (Studies in Tamil Etymology) என்னும் நூலில் தமிழ் அடிச் சொல் இயல்பு, வழிச் சொல்லாக்கக் கட்டளைகள், மேலும் நான்கு கட்டளைகள், சொற்சிதைவு, பொருள் வேறுபாட்டு முறை, ஆரிய மொழிகளில் வழிச் சொல்லாக்கம் முதலிய ஆராய்சி கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

சுவாமி ஞானப்பிரகாசரின் இந்து சமய வரலாற்று விமர்சனத்தை சைவ உலகம் முற்றாக வெறுத்து ஒதுக்கியது எனக் கொள்ள முடியாது. தமிழகத்திலுள்ள பிரபலமான சைவ மடங்களில் ஒன்றான திருப்பனந்தாள் மடம் அவரை கௌர வித்தது. மேலும், இவரது, தமிழ்ச் சொற் பிறப் பாராய்ச்சி என்னும் நூலை வெளியிட நிதி உதவியும் வழங்கியுள்ளது என்பது வரலாற்றுச் செய்தி.

சுவாமி ஞானப்பிரகாசர் எழுதி அளித்துள்ள 'தருக்க சாத்திரச் சுருக்கம்' என்னும் நூல், ''குறித்து இக்கால அவசியத் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, புதிய ஆரம்ப நூலாக தருக்கம் பயிலும் மாணவர் களுக்கு பாடப்புத்தகமாய் இடம் பெறத் தகுதியும் சிறப்பும் பெற்றிருக்கிறது. சுவாமியின் பன்மொழி ஆராய்ச்சியும், தமிழ் அமைப்புற்ற வரலாற்றை அறிந்த சிறப்பும், ஆங்கிலச் சொற்களுக்கேற்ற புதுச் சொற்களைப் பெய்து எழுதக்கூடியதாயிற்று'' என அக்காலத்தில் இலங்கையில் கல்வி உயர் அதிகாரியாகப் பணிபுரிந்த உவாட்சன் பாராட்டியுள்ளார்.

இந்திய பூர்வீக வரலாற்றினை ஆராய்வதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த ஸ்பானிய கிருத்துவ சமயத்துறைவியும், மும்பை பல்கலைக் கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியரும், இந்திய புதை பொருளாராய்ச்சிக்குக் கழகத் தலைவருமான ஹெராஸ் சுவாமி, ஞானப்பிரகாசர் அடிகளாருடன் இணைந்து, சிந்து சமவெளி நாகரிகம் பற்றிப் பல ஆய்வுகளை மேற்கொண்டு, இந்நாகரிகம் திராவிடருக்கே முற்றிலும் சொந்தம், திராவிடரின் தனிப்பெரும் சொத்து என உலகிற்கு உணர்த்தினார்.

அறிஞர் ஹெராஸ் பாதிரியார், சிந்து சமவெளியின் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுகளை படித்தறிவதில் தமக்கு ஏற்பட்ட ஐயங்களைத் தீர்த்துக்கொள்ள இந்தியாவிலிருந்து 1936 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்று சுவாமி ஞானப்பிரகாசரைச் சந்தித்தார். அறிஞர் ஹெராஸ் பாதிரியார் எழுதியுள்ள 'இந்து மெதித்தேரேனியன் பண்பாடு' என்னும் நூலில், ''நான் உண்மையில் சுவாமி ஞானப்பிரகாசருக்குப் பெரிதும் கடமைப்பட்டவன் ஏனெனில் மொழி ஆராய்ச்சியைக் கொண்டு அவர் புரிந்த பேருதவிகள் நான் அதிக தவறுகளை விடாமல் பெரும்பயன் அளிக்கத்தகனவாயின எனக் குறிப்பிட்டுள்ளார்.

சுவாமி ஞானப்பிரகாசரின் தமிழ் மொழி ஆராய்ச்சி முடிவுகள்: எந்தமிழ் மொழியில் ஆதிச் சொல்லடிகள் பெரும்பான்மை அரைகுறையின்றி நிலவுகின்றன. எனவே, அவைதான் ஏனைய மொழி களின் அடிப்படையான சொற்பகுதிகளின் உண்மை உருவமாதல் வேண்டும். அம்மொழிகளின் பண்டைச்

சொற்களை நுண்மதியால் ஆராய்ந்து ஒப்பு நோக்கிக் காண்பதுண்டாயின் யாங்கூறியது மெய்யுரையாகாமல் போகாது என்பது எனது துணிபு" என அறிவித்தார்.

சுவாமி ஞானப்பிரகாசரின் தாய் மொழிப்பற்று: "என்னே எந்தமிழின் சொல்லமைப்பு மாட்சி! ஒவ்வோர் சொல்லையும் படிக்க - ஆராய ஆராய - நம்முன்னோர் நமது தீம்மொழியை எத்துணை அறிவு விளங்கப் புனைந்து வைத்துள்ளனர் என்ற புதுமையைக் கண்டு கழிபேருவகை எய்துகின்றோமே! இத்தகைய அருமந்த மொழியைக் பயிலுவதைக் கைவிட்டு, இம்மொழியிடத்தில் ஐயம் ஏற்று வாழுகின்ற பிற மொழிகளையே தேடிப் பயில் வோரும் தமிழ் அன்னையின் நன்மக்கள் ஆவாரா"? "அமிழ்தினும் இனியது என அறிஞர் போற்றும் எம் அரிய தமிழ் மொழியின் கட்பொருந்திய அழகு களுள் ஒன்று யாதெனில், அதன் பயனுற்றுத் தொகைப் பட்ட சொற்களின் பெரும்பாங்கானவை தம்முள் இனங்கொண்ட கூட்டங் கூட்டமாய் இயலுதலாம்" எனப் பெருமையுடன் பதிவு செய்துள்ளார்.

சுவாமி ஞானப்பிரகாசரின் நூல் வாசிப்பு குறித்த முன்வைப்பு: "இத்தேசத்து வாலிபர் பலர் பள்ளிக் கூட படிப்பு முடிந்தவுடன் படிப்பெல்லாம் முடிந்த தென்று எண்ணினாற் போல் ஏடுகள், புத்தகங்களைக் கட்டிப் பூச்சிகள் வாசிக்கும்படி வைத்துவிடுவது வழக்கம். வாலிபரே! உங்கள் படிப்பும் இதோடு முடிந்துவிட்டதென்று எண்ணாதிருங்கள். பள்ளிக் கூடப் படிப்பு முடிந்த பின்பு நீங்கள் வாசிக்கும் வாசிப்பினால்தான் இந்த விதை முளைத்து வளர்ந்து பூத்துக் காய்த்துக் கனிய வேண்டும். ஆகையால் வாசிப்பைக் கை நெகிழாதிருங்கள்" என வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

சுவாமி ஞானப்பிரகாசர் 'நடமாடும் நூலகம்' என்று அழைக்கப்பட்டார். பல மொழிகளிலும் காலத்துக்கு காலம் வெளிவந்த நூல்கள், இதழ்கள் மற்றும் வெளியீடுகள் அனைத்தும் அவரது நூலகத்தில் இடம் பெற்றிருந்தது.

சுவாமி ஞானப்பிரகாசர், இலங்கை யாழ்ப்பாண வரலாற்றுச் சங்கத்தின் சிறந்த அறிஞராக விளங்கினார். அச்சங்கத்தின் துணைத் தலைவராகவம், தலை வராகவும் செயற்பட்டார்.

இலங்கை அரசு சுவாமி ஞானப்பிரகாசரை வரலாற்றுச் சுவடிகளின் ஆய்வுக் குழு உறுப்பினராக நியமித்தது. யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் துணைத் தலைவராகப் பணியாற்றினார்.

இலங்கைப் பல்கலைக் கழக மூதவை (Senate) உறுப்பினராகவும் தொண்டாற்றியுள்ளார். ஆசிய அரசவையின் இலங்கைக் கிளையின் உறுப்பினராக செயற்பட்டார்.

"சுவாமி ஞானப்பிரகாசரும், சுவாமி விபுலாந்த அடிகளும் துறவிகளாயிருந்து கொண்டு மொழிப் பற்றுடன் பணிபுரிந்தவர்கள். அதே வேளையில் சமயப் பணியே தமது பிரதான குறிக்கோள் என்பதையும் மறக்காதவர்கள். ஒப்பியல் நோக்கில் ஆய்வுகளை நிகழ்த்தியவர்கள். தமிழியலுக்குப் பல வழிகளில் வளந்தேடியவர்கள். தமது சுய முயற்சியின் வலுவினால் மரபுவழித் தமிழறிஞர்களின் மதிப்பைப் பெற்றவர்கள். இறுதியில் மரபுவழித் தமிழ்க் கல்வி யாளராகவே கருதப்படும் அளவிற்கு அக்கல்வியின் விழுமியங்களோடு தம்மை இணைத்துக் கொண்ட வர்கள்" என மார்க்சிய இலக்கியத் திறனாய்வாளர் பேராசிரியர் கலாநிதி க.கைலாசபதி தமது ஆய்வில் பதிவு செய்துள்ளார்.

சுவாமி ஞானப்பிரகாசரின் அறிவு, ஆராய்ச்சி, செயல்திறன் ஆகியவற்றினைப் பாராட்டி ஜெர்மனி நாட்டு அரசு அவரைக் கௌரவித்து, அவரது உருவம் பதித்த முத்திரை வெளியிட்டு பெருமைப்படுத்தியது. வெளி நாடொன்றில் இத்தகைய மதிப்பினைப் பெற்ற முதற்தமிழர் என்ற பெருமை சுவாமி ஞானப் பிரகாசரையே சாரும்.

"கத்தோலிக்கத் திருப்பணிகளைத் தவிர்த்து, இவர் ஆற்றிய ஆக்கப்பணிகள் தமிழியற்பணிகள் - தமிழ்ப்பணி, வரலாற்றுப் பணி ஆகியனவற்றுக்குச் சமமான முக்கியத்துவம் அளித்து பாடுபட்டார்" என 'ஈழகேசரி' இதழ் புகழ்ந்துரைத்துள்ளது.

"உரைநடையில் தமிழன்னையை உலவவிட்டு அழகு பார்த்தவர்களும் கிறிஸ்துவக் குருக்களே. ஒப்பியல் இலக்கணத்தைத் தமிழுக்கு அறிமுகம் செய்து வளர்த்தவரும் அத்தொண்டர்களே; எவருமே செய்யத் துணியாத தன்னிகரற்ற தனிச்சேவை யொன்றைத் தமிழுக்குக் கொடுத்துச் சென்றார் பன் மொழிப் புலவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்"என அருட்திரு சா.ம. செல்வரட்னம் புகழாரம் சூட்டி யுள்ளார்.

"அவர் திருமறை ஆசிரியராக இருப்பதுடன் வரலாற்று ஆசிரியராகவும், ஒப்பியல் மொழி வல்லுநராகவும், தமிழின் தொண்டையும் ஒப்பற்ற தன்மையையும் எடுத்துக்காட்டும் வல்லுநராகவும் விளங்குகிறார். அவருடைய கடல் போன்ற புலமையைக் காட்டுவதற்கு அவர் யாத்த 'சொற் பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி'யே போதிய சான்று" என 'தமிழ்த்தூதுவர்' தனிநாயகம் அடிகளார் சுவாமி ஞானப்பிரகாசருக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

“ஒரு நூற்றாண்டுக்கு முன்தோன்றித் தமிழ்த் தாய்க்குத் தொண்டாற்றிய சுவாமி ஞானப்பிரகாசர் பேரறிஞராவார். இவர் முற்றும் துறந்த முனிவராகச் சமயப்பணி செய்தாரெனினும் தமிழ் மொழிப் பற்றினைத் துறக்கவில்லை. தமிழ் மொழியின் பெரும் பழமையையும், தனிச்சிறப்பையும், நுட்ப அமைப்பையும் நுணித்துணர்ந்து உலகத்துக்கு எடுத்துக்காட்டினார். பிறர் இலகுவில் செய்ய முடியாத இத்தொண்டை செய்வதற்கு இரவு பகலாக அயராது உழைத்தார்.” என ‘செந்தமிழ்க்கலாமணி’ வித்துவான் க.பொ.இரத்தினம் தமது ஆய்வில் பதிவு செய்து உள்ளார்.

கொழும்பு விவேகானந்தா மண்டபத்தில் 1936 ஆம் ஆண்டு, தமிழ்ச் சொற்பிறப்பையிட்டு சுவாமி ஞானப் பிரகாசருக்கு பாராட்டு விழா நடைபெற்றது. அவ் விழாவில் சுவாமி ஞானப்பிரகாசர் ஆற்றிய உரையை செவிமடுத்த, அமெரிக்க நாட்டு அறிஞரான கொக்லர் “நீங்கள் அமெரிக்க நாட்டிலே பிறந்திருந்தால், உங்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஊர்கள் தோறும் சுற்றுவார்கள்” எனத் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டுப் புலவர்களையும், ஈழநாட்டுப் புலவர்களையும் கொண்ட தமிழ்ப்புலவர் மன்றம் 1944 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், சுவாமி ஞானப் பிரகாசரின் ஒப்பற்ற தமிழ்ப் பணியையும், ஆராய்ச்சித் திறனையும் பாராட்டி நடத்திய விழாவில் அவருக்கு ‘சொற்கலைப் புலவர்’ என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தது.

மேலும், அவ்விழாவுக்குத் தலைமை வகித்த தமிழ் நாட்டறிஞரான ‘நாவலர்’ சோமசுந்தர பாரதியார் தமது உரையில், “தமிழ்ச் சொற்கள் தழைத்தெழுந்த தகைமையைச் சரிவர ஆராய்ந்து, பல மொழி நூல் முடிவு கொண்டு விளக்கி, தமிழ்ச் சொற்களின் சிறப்பைக் கண்ட ஞானப்பிரகாசர் தமிழ் நாட்டில் சிலை அமைத்துப் புகழப்பட வேண்டியவர்” எனப் பாராட்டினார்.

இலங்கை அரசு சுவாமி ஞானப்பிரகாசரை 22.05.1981 அன்று தேசிய வீரராகப் பிரகடனம் செய்த தோடு, அவரது உருவம் பொறித்த முத்திரை (அஞ்சல் தலை) ஒன்றையும் வெளியிட்டுச் சிறப்பித்தது.

மறைநூல் வல்லுநராக, மொழி வல்லுநராக, மத போதகராக, மொழி ஆராய்ச்சியாளராக, பன்மொழி அறிஞராக, சிறந்த ஆசிரியராக விளங்கிய சுவாமி ஞானப்பிரகாசர் தமது எழுபத்திரெண்டாவது வயதில் 22.01.1947 அன்று இயற்கை எய்தினார். ●


## நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்




**பழந்தமிழில் சொல்லியல் சிந்தனைகள்**

**முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்**

விலை : ₹ 160/-

தமிழ் மொழியின் அமைப்பை அறிந்துகொள்ள மொழியியல் என்னும் ஒளி தூண்டுகோல் இல்லாமல் ஆராய முடியாது என்னும் நிலை ஏற்பட்டுள்ளதன் அடிப்படையில் இலக்கண மொழியியல் அறிவியல் ஆய்வு சார்ந்து எழுதப்பட்ட நூல்.




**பழந்தமிழில் காலங்கள்**


**முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்**

விலை : ₹ 160/-

தமிழ் இலக்கியச் சான்றுகள், உரையாசிரியர்களின் சிந்தனைகள், திராவிட மொழியியல் கோட்பாடுகள் போன்றவற்றின் அடிப்படையில் காலத்தை மிகவும் விரிவாக விளக்கிச் செல்கிறது இந்நூல்.

# சங்கப் பனுவல்களில் அகமரபு குறித்த நுண்ணிய ஆவண ஆய்வு

மயிலம் இளமுருகு




**சங்கச் செவ்வியல்**
**பனுவல்களில் அகமரபு**
லோ.ஜெயலட்சுமி
***வெளியீடு: நெய்தல் பதிப்பகம்***
₹ 270/-

மனிதர்கள் தான் கண்டதைக் கேள்விப்பட்டதை அனுபவித்ததைப் பல்வேறு வகைகளில் பதிவு செய்து வந்தனர். தொல்மக்களின் இத்தகைய தொடக்க நிலையைக் குகைகளில் உள்ள ஓவியங்கள், கல்வெட்டுகள் அதன் தொடர்ச்சியாக நடுகற்கள் மேலும் வளர்ச்சிப் படிநிலைகளின் ஊடாகக் கோயில்கள் என மக்கள் கூடும் இடங்களில் பதிவு செய்தனர். இவ்வாறாகவே ஒவ்வொரு நாட்டிலும் வாழ்நெறிகள் ஆவணப்படுத்தப்பட்டு வந்துள்ளன. இது வரலாறு. காலம் செல்லச்செல்ல மொழிகளின் வளர்ச்சி மேல்நிலைக்கு ஏற்றம் பெற்றன.

தமிழ்மொழியில் இன்று கிடைக்கின்ற தரவுகளின் அடிப்படையில் முதல் நூலாகத் தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் விளங்குகிறது. இதைப் போன்றே கிடைத்த பழமையான, செவ்வியல் இலக்கியமான சங்க நூல்கள் திகழ்கின்றன. செவ்வியல் பனுவல்களான இவற்றில் பல்வேறுபட்ட பார்வைகளில் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. தொல்காப்பியத்திலும் சரி சங்க இலக்கியத்திலும் சரி ஆய்வு செய்வதற்கானக் களம் பல்கிப் பெருகிக் கிடக்கின்றன. இவை செழுமை வாய்ந்த கட்டமைப்பும் பொருள் நெறிகளும் தன்னகத்தே கொண்டதாக இருக்கின்றன.

சங்க இலக்கியத்தைப் பலர் ஆய்வு செய்து உள்ளனர். இன்றும் ஆய்வு செய்து வருகின்றனர். சங்க இலக்கியத்தில் உள்ள பாடல்களை அகப்பாடல்கள் என்றும் புறப்பாடல்கள் என்றும் வகைப்படுத்துவர். சங்க இலக்கிய அகமரபு குறித்து ஆய்வு செய்த ஆய்வாளர் லோ. ஜெயலட்சுமி அவர்கள் சென்னையில் உள்ள அண்ணா ஆதர்ஷ் மகளிர்க் கல்லூரியின், தமிழ் மொழித்துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர் எழுதி வெளிவந்த நூல்தான் "சங்கச் செவ்வியல் பனுவல்களில் அகமரபு" என்ற நூலாகும். இலக்கியப்பிரதியை விவரணைகளின் ஊடாக ஆவணப்படுத்தும் போக்கினை மிகச் சிலரே செய்து வருகின்றனர். அவர்களுள் கவனத்திற்குரியவர் பேராசிரியர் வீ.அரசு அவர்கள். அவர் தன்னுடைய ஆய்வு மாணவர்களை நுண்ணிய பார்வையில் ஆய்வு செய்ய வழி அமைத்துக் கொடுத்துத் தானும் அது சார்ந்து இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அவருடைய மாணவரே இந்நூலை எழுதியுள்ளார். அந்த வகையில் ஆய்வாளர் அகமரபு குறித்து ஆய்வு செய்துள்ளார். ஓலைச்சுவடி பட்டயப்படிப்பில் இவர் 'அர்த்தநாரீசுவரர் பேரில் பள்ளேசல் நாடகம்' என்ற ஓலைச்சுவடி நூலை அச்சேற்றியுள்ளார். பல்வேறு இடங்களில் நடைபெற்ற தேசிய, பன்னாட்டு கருத்தரங்கில் கலந்துகொண்டு பல ஆய்வுக் கட்டுரை களை வழங்கியுள்ளார். கலைஞர் பதிப்பகத்தின் மூலமாகக் 'கவிஞர் ஆசு' அவர்களின் படைப்பு களை விமர்சன நூலாக 2016 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டுள்ளார்.

சங்கச் செவ்வியல் பனுவல்களில் அகமரபு என்னும் இந்நூல் சங்க அக இலக்கிய ஆய்வுகளில் கவனத்திற்குரிய ஒன்றாகத் திகழ்கிறது. நூலாசிரியர் பின்வருமாறு கூறுகின்றார். சங்கப் பிரதியை இதுவரை நாம் வாசித்த மரபிலிருந்து மாறுபட்ட தளத்தில் இந்நூல் அமைகிறது. பனுவல்களை நேரடி யான பயிற்சியின் ஊடாக அதனுடைய முழுமை யானக் கருத்தினை அறிய முடியும் என்பதை இந்நூல் விவரித்துப் பேசுகிறது. சென்னை பல்கலைக்கழகம், தமிழ் இலக்கியத்துறையில் 'சங்க இலக்கியத்தில் அகவெளிப்பாடு' 2012 என்ற தலைப்பில் அளிக்கப் பட்ட ஆய்வேட்டில் மேலும் சில தரவுகள் இணைக்கப் பட்டுச் சங்கச் செவ்வியல் பனுவல்களில் அகமரபு என்ற பெயரில் இந்நூல் அமைகிறது ' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலிற்குப் பேராசிரியர் வீ.அரசு அவர்கள் ஆய்வின் தன்மை, ஆவணப்படுத்திய விதம் பற்றி விவரித்து அவருக்கே உரித்தான முறையில் எழுதியுள்ள அணிந்துரை வாசகருக்கு அடித்தளமாக அமைகிறது. மறு வாசிப்பின் முக்கியத்துவம் மற்றும் படிக்கும் ஆர்வத்தை ஏற்படுவதாகவும் இந்த அணிந்துரை அமைந்துள்ளது. இலக்கணப் பிரதியில் தரும் விளக்கங்களை முதன்மைப்படுத்தாது ஆண்-பெண் உறவுகள் எனும் அடிப்படையில் பண்பை முதன்மைப் படுத்திப் பேசுகிறது என்கிறார். இந்நூலை வாசிக்கும் ஒவ்வொரு உயிரியும் தனது அக உணர்வுகளைப் பற்றிப் பேசுவதாக உணர முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆய்வாளர் இந்நூலின் பாடுபொருள் என்ற தலைப்பில் ஆய்வு எதைப்பற்றியது, எப்படி அமைக்கப்பட்டுள்ளது, நூலின் மையக் கருத்து என்னவென்று முக்கியமான கருத்துக்களைக் கூறும் வகையில் எழுதியுள்ளார். நான்கு பகுதிகளாக இந்த ஆய்வு நூல் அமைகிறது. இதனை விரிவாக எழுதி யுள்ளார். அகமரபு குறித்த நுண்ணிய ஆய்வாக இந்நூல் அமைகிறது. ஆய்வாளர் தெளிவும் தேடுதலும் கொண்டவராக இருந்துள்ளார் என்பதை இந்நூல் நமக்குப் புலப்படுத்துகிறது.

தொல்காப்பிய இலக்கண மரபை மீறிய பதிவுகள் சங்கச் செவ்வியல் பனுவல்களில் இருக்கின்றன என்று கூறியுள்ளார். இது ஏற்கத் தக்கதாக உள்ளது. கால மாற்றத்தின் காரணமாக உயர்குடி மக்களுக்கு மட்டுமே உரிய மாலையான கண்ணி, பின்னாட்களில் ஆயர், உழவன், உமணர், குறவர், பாணன், மறவர் போன்றோர் கண்ணியைச் சூடிக் கொண்டனர் என்ற பதிவு சொல்லப்பட்டுள்ளது.

சங்கத் தமிழ் மக்களிடம் இயற்கை சார்ந்த பதிவுகள் மிகுந்துள்ளன. குறிப்பாக மலர், மரம் என்பதனைத் தன் வாழ்வியலோடு பொருத்திப் பார்த்துள்ளனர். பிறப்பு முதல் இறப்பு வரை இவை உடன் வருவதாக உள்ளது. நறுமணமுடைய மலர்கள் புணர்விற்குரிய வெளிப்பாடாகவும் ஞாழல், புன்னை, வேங்கை ஆகிய மரங்கள் புணர்விற்குரிய குறியீட்டு இடமாகவும் சங்கப் பனுவல்களில் வந்துள்ளமை குறித்து இந்நூலில் தரப்பட்டுள்ளன. அகமரபு குறித்த முழுமையான பார்வை கொண்ட ஆய்வு நூலாக இந்நூல் விளங்குகிறது.

பெண்டிரின் தலைமுடிக்குச் சொல்லப்படும் ஐம்பால் குறித்து விளக்கி, பின் நிகண்டுகளில் தரப் பட்ட விளக்கமானது பிற்காலத்திய நூலான கலித் தொகை, பரிபாடல் மற்றும் திருமுருகாற்றுப்படை ஆகிய பனுவல்களில் மட்டுமே காணப்படுகின்றன என்ற தெளிவை நூலாசிரியர் உரைத்துச் சென்றுள்ளார். சங்கப் பிரதியை முழுமையாகப் படித்து விவரணை களைத் தொகுத்தவிதம் நன்று. காம உணர்வுகளை

வெளிப்படையாகக் கலித்தொகை, பரிபாடலில் மட்டுமே பதிவாகியிருப்பதாகச் சொல்லப்பட்டு உள்ளது. தவிர ஏனைய சங்கச் செவ்வியல் பனுவல் களில் மனநல உணர்வும் சுட்டப்பட்டுள்ளது. இந்நூல் ஏழு தலைப்பு கொண்டதாக அமைக்கப் பட்டுள்ளது. முதல் நான்கு பகுதிகள் ஆய்வுப் பகுதியாக இருக்கின்றது. அடுத்து பின்னிணைப்பு, சுட்டி என்பன தொடர்ந்து இடம் பெற்றுள்ளன.

அகமரபு என்னும் பகுதியில் அகம் குறித்த வரையறை, இலக்கணம் உரையாசிரியர்களின் கூற்றுகளை நூல்களின் துணைகொண்டு ஆய்வாளர் பதிவு செய்துள்ளார். தான் கூறும் கருத்துக்குச் சான்றாக அருகருகே நூற்பா, பாடல் எண் போன்ற வற்றைக் கொடுத்திருப்பது ஆய்வாளர் கொண்டுள்ள ஆய்வு நெறியைக் காட்டுவதாக இருக்கிறது. திணை, இல்லம், திண்ணை என்பதற்கும் விளக்கம் தரப் பட்டுள்ளது. சங்கப் பாடல் குறித்த வரையறை, நூல் தொகுப்பு முறை, பாடல் வைக்கும் முறை என்பதும் கூறப்பட்டுள்ளன. திணைக்குப் பாடல் பாடிய புலவர்கள் மற்றும் தொகுப்பிலுள்ள முரண்பாடுகள், கூற்றுநிலை முரண்பாடுகள், பொருள்நிலை அமைப்பு என்று ஆய்வு விரிவாகச் செல்கிறது. அனைத்துக் கருத்துகளும் சான்றுகள் அடிப்படையில் கூறியுள்ள தன்மை சிறப்பாக உள்ளது.

புலவர்கள் திணை, துறை குறித்துப் பாடி யுள்ளனர். அவர்களுள் குறிப்பிட்டவர்கள் மட்டுமே திணை, துறை சார்ந்து எழுதுபவர்கள். அத்தகுப் பாடல்களுள் சில நூலில் சொல்லப்பட்டுள்ளன. பெயர் குறிப்பு இடம்பெற்ற ஒரே காரணத்தினால் பல அகவுணர்வுடையப் பாடல்கள் புறத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்படிக் கூறுவது நியாய மானதே. புறத்தில் அகக்கருத்துக்கள், அகத்தில் புறக் கருத்துக்கள் என்ற நிலையிலும் பாடல்களைத் தந்து வாசிப்பனுபவத்தைக் கூட்டுவதாக இந்நூல் இருக்கின்றது. ஒவ்வொரு பகுதியின் இறுதியில் மேற்கண்டவாறு இப்பகுதியில் என்ன கருத்தாடல் செய்தோம் என்பதைத் தொகுத்துச் சுருக்கமாகக் கொடுத்துள்ளார் ஆசிரியர்.

அகமரபு மலர்கள் என்னும் இரண்டாவது பகுதியில் மலர்கள் மனிதர்களிடத்தில் எந்தளவு ஆதிக்கம் செலுத்தின என்பது விளக்கப்பட்டுள்ளது. “சங்கப் பனுவல்களில் மலர்கள் தொடர்பான பதிவுகள் மிகுந்த அளவில் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். அதற்கானக் காரணத்தை ஆய்வு செய்தால், மலர்கள் அகப்பதிவுகளில் குறியீட்டு பொருளாகவும் புறப்பதிவுகளில் அடையாளக் குறியீடாகவும் கையாண்டிருப்பதை அறிய முடிகிறது” என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனுள் மலர் விளக்கங்கள் மலர்களின் பருவங்கள் மற்றும் 134 வகை மலர்களின் பெயர்கள் அகர வரிசையில் தரப்பட்டுள்ளன. நாற்றம் என்னும் சொல்லே சங்கப் பனுவல்களில் மிகுதி யாகப் பயன்படுத்தப்பட்டு உள்ளது. அவை நறிய, நறு, நறும், நறை, நாறி, நாறும் என்பனவாகும். இத்தகைய மலர்களை மக்கள் அறிந்திருந்தனர். இவர்கள் பயன்படுத்திய மலர்கள் குறித்தும் விரிவாக ஆய்வாளர் பதிவு செய்துள்ளார்.

சங்கப் பனுவல்களில் மலரைக் குறிப்பதற்கு அலர், அலரி, பூ, மலர், வீ எனப் பலவகையான சொற்கள் கையாளப்பட்டுள்ளன. இச்சொற்கள் அனைத்தும் மலர்களின் தன்மையைப் பொறுத்தே சுட்டப்படுவனவாகும். மலர்கள் நிலம் மற்றும் நீரில் மலரும் தன்மையுடையன. நிலத்தில் மலரும் மலர்கள் கொடிப்பூ, கோட்டுப்பூ, செடிப்பூ, புதற்பூ, புற்பூ என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் அலர் அலரி பூ ஆகிய சொற்கள் கொடி மற்றும் கோட்டு மலர்களைக் குறிக்கும். மலர் என்ற சொல் மலர்தல் என்ற நிலையை சுட்டுகிறது. நீரில் மலரும் மலர் களான நெய்தல், குவளை, தாமரை ஆகியவை மலர் என்றே பதிவுகள் உள்ளன.

மரத்தில் மலரும் கோட்டுமலர் வீ என்றும் முற்றும் மலர்ந்து கீழே விழ்கின்ற மலரின் நிலையை என்றே வீஎன்றே குறிக்கப்படுகிறது. அலர், அலரி, பூ, மலர், வீ ஆகிய சொற்கள் மொட்டு நிலையி லிருந்து இதழ்கள் விரிந்து கீழே விழுகின்ற தன்மையினைக் காணலாம். (பக்கம்- 65)

கண்ணி என்ற மாலையை ஆடவர்களும் கோதை என்ற மாலையை மகளிர்களும் அணிந்தனர் என்ற செய்தி தரப்பட்டுள்ளன. ஆடவர் அணியும் மாலைகளாவன - தார், கண்ணி, தெரியல், படையல் என்பது சொல்லப்பட்டுள்ளது. இருவரும் அணிந்ததாகத் தாமம், தொடலை, பிணையல், மாலை என்பன இருந்துள்ளன என்பதைத் தக்க சான்றுகளோடு ஆய்வு செய்து விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

மலரின் பருவங்கள் ஏழு நிலையாகக் கூறப் படுகிறது. அவை நனை, அரும்பு , முகை, போது, மலர், வீ என்பனவாகும். நனை மலரின் தோன்றல் பருவத்தைக் குறிக்கும். நனைப் பருவத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிநிலை அரும்பாகும். மலரின் அடிப்படை வடிவம் தோன்றும் பருவம் அரும்பு அரும்பின் அடிப்பக்கம் சற்றுப் பருத்தநிலை முகை எனப்படும். குவிமுகை கொழுமுகை கூர்முகை என அடைமொழியால் குறிக்கப்படுகிறது. (பக்-66)

பருவங்களின் விளக்கம் மற்றும் ஒவ்வொரு பருவத்திற்கும் பாடல்களைச் சான்றாக தந்திருப்பது மேலும் ஆய்வை செழுமைப்படுத்துகிறது.

தழையுடை குறித்து மிக விரிவாக இப்பகுதியில் ஆய்வாளர் கூறியுள்ளார். சங்க இலக்கியங்களை இலக்கண வாய்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆராயாமல் உணர்விற்கு முக்கியத்துவம் கொடுத்து வாசித்தால் அதனுடைய முழுமையான பொருளை உணர முடியும் என்கிறார். (பக்கம் - 84) மலர்களை ஆடவர்கள் பெண்களுக்குப் பரிசாகக் கொடுத்தனர் என்பது தெரிந்ததுதான். கையுறைப் பொருட்களாக இவற்றைக் கொடுத்தனர். இன்றைக்கு இது பரிசுப் பொருளாகப் புடவை, சுடிதார், விலையுயர்ந்த அணிகலன்கள் மற்றும் பயன்படுத்தும் பொருட்கள் எனத் தருவது என இதன் நீட்சியைக் காண முடிகின்றது. இது மகிழ்ச்சியாகவும் உள்ளது. புணர்ச்சியைக் குறிக்க ஆடவர்கள் மலர்களைப் பயன்படுத்தினர். இவர்கள் வாசனை அற்ற பூக்களை மடல் ஏறும்போது சூடினர். சங்க இலக்கியத்தில் பிரிவை உணர்த்தும் பாடல்கள் மிகுதியாக உள்ளன. அவைகளைத் தகுந்த இடத்தில் ஆசிரியர் இந்நூலில் சொல்லியுள்ளார். போர்க்காலத்தில் மலர்கள், பூந்தொடை விழா, வேந்தர்கள் சூடும் மலர்கள் என அனைத்தையும் முழுமையாக இப்பகுதி விளக்குகிறது.

மூன்றாவது பகுதியான கூந்தல் என்னும் பகுதியில் சங்கத் தமிழர்களின் கூந்தல் குறித்துப் பதிவு செய்துள்ள தகவல்களை ஆய்வாளர் உரைத் துள்ளார். அதனை விளக்கிய விதம் நன்று. இதுவும் பாடலின் சூழல் பொருளென்று முறையாகத் தரப் பட்டுள்ளன. நிகண்டுகளில் தலைமயிர் குறித்து வந்துள்ள தகவலும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆடவர்களின் தலைமயிரை 16 என்றும் அதனைப் பொதுவாக ஏழு என்பதாக அமைத்து ஆய்வாளர் விளக்கியுள்ளார். அதேபோன்று பெண்களின் தலைமயிர் பெயரைக் குறிக்கும் சொற்கள் 18 என்றும் அதை முறையாகத் தொகுத்தால் எட்டு என்றும் குறிப்பிட்டு ஒவ்வொன்றையும் பாடலோடு விளக்கி யுள்ளார் ஆசிரியர்.

**தடந்தாள் தாழைக் குடம்பை நோனாத்**
**தண்தலை கமழும் வண்டுபடு நாற்றத்து**
**இருள்புரை கூந்தல் பொங்குதுகள் ஆடி**
**உருள்பொலி போல எம்முனை வருந்தல்**
**அணித்தகை அல்லது பிணித்தல் தோற்றப்**
**பெருந்தேள் செல்வத்து இவளினும் எல்லா**
**எற்பெரி தளித்தனை நீயே பொற்புடை**
**விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்**
**வேந்தர் ஓட்டிய ஏந்து வேல் நன்னன்**
**கூந்தல் முரற்சியின் கொடிதே**
**மறப்பன் மாதேநின் விறல்தகை மையே**
**- நற் : 270**

என்ற நற்றிணைப் பாடல், நன்னன் என்பவன் தன் பகையரசரைப் போரில் கொன்றான். பகையரசனுக்கு உரிமையுடைய மகளிரைப் பற்றி வந்து அவர் களுடைய கூந்தலை மழித்தான். மழித்த கூந்தலைக் கயிறாகத் திரித்து, திரித்த கூந்தல் கயிற்றால் அப்பகையரசனின் மதயானைகளைப் பிணித்துக் கொண்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது. இத்தகைய கொடிய செயலை நன்னன் செய்ததாகப் பரணர் பாடியுள்ளார். இதில் வேறொரு ஆண்மகனுக்கு உரிமையுடைய பெண்டிரின் கூந்தலை மழித்தல் என்பது இழிவானச் செயல் என்று பரணர் குறிப்பிட்டுள்ளார். தோல்வியுற்ற பகையரசனின் உரிமையுடைய பெண்டிரின் கூந்தலை மழித்தல் எனும் செயலானது போரில் தோற்றவனை மேலும் அவமானப்படுத்தும் செயலாகக் கருதப்பட்டது. இதுதவிர கூந்தலைத் தொடுதல் என்பது அப் பெண்டிரைத் தொடுவதற்கு நிகரானதாகக் கருதப் பட்டது. ஆதலால்தான் பிற ஆண்மகன் பெண்டிரின் கூந்தலைத் தொடுதல் அல்லது மழித்தல் இழிவான செயலாகப் பேசப்படுகிறது. (பக். 152-153) இவ்வாறு சங்கப் பிரதியின் உள்ளார்ந்த தகவல்களைத் தருவதாக இந்நூல் உரிய கவனம் பெறுகின்றது.

சங்கப்பிரதியில் முடி என்ற பதிவு 27 இடங்களில் வருகின்றது என்று கூறியுள்ளார். இதன்மூலமாக ஆய்வாளர் சங்கப் பனுவல்களை முழுமையாகப் படித்து ஆய்வில் எடுத்துரைத்துள்ளதை அறிய முடிகின்றது. கூந்தல் உவமைகள், ஒப்பனை, தகரம், அகில் என்ற தலைப்பின் வழியும் பாடலினூடாக வாசகருக்குச் சங்கத் தமிழரின் மரபு விளக்கப்பட்டு உள்ளது.

ஐம்பால் குறித்தும் பனுவல், காப்பியம், உரையாசிரியர் தரும் விளக்கம் என இப்பகுதி விரிந்து செல்கின்றது. ஐம்பால் என்னும் சொல்லுக்கு உரை வழியாக ஒன்பது சொற்கள் கிடைக்கின்றன என்ற தகவல் தரப்படுகிறது. அவை அளகம், குழல், குரல், கொண்டை, சுருள், துஞ்சை, துஞ்சுதல், பனிச்சை, முடி என்பதாகும். பெண்களின் கூந்தலில் ஆண் ஈடுபாடு கொண்டிருந்தான்.

**புல்லினத்து ஆயர்மகன் சூடி வந்தது ஓர்**
**முல்லை ஒரு காழும் கண்ணியும், மெல்லியால்**
**கூந்தலுள் பெய்த முடித்தேன் மன், தோழி யாய்**
**வெண்ணெய் உரைஇ விரித்தகதுப்போடே**

**அன்னையும் அத்தனும் இல்லரா, யாய் நாண,**
**அன்னை முன் வீழ்ந்தன்று, அப்பூ**
**அதனை வினவலும் செய்யாள், சினவலும் செய்யாள்,**
**நெருப்புக் கை தொட்டவர் போல விதிர்த்திட்டு**
**நீங்கிப் புறங்கடைப் போயினாள், யானும் என்**
**சாந்து உளர்கூழை முடியா, நிலம் தாழ்ந்த**
**பூங்கரை நீலம் தழீஇ, தளர்பு ஒல்கி (கலி: 115)**

இப்பாடலில் கூந்தல், கதுப்பு ஆகிய சொற்கள் பயின்று வருவதைக் காணலாம். ஆயமகன் கொடுத்த பூவினைத் தன் கூந்தலுக்குள் முடிந்ததாக கூறுகிறாள். இதனை அடுத்து விரிந்த கூந்தலைக் கதுப்பாக முடிந்து கொண்ட நிலையினையும், அன்னை வெண்ணெய் தேய்ப்பதற்கு முடிந்த கதுப்பினைப் பிரிக்கிறாள். அப்போது பூ அவள் முன்பாக வீழ்ந்ததைச் சுட்டுகிறது. அன்னை விரித்த கூந்தலை, மீண்டும் அப்பெண் முடிந்துகொண்டாள் எனக் கூறும் பொழுது கூழை என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். இதன் மூலமும் கூந்தலைக் குறிக்கும் வேறுசொற்களாக மட்டும் இச்சொற்கள் கையாளப்படவில்லை. கூந்தல் முடிச்சு வகைகளைக் குறிப்பதற்குக் கதுப்பு, கூழை ஆகிய சொற்கள் பதிவாகியிருப்பதை அறியலாம். இப் பதிவின் ஊடாக ஓதி, கதுப்பு, குரல், கூழை, முச்சி ஆகியவற்றை ஐம்பால் முடிச்சு வகையாகக் கருதலாம் என்கிறார். (பக்கம்: 138) இவ்வாறு ஆய்வாளர் ஐம்பால் வகைகளைக் குறித்து நுணுகி ஆய்ந்து உள்ள போக்கினை இப்பாடலடிகளும் அதற்குண்டான உரைகளும் மிக தெளிவாக எடுத் துரைத்ததை நாம் அறிந்து கொள்கிறோம்.

கூந்தலில் காதலன் தூங்கினான் என்ற தகவலும் பலப் பாடல்களின் வழி சொல்லப்பட்டுள்ளன. கணவனை இழந்த மகளிர் கூந்தலை அறுத்துக் கொண்ட செயலும் நூலில் கூறப்பட்டுள்ளன. இறுதியில் குறிப்புகள் எனும் பகுதியில் கூந்தல் இடம் பெற்றுள்ள பாடல் எண்கள் தரப்பட்டுள்ளன.

உடல் சார்ந்த நிலை என்னும் நான்காவது பகுதியில் மக்கள் இனக்கவர்ச்சியால் இருவரும் விரும்பிய நிலை விளக்கப்பட்டுள்ளன. தங்களது இனப்பெருக்கத்தைப் பெருக்கிக்கொள்ளும் மக்களின் இனக்கவர்ச்சி விழைவைப் பல்வேறு வகையிலும் ஆசிரியர் இப்பகுதியில் குறிப்பிட்டுள்ளார். நுதல் வாசனை கொண்டது என்றும் அதற்குச் சான்றாகப் பாடலும் தரப்பட்டுள்ளது. மெய்ப்பாடு, நுதல் பசலை ஏற்படும் சூழல் கண் காமத்தின் பிறப்பிடமாக விளங்கிய சூழல் போன்றன நேர்மையோடும் பேசப்பட்டுள்ளன.

தன் காதலியின் எயிற்றில் இருந்து வரும் நீர் இனிமையாக இருப்பதாகத் தலைவன் பேசியதாகச் சங்கப் பனுவல்களில் நாம் அறிகின்றோம். இதனைப் பல்வேறு இலக்கியங்களும் பேசியுள்ளன. குறிப்பாகச் சங்க இலக்கியம் இதனைப் பலவாறு கூறியுள்ளது. எயிற்றிலிருந்து வரும் நீரின் தன்மை நுங்கின் இனிமை போன்றது என்றும் பாக்கின் இளங்காயின் இனிமை உடையதாகச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு பொருள் சார்ந்த கருத்துக்களை இப்பகுதியில் நாம் அறிய முடிகிறது. புணர்தலும் பிரிதலும் ஊடலும் இருவர் செய்த அக வெளிப் பாடுகள் என மிக விரிவாக அகமரபை இந்நூல் பேசுகின்றது. காதலன் தன் காதலியின் தோள் மற்றும் மார்பில் தொய்யில் எழுதினான் என்பதைப் பலப் பாடல்களின் வழி அறிகின்றோம். தொய்யிலை கரும்பு, கொடி, பூ, இலை, தளிர் என்ற வடிவத்தில் அவன் எழுதினான்.

இப்பகுதியில் வரும் பாடல்கள் பொருளோடு மேலும் விரிவாக விளக்குவதாக உள்ளன. அல்குலில் தழையாடை உடுத்திய விதம், திதலை தோன்றிய சூழல், இடம் மேனியில் பசலை தோன்றியவிதம் எனப் பலச் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. இப் பகுதியில் வந்துள்ள செய்திகளுக்குத் தேவையானக் குறிப்பு மற்றும் விளக்கங்களைப் பின்பகுதி விளக்கு கின்றன.

ஆய்விற்குப் பயன்பட்ட முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள், கட்டுரைகள், ஆய்வுக் கோவை, இதழ்கள், அகராதிகள், பொருட் களஞ்சியம் மற்றும் நிகண்டுகள் குறித்த நூல்கள் பற்றிய விவரங்களைத் துணைநூற்பட்டியல் என்ற பகுதியில் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். பின்னிணைப்புகளில் 134 மலர்கள் குறித்தும் அதற்கு விளக்கம் தரும் பாடல்களின் எண்கள் போன்றன தரப்பட்டுள்ளன. மலர்களுக்கான ஆங்கிலப் பெயர்களையும் தாவரக் கலைச்சொற் களையும் ஆய்வாளர் கொடுத்து ஆவணப்படுத்தி யுள்ளார். சுட்டி என்பது நூலின் இறுதியில் தரப் பட்டுள்ளது. இதுவும் அகரவரிசையில் அமைக்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக ஆய்வு நூல் என்றால் படிப்பதற்கு அயர்ச்சியைக் கொடுப்பதாக இருக்கும். ஆனால் இந்நூல் சுவாரசியம் தருவதாக இருக்கின்றது. இத்தகைய ஆய்வு நூலைத் தமிழுக்குக் கொடுத்த ஆய்வாளருக்கும் பதிப்பித்த நெய்தல் பதிப்பகத் தார்க்கும் வாழ்த்துக்கள். இப்படியான ஆய்வுகளைத் தொடர்ந்து ஆய்வாளர் எழுத வாய்ப்பு கிடைக் கட்டும் என்று வாழ்த்துவோம். ●

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் வெளியீடாக...




# விரைவில் வெளியாகவுள்ள மே.து.ராசுகுமார் நூல்கள்

1. வரலாற்று நோக்கில் இடைக்காலத் தமிழகம்
2. தமிழ்நாட்டில் நிலவுடைமை வளர்ச்சி - சில குறிப்புகள்
3. தமிழகத்தில் சாதியக் குடிகளின் மேலேற்றமும் கீழிறக்கமும்
4. தமிழ்நாட்டின் சமூக-பொருளிய வரலாறு - சில குறிப்புகள்
5. பண்டைய தமிழகத்தைப் புரிந்துகொள்வோம்
6. சங்க காலச் சமூக-பொருளிய வாழ்முறையில் பரத்தையர் (ரா. வசந்தாவுடன் இணைந்து)
7. பண்டைத் தமிழகத்தில் காதல் உறவுகள்
8. வேளாண் நுட்பத்தை வேண்டிய புறப்பாடல்
9. சோழர் கால நிலவுடைமைப் பின்புலத்தில் கோயில் பொருளியல்
10. பிற்காலச் சோழர் கால வாழ்வியல்
11. வரலாற்று நோக்கில் பண்டைத் தமிழகம்
12. சங்க காலத்தில் மாறுதல் மறுப்புகளும் முன்னேற்ற முனைப்புகளும்
13. அடிமை அமைப்பு முறையிலிருந்து தப்பிய தமிழகம்
14. சமூக-பொருளிய நோக்கில் சித்தர் பாடல்கள்
15. பதிற்றுப்பத்துப் பாடல்களைப் புரிதல்
16. புறநானூறு - புதிய புரிதல் உரை
17. வேளாண் சிக்கல்களும் ஊரகப் பொருளியமும்
18. மாநில சுயாட்சி
19. கல்விக் கண்ணோட்டங்கள் (கட்டுரைகளின் தொகுப்பு)
20. மொழிச் சிக்கல்
21. மே.து.ரா. சிறுகதைகள்
22. மே.து.ரா. பதிப்புரைகள்
23. கவிதைக் கனவுகள்
24. எண்ணிய எண்ணியாங்கு (பல்பொருள் படைப்புகள்)
25. ***Murder of the Constitution: Interpreting Article 356.***

# எல்லாவற்றையும் கலைத்துப்போடுகிறார்கள்

**எஸ்.விக்னேஷ் சரோ**




**ஒவ்வொரு கணமும்**

சுகதேவ்

*வெளியீடு: நோஷன் பிரஸ்*

*சேத்துப்பட்டு, சென்னை - 31*

₹ 170/-

**வா**சகனைத் திணறச் செய்யும் கவிதைத் தொகுப்புகளுக்கு மத்தியில் அவ்வப்போது எளிய நடைக் கவிதைகளால் வாசகனை குதூகலப்படுத்தும் சில கவிதைத் தொகுப்புகளும் வந்துகொண்டுதான் இருக்கின்றன. அவ்வகையில் இதழாளர் சுகதேவ் அவர்களின் 'ஒவ்வொரு கணமும்' கவிதைத் தொகுப்பைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் மிக எளிமை யான வரிகள். விசாலமான சமூகப் பார்வை. ஆழ்ந்த மனிதநேயம். வாழ்வைப் பற்றிய முழுமையான புரிதல். தத்துவக் குழப்பமில்லாத சிந்தனை என கவிதைத் தொகுப்பெங்கும் எளிமையும் ஞானமும் கைகூடிய அரிய வகை எழுத்து என்றே சொல்ல வேண்டும்.

குறிப்பிட்டுச் சொல்லத்தக்க நாளிதழ்களில் பணியாற்றியதோடு மிகச்சிறந்த கட்டுரைகள் எழுது பவராக அடையாளம் பெற்றிருக்கும் நூலாசிரியரின் முதல் கவிதைத் தொகுப்பு இது. தொழில்முறைப் பத்திரிகையாளராக நாளிதழில் பணி செய்யத் தொடங்கிய காலத்திலிருந்து கவிதை எழுதுவதி லிருந்து விலகி கட்டுரையாளனாக பரிணமித்ததைப்

பற்றியும் கவிதைகள் சார்ந்த ஆர்வத்தின் அடிப் படையில் இத்தொகுப்பு சாத்தியப்பட்டதாகவும் முன்னுரையில் தெரிவித்துள்ளார்.

இத்தொகுப்புக் கவிதைகளில் பெரும்பாலான வற்றில் பாசாங்கற்ற இயல்பான மொழி வாய்த்திருக் கின்றன. கவிதைக்கான பாடுபொருள்கள் பெரும் பாலும் சமகாலத்தவையாக அமைந்துள்ளதால் எளிதில் வாசகனிடம் ஈர்ப்பைப் பெற்றுவிடுகின்றன. இக்கவிதைகளுக்கும் வாசகனுக்குமான இவ்வுறவு தொகுப்பு நெடுகிலும் தொடர்கிறது.

இன்றைய கார்ப்பரேட்மய வாழ்வின் சூழலை இக்கவிதை அருமையாக சித்திரிக்கிறது.

**எல்லாவற்றையும்**
**கலைத்துப் போடுகிறார்கள்**
**மாற்றி மாற்றி அடுக்குகிறார்கள்**
**கதவுகளைப் பூட்டிவிட்டு**
**கண்காணிப்பு கேமிராக்களை**
**பொருத்திக்கொள்கிறார்கள்**
**வாசலில் கோலமில்லை**
**வீட்டுக்குள்ளே அலங்காரம் நடக்கிறது**
**யோகா வகுப்பிலிருந்து திரும்பியவுடன்**
**பக்கெட் சிக்கன் டெலிவரியாகிறது**
**தினைப் பாயசமும்**
**பீட்ஸாவும் அருகருகே கிடைக்கிறது**
**இரண்டுக்கும் கூட்டம்**
**நிறுத்த இடமில்லை**
**ஒவ்வொரு வீட்டிலும்**
**இரண்டு கார்கள்**
**இரண்டு கைபேசிகள் இருந்தும்**
**பவர்பேங்க் தேவைப்படுகிறது**
**சொந்த ஊர் சென்று நாளாகிறது**
**ஆலப்புழை படகு வீட்டுக்கு**
**முன்பதிவு செய்கிறார்கள்**
**ஆன்லைனில் ஆர்டர் செய்கிறார்கள்**
**பொருள் வாங்க வீட்டில் யாருமில்லை**
**தாகத்துடன் காத்திருக்கிறார்கள்**
**குடிநீர் கேன் வரவில்லை**
**சர்க்கரை குறைவாக காபி கேட்டால்**
**குப்பியுடன் சர்க்கரையை நீட்டுகிறார்கள்**
**புத்தகக் கண்காட்சியில்**
**அலைமோதுகிறது கூட்டம்**
**படிப்பதற்கு நேரமில்லை**
**தீவிர சிகிச்சைக்கு படுக்கையில்லை**
**உயிரைப் பிடித்துக் கொண்டு**
**காத்திருக்கிறார்கள் நோயாளிகள்**
**எலல்ாவற்றையும்**
**கலைத்துப் போடுகிறார்கள்**
**மாற்றி மாற்றி அடுக்குகிறார்கள்**

அச்சு அசலாக இன்றைய இந்திய மன நிலையையும் வாழ்வின் இருப்பையும் புறச் சூழலையும் ஆழ்ந்த புரிதலுடன் விவரிக்கும் இக்கவிதை வாசகனோடு நேரடியாக பேசுவதுபோல் அமைந் துள்ளது. பொருள்சார் வாழ்வின் அபத்தத்தை அப்பட்டமாக விவரிக்கின்றன இக்கவிதை வரிகள். வாழ்வை எங்கோ தொலைத்துவிட்டு தேவைக்கும் மேலாக வாங்கி வைத்திருக்கிற பொருட்களில் வாழ்க் கையைத் தேடி நிற்கும் இயலாமையை நய்யாண்டி செய்கிறது இக்கவிதை. மனிதர்களை மறந்துவிட்டு சாதனங்களை நம்பி வாழும் அவலட்சணத்தையும் கோடிட்டுக் காட்டுகிறது இக்கவிதை.

இதைப்போலவே மற்றொரு கவிதையில்,

**துக்கவீட்டில்**
**காலாட்டிக்கொண்டே**
**கடலை கொறிக்கிறார்கள்**
**இறுதி ஊர்வலத்தில்**
**தொலைக்காட்சி தோற்றத்துக்கு**
**புன்னகையுடன் கை அசைக்கிறார்கள்**
**சாலைவிபத்தில்**
**உயிரிழந்த சடலத்துடன்**
**செல்ஃபி எடுக்கிறார்கள்**
**கோவில் பிரசாதம் பெற**
**வரிசை மீறுகிறார்கள்**

என்ற வரிகள் நமது கலாச்சார விழுமியங்களும் பண்பாட்டு எச்சங்களும் மதிப்பு பெறாது போகும் இன்றைய அவலத்தைச் சுட்டுகின்றன.

**கைபேசிகளின்**
**அழைப்புக்கும் நிராகரிப்புக்கும்**
**இடையில்**
**வாழ்க்கையைத் தேடுகிறார்கள்**
**மனிதர்கள்**

என்ற வரிகள் இன்றைய யதார்த்த நிலையை வெகு இயல்பாக எடுத்துரைக்கின்றன.

அதிகாரத்திற்கு எதிராகவும் பண்பாட்டு வீழ்ச்சி களுக்கு எதிராகவும் நியாய தருமங்களுக்கு உட்பட்ட இயல்பான இயற்கையான வாழ்நிலைக்கு ஆதரவுக் குரல் எழுப்புவதாகவும் அமையப் பெற்றுள்ள இத் தொகுப்புக் கவிதைகள் வாசகனுக்கு அணுக்க மாகவும் அரவணைப்பனவாகவும் அமைந்துள்ளன.

ஆகமொத்தம் சமகால வாழ்நிலையை அதன் இயல்போடும் தன்னிலையோடும் எளிமையோடும் சாதாரண வாசகனும் வாசித்துப் புரிந்துகொள்ளும் வகையில் தொகுக்கப்பட்ட கவிதைத் தொகுப்பு அனைவரும் வாசிக்கவேண்டிய ஒன்றாகும். எல்லா வகையிலும் மனநிறைவைத் தருவதாக அமைந் துள்ளது இக்கவிதைத் தொகுப்பு. ●

# உ.வே.சாமிநாதையர் நினைவுகள் - 3

## இரா.வெங்கடேசன்



**டா**க்டர் உ.வே. சாமிநாதையர் தம் வாழ்நாளின் பெரும் பகுதியை ஆசிரியர் பணியிலும், பழந்தமிழ் நூல் பதிப்புப் பணியிலும் ஈடுபட்டு உழைத்துக் கழித்திருக்கிறார். வாழ்நாளின் இறுதிக் காலங்களில் தான் கட்டுரைகள் பல எழுதி வெளியிட்டிருக்கிறார். உத்தமதானபுரத்திலிருந்து மாயூரம் சென்று *(1870)* மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர் களிடம் மாணவராகச் சேர்ந்து பயின்ற காலம் தொடங்கி, கல்லூரிகளில் *(1880 - 1919)* தமிழாசிரியராகப் பணி யாற்றியது வரையிலான அனுபவங்களையும், இந்தப் பணிகளுக்கிடையில் செய்துவந்த பழந்தமிழ் நூல் பதிப்பாக்கத்தில் ஏற்பட்ட அனுபவங்களையும்,

ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் இறுதிக் காலங்களில் தமக்கு ஏற்பட்ட அனுபவங் களையும் கட்டுரைகளாக எழுதி வெளியிட்டிருக் கிறார். குறிப்பாக 1930 - 1942 எனும் கால இடை வெளியில்தான் சாமிநாதையரின் கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. பன்னிரண்டு ஆண்டு கால இடைவெளியில் நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை அவர் எழுதி வெளியிட்டிருக்கிறார். சாமிநாதையரின் வயதைக்கொண்டு நோக்கும் பொழுது 75ஆம் வயது முதல் 87ஆம் வயது வரை யிலான காலப்பகுதியில்தான் கட்டுரைகள் எழுதி வெளியிட்டிருக்கிறார் என்பது தெரிகிறது.

திருவாவடுதுறை மடத்தில் மாணவராக இருந்த போது ஏற்பட்ட அனுபவங்கள், கும்பகோணம் கல்லூரியில் பணியாற்றியபோது சந்தித்த மாணவர்கள், ஆசிரியர்களுள் சிலரைப் பற்றியும், ஆளுமைகள், பெற்ற அனுபவங்கள் பற்றியும் கட்டுரைகள் எழுதி வெளியிட்டிருக்கிறார். பழந்தமிழ் நூல்பதிப்புப் பணியின்போது தமக்கு ஏற்பட்ட அனுபவங்கள் குறித்த கட்டுரைகளும் சாமிநாதையர் கட்டுரைத் தொகுப்பினுள் உள்ளன.

தம் குடும்ப முன்னோர்களுள் சிலரைப் பற்றியும், தமக்கு ஆசிரியராக இருந்து விளங்கியவர்களுள் சிலரைப் பற்றியும் கட்டுரைகள் எழுதி வெளியிட்டிருக் கிறார். சாமிநாதையர் பழந்தமிழ் நூற்பதிப்புப் பணியின்பொருட்டுச் சுவடிகளைத் தேடிப் பல ஊர்களுக்குப் பயணம்மேற்கொண்டிருக்கிறார். அந்தப் பயண அனுபவங்களைத் தாம் பதிப்பித்த நூல்களின் முகவுரையில் குறிப்பிட்டிருந்தாலும் பிற் காலங்களில் அந்த அனுபவங்களைக் கட்டுரை களாகவும் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

கும்பகோணம் கல்லூரியிலிருந்து சென்னை மாநிலக் கல்லூரிக்கு வந்து (1903) ஆசிரியர் பணியை ஏற்ற பின்னர் பல பெரும் ஆளுமைகளின் நட்பு அவருக்குக் கிடைக்கப்பெறுகிறது. அந்த நட்பு எல்லைக்குள் பேராளுமைகளாக விளங்கிய பலர் இருந்தனர். அவற்றுள் சிலரைக் குறித்துக் கட்டுரை எழுதி வெளியிட்டிருக்கிறார் சாமிநாதையர். சென்னைக்கு வந்த பின்னர் அவருடைய பதிப்புப் பணியானது விரைவும், செழுமையும் பெற்றிருக்கின்றன. அந்த அனுபவங்களையெல்லாம் கட்டுரைகளாக எழுதி வெளியிட்டிருக்கிறார்.

உ.வே.சா. எழுதி வெளியிட்டுள்ள கட்டுரை களைப் பொருண்மை நிலைநின்று வகைப்படுத்தி நோக்கும்பொழுது ஆளுமைகள் பற்றிய கட்டுரைகள், எண்ணிக்கையில் மிகுதியாக இருப்பது புலப்படுகிறது. சுமார் இருபத்தைந்து கட்டுரைகளுக்கும் மேல் ஆளுமைகள் பற்றியனவாக இருப்பது கவனிக்கத் தக்கதாகும். ஊர்களின் வரலாறு, கலை, மகளிர் தொடர்பான கட்டுரைகளும் பெருமளவு உள்ளன. தமிழின் தனிச்சிறப்பு, சமயம், மனிதம் போற்றும் பொருண்மைகளிலும் கட்டுரைகள் காணப்படு கின்றன.

உ.வே.சா. பல்வேறு இதழ்களில் எழுதி வெளியிட்டுவந்த கட்டுரைகள், பிற்காலத்தில் அவர் தொகுத்துப் பதிப்பித்து வெளியிட்ட, நான் கண்டதும் கேட்டதும் (முதல் பதிப்பு, 1936, இரண்டாம் பதிப்பு, 1938), புதியதும் பழையதும் (முதல் பதிப்பு, 1936, இரண்டாம் பதிப்பு, 1939), நினைவு மஞ்சரி (முதல் தொகுதி, முதல் பதிப்பு, 1940), நல்லுரைக்கோவை (நான்கு தொகுதிகள், முதல் பதிப்பு, 1937, 1938, 1939) ஆகிய தொகுப்பு நூல்களில் இடம்பெற்றுள்ளன. இந்தத் தொகுப்பு நூல்களில் 139 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

உ.வே.சா. தாம் தொகுத்து வெளியிட்ட தொகுப்புகளில் இடம்பெறாத கட்டுரைகள் சிலவும் உள்ளன. அந்த வகையில் கீழ்வரும் பதின்மூன்று கட்டுரைகள் உள்ளன.

1. சாதுரிய வசனங்கள், கலைமகள், தொகுதி 22, பகுதி 132, 1942, இவரைப் பற்றிப் பொன்னம்பலப் பிள்ளையின் திருப்பணி எனும் பெயரில் ஒரு கட்டுரை எழுதி, கலைமகள், தொகுதி 17, பகுதி 97 - 102, 1940இல் வெளியிட்டுள்ளார்.
2. மஹாலிங்க சாஸ்திரிகள், கலைமகள், தொகுதி 22, பகுதி 131, 1942
3. சின்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார், கலைமகள், தொகுதி 23, பகுதி 136, 1943
4. ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார், Raja Annamalai Chettiyar, Commemoration, (vo1. 2)
5. தமிழ் மகள் திருநாள் (சதாபிஷேக ஏற்புரை), கலைமகள், தொகுதி 7, பகுதி 37 - 42, 1935
6. திருவிடைமருதூர் வசந்தமகோற்சவம், தென்னிந்திய வர்த்தமானி, தஞ்சை, 16.6.1904
7. கரிகாற் சோழன், சிவநேசன் ஆண்டுமலர், திங்கள் 4, 1932
8. வல்வில் ஓரி, கலைமகள், தொகுதி 18, பகுதி 104, 1940
9. புலவர் புகழ், சிவநேசன், ஆண்டு 7, திங்கள் 10, 1934

10. தமிழ்நூல்களும் வைத்தியமும், 1935ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் அகஸ்தியர் திருநாளில் செய்த பிரசங்கத்தின் ஒருபகுதி இது. இக்கட்டுரை கலைமகள், தொகுதி 23, பகுதி 138, 1943இல் வெளிவந்துள்ளது.

11. தமிழ் அன்பர் மகாநாடு (வேண்டுகோள்), சித்தாந்தம், மலர் 6, இதழ் 11, 1933; 23 அக்டோபர், 1933இல் சிவநேசன் பத்திரிகையிலும் வெளிவந்ததுள்ளது.

12. தமிழ்க்கல்வி, சிவநேசன், ஆண்டு 7, திங்கள் 1, 1933

13. நல்லொழுக்கம், விவேகபோதினி, அக்டோபர் - நவம்பர், 1916, இந்தக் கட்டுரை சங்கராபரணம் நரசையர் பற்றியனவாகும். இவரைக் குறித்துக் கலைமகள், தொகுதி 7, பகுதி 37 - 42, 1935-இல் ‘சங்கராபரணம் நரசையர்’ என்ற தலைப்பிட்டு ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டிருக்கிறார்.

எட்டு கட்டுரைகள் 1937இல் வெளிவந்த செய்யுள் வாசகத் திரட்டு (பாகம் - 2) எனும் தொகுப்பு நூலில் உள்ளன; இத்தொகுப்பு நூல் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராகப் பணியாற்றிவந்த வித்துவான் கீ. விசுவநாதையர் அவர்களும் இணைந்து பதிப்பித்து வெளியிட்டதாகும். இந்நூல் அன்றைக்குத் தமிழ் பயின்றுவந்த மாணவர்களுக்குப் பயன்படும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள கட்டுரைகள்,

1. சங்கத் தமிழ்
2. ஐவகை நிலங்கள்
3. கல்வி முறை
4. கௌதம புத்தரும் அவருடைய உபதேசங்களும்
5. யூகியின் ஆற்றல்
6. திருச்சிற்றம்பலம்
7. தமிழ் உரைநடை
8. பணத்தின் வரலாறு

என்பனவாகும்.

கனம் கிருஷ்ணையர், கோபாலகிருஷ்ண பாரதியார், மகாவைத்தியநாதையர், வித்துவான் தியாகராச செட்டியார் ஆகியோர்களைப் பற்றி கலைமகள் இதழில் தொடர்களாக எழுதி வெளியிட்டு வந்து, பின்னர் இதே பெயர்களில் தனித் தனி நூலாக வெளியிட்டிருக்கிறார். வித்துவான் தியாகராச செட்டியாரைப் பற்றிய வரலாறு கலைமகள் இதழில் விக்கரம வருடம் தை மாதம் முதல் சித்ராபானு வருடம் ஐப்பசி மாதம் (1940 - 1942) வரையில் தொடராக எழுதி வெளியிட்டுவந்திருக்கிறார்; இது அவர் மறைவிற்குப் பின்னர் அவரது திருமகனார் கலியாணசுந்தர ஐயரால் நூலாகத் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவின் நூல் வடிவமாகும்.

நான் கண்டதும் கேட்டதும், புதியதும் பழையதும், நினைவு மஞ்சரி, நல்லுரைக்கோவை ஆகிய தொகுப்புகளில் உள்ள 139 கட்டுரைகளுடன் செய்யுள் வாசகத் திரட்டிலுள்ள எட்டுக் கட்டுரைகள், தொகுப்பில் இடம்பெறாத பதின்மூன்று கட்டுரைகளையும் ஒருங்கே சேர்த்து நோக்கும்பொழுது 160 கட்டுரைகள் உ.வே.சா. எழுதி வெளியிட்டிருக்கிறார் என்பது தெரிகிறது. அக்கட்டுரைகளை நம் புரிதலுக்காகக் கீழ்வருமாறு வகைப்படுத்தி நோக்குவது வசதியாக இருக்கும்.

**ஆளுமைகள் பற்றிய கட்டுரைகள்**

1. குமரகுருபரர் (நல்லுரைக்கோவை - 2)
2. கூத்தரும் குலோத்துங்கனும் (நல்லுரைக் கோவை - 3)
3. சங்கராபரணம் நரசையர் (புதியதும் பழையதும்)
4. சிவசிதம்பரம் (நல்லுரைக்கோவை - 4)
5. சுப்பிரமணிய பாரதியார் (நினைவு மஞ்சரி - 2)
6. தாசில் அனந்தராமையர் (நல்லுரைக் கோவை - 4)
7. ராஜா கனபாடிகள் (நினைவு மஞ்சரி - 2)
8. திவான் ஸர். அ. சேஷையா சாஸ்தியார் (நல்லுரைக்கோவை- 3)
9. பாபநாச முதலியார் (நினைவு மஞ்சரி - 2)
10. பூண்டி அரங்கநாதமுதியார் (நல்லுரைக் கோவை - 1)
11. பெரிய திருக்குன்றம் சுப்பராமையர் (நினைவு மஞ்சரி - 1)
12. பெரிய வைத்தியநாதையர் (நல்லுரைக் கோவை - 2)
13. பொன்னம்பலப் பிள்ளையின் திருப்பணி (நினைவு மஞ்சரி - 1) (பொன்னம்பலப் பிள்ளை பற்றிய கட்டுரை)

14. மணி ஐயர் (நினைவு மஞ்சரி - 1)

15. மருதபாண்டியர் (நான் கண்டதும் கேட்டதும்)

16. ராமதாசர் (நல்லுரைக்கோவை - 4)

17. வண்டானம் முத்துசாமி ஐயர் (புதியதும் பழையதும்)

18. வன்றொண்டர் (நல்லுரைக்கோவை - 1) (நாராயாண செட்டியார் பற்றிய கட்டுரை)

19. வி. கிருஷ்ணசாமி ஐயர் (நினைவு மஞ்சரி - 1)

20. வேங்கடராம பாகவதர் (நல்லுரைக் கோவை - 4)

21. ஜட்ஜ் முத்துசாமி ஐயர் பழமை பாராட்டியது (நல்லுரைக்கோவை - 2) (ஜட்ஜ் முத்துசாமி ஐயர் பற்றிய கட்டுரை)

22. ஸர். பொன்னம்பல இராமநாததுரை (நினைவு மஞ்சரி - 2)

23. ஸ்ரீமுத்துசாமி தீக்ஷிதர் (நல்லுரைக் கோவை - 2)

24. வித்துவான் தியாகராச செட்டியார் (நல்லுரைக்கோவை - 4)

25. நான் கேட்டபடி (நல்லுரைக்கோவை - 2) (ஆறுமுகநாவலர் பற்றிய கட்டுரை)

**ஊர் பற்றிய கட்டுரைகள்**

1. அரியிலூர் (நல்லுரைக்கோவை -1)
2. உடையார்பாளையம் (நல்லுரைக்கோவை - 2)
3. கும்பகோணம் (நினைவு மஞ்சரி - 2)
4. சில ஊர்களைப் பற்றிய குறிப்புகள் (திருப்பனந்தாள், திருவேட்டீசுவரன் பேட்டை, வேலூர், திருச்சிராப்பள்ளி) (நினைவு மஞ்சரி - 2)
5. திருமலைராயன் பட்டணம் (நினைவு மஞ்சரி - 2)

**ஏடு தேடிய அனுபவம் பற்றிய கட்டுரைகள்**

1. இன்னும் அறியேன் (நல்லுரைக்கோவை - 3)
2. உதிர்ந்த மலர்கள் (நல்லுரைக்கோவை - 4)
3. திருக்குறளால் வந்த பயன் (புதியதும் பழையதும்)
4. திருமலைராயன் பட்டினத்தில் ஏடு தேடியது (நல்லுரைக்கோவை - 3)
5. நிலவில் மலர்ந்த முல்லை (நல்லுரைக் கோவை - 2)
6. பரம்பரைக்குணம் (நான் கண்டதும் கேட்டதும்)
7. மாவிந்த புராணம் (நினைவு மஞ்சரி - 1)

**கல்லூரிப்பணிக்கால அனுபவங்கள் பற்றிய கட்டுரைகள்**

1. அடுத்த குறள் (நினைவு மஞ்சரி - 1)
2. அப்படிச் சொல்லமாமா (நல்லுரைக் கோவை - 1)
3. ஆத்திரத்திற்கு ஏற்ற தண்டனை (நினைவு மஞ்சரி - 2)
4. என்னுடைய ஞாபகங்கள் (நினைவு மஞ்சரி - 2)
5. கிணற்றில் விழுந்த மிருகம் (புதியதும் பழையதும்)
6. சிறைநீக்கிய செய்யுள் (புதியதும் பழையதும்)
7. திருடனைப் பிடித்த விநோதம் (நல்லுரைக் கோவை - 4)
8. பழைய மேஜை (நல்லுரைக்கோவை - 4)
9. பெற்ற மனம் (நினைவு மஞ்சரி - 1)
10. மன்னார்சாமி (நினைவு மஞ்சரி - 1)
11. மாணாக்கர் விளையாட்டுகள் (நல்லுரைக் கோவை - 3)
12. வில்லைச் சேவகன் (நினைவு மஞ்சரி - 2)
13. ஸ்வாமி இருக்கிறார் (புதியதும் பழையதும்)

**நூலாராய்ச்சி அனுபவங்கள் பற்றிய கட்டுரைகள்**

1. அந்தத் தொடிசு (நினைவு மஞ்சரி - 1)
2. கடல்கடந்து வந்த தமிழ் (நினைவு மஞ்சரி - 1)
3. கள்ளனும் புலியும் (நினைவு மஞ்சரி - 2)
4. கும்மாயம் (நல்லுரைக்கோவை - 4)
5. படக்காட்சி (நல்லுரைக்கோவை - 4)
6. பவ்ய ஜீவன் (நல்லுரைக்கோவை - 4)
7. மணிமேகலையும் மும்மணியும் (நினைவு மஞ்சரி - 1)

**திருவாவடுதுறை மடத்திலிருந்தபொழுது கிடைத்த அனுபவங்கள் பற்றிய கட்டுரைகள்**

1. அழைத்த காரணம் (நல்லுரைக் கோவை - 3)
2. ஆவலும் அதிர்ஷ்டமும் (நினைவு மஞ்சரி -1)
3. இடையன் எறிந்த மரம் (நினைவு மஞ்சரி -1)
4. எங்கள் பாவம் (நினைவு மஞ்சரி -1)
5. ஏழையின் தமிழன்பு (புதியதும் பழையதும்)
6. சிறந்த குருபக்தி (புதியதும் பழையதும்)
7. டிங்கினானே (நான் கண்டதும் கேட்டதும்)

8. தமிழ்தந்த வளம் (நான் கண்டதும் கேட்டதும்)
9. தர்ம சங்கடம் (புதியதும் பழையதும்)
10. தருக்கடங்கின எழுத்தாளர் (புதியதும் பழையதும்)
11. பாலைப் பழம் (நல்லுரைக்கோவை - 4)
12. மாம்பழப் பாட்டு (புதியதும் பழையதும்)

**கலைகள் தொடர்பான கட்டுரைகள்**

1. ஆடல்பாடல் (நல்லுரைக்கோவை -1)
2. கலைகள் (நல்லுரைக்கோவை -2)
3. சங்கீதப் பயிற்சி (நினைவு மஞ்சரி - 2)
4. நகரங்களும் ஆலயங்களும் (நினைவு மஞ்சரி - 2)
5. நாடக இலக்கியங்கள் (நினைவு மஞ்சரி - 2)
6. பண்டைத்தமிழர் இசையும் இசைக் கருவிகளும் (நல்லுரைக்கோவை - 3)
7. வெங்கனூர்க் கோயிற் சிற்பம் (நான் கண்டதும் கேட்டதும்)

**மகளிர் தொடர்பான கட்டுரைகள்**

1. கண்ணீர் துடைத்த கரம் (புதியதும் பழையதும்)
2. தமிழ் நாட்டுப் பெண்பாலார் (நல்லுரைக் கோவை - 2)
3. பாவலர் மானங்காத்த பாவை (நினைவு மஞ்சரி - 2)
4. பூசைத் தாயார் (நினைவு மஞ்சரி - 1)
5. பெண்கள் கடமை (நல்லுரைக்கோவை - 3)
6. பொன்காத்த கிழவி (நல்லுரைக்கோவை - 1)
7. மகளிர் கல்வியும் கலைமகள் பெருமையும் (நினைவு மஞ்சரி - 2) இக்கட்டுரை சிறுநூலாக (1.6.1939) வெளிவந்துள்ளது.

**தமிழின் சிறப்புகளைச் சுட்டும் கட்டுரைகள்**

1. அபசாரத்திற்கு உபசாரம் (நல்லுரைக் கோவை - 3)
2. அவன் யார் (நல்லுரைக்கோவை - 4)
3. எது தமிழ்? (நினைவு மஞ்சரி - 2)
4. தமிழ் வளர்ச்சி (நல்லுரைக்கோவை - 2)
5. தமிழ்நாட்டு வணிகர் (நல்லுரைக்கோவை - 2)
6. பண்டைக்காலத்துப் பள்ளிக்கூடங்கள் (நல்லுரைக்கோவை - 1)
7. பண்டைத் தமிழர் (நல்லுரைக்கோவை -4)
8. புலவர் தைரியம் (நினைவு மஞ்சரி - 2)

**சமயம் சார்ந்த கட்டுரைகள்**

1. அம்பலப்புளி (நினைவு மஞ்சரி - 2)
2. அன்னம் படைத்த வயல் (நல்லுரைக் கோவை - 3)
3. இராவுத்தர் (நல்லுரைக்கோவை - 2)
4. சைவமும் தமிழும் (நினைவு மஞ்சரி - 2)
5. ஹரதத்தரின் சிவபக்தி (நினைவு மஞ்சரி - 2)
6. செண்டலங்காரர் (நினைவு மஞ்சரி - 1)

**மனிதம் போற்றும் கட்டுரைகள்**

1. அபூர்வ தண்டனை (நல்லுரைக்கோவை - 4)
2. அவன் போய்விட்டான் (புதியதும் பழையதும்)
3. என்ன வேண்டும் (புதியதும் பழையதும்)
4. ஒரு குமரன் (நல்லுரைக்கோவை - 3)
5. தருமம் தலைகாக்கும் (நல்லுரைக் கோவை - 1)
6. பங்கா இழுத்த பாவலர் (நான் கண்டதும் கேட்டதும்)
7. யானையின் கண்ணீர் (நல்லுரைக் கோவை - 4)

**வித்துவான்கள் பற்றிய கட்டுரைகள்**

1. உத்தம சம்பாவனை (நினைவு மஞ்சரி - 1)
2. கிர்ர்ர்ரனி (நினைவு மஞ்சரி - 1)
3. தலைமுறைக்கும் போதும் (புதியதும் பழையதும்)
4. மானங்காத்த மைந்தர் (நான் கண்டதும் கேட்டதும்)
5. ராஜா கனபாடிகள் (நினைவுமஞ்சரி - 2)
6. வறுமைப்புலி (நான் கண்டதும் கேட்டதும்)

**பொதுவான கட்டுரைகள்**

1. அகத்தைக் காட்டும் முகம் (புதியதும் பழையதும்)
2. அழையா விருந்து (நல்லுரைக்கோவை - 3)
3. அன்னமும் சொன்னமும் (நினைவு மஞ்சரி - 1)
4. ஆளுக்கேற்ற மதிப்பு (புதியதும் பழையதும்)
5. இந்திய இலக்கியக் கழகம் (நல்லுரைக் கோவை - 3)
6. இரண்டு புலவர்கள் (நல்லுரைக்கோவை - 4)
7. இளவரசர் துறவு (நினைவு மஞ்சரி - 2)
8. உயிர் மீட்சி (நினைவு மஞ்சரி - 1)

9. எனது நோக்கம் (நல்லுரைக்கோவை -2)
10. ஒருவன்தானா? (நினைவு மஞ்சரி - 1)
11. கச்சியப்பனை உதைத்த கால் (நல்லுரைக் கோவை - 3)
12. கல்யாணப் படித்துறை (புதியதும் பழையதும்)
13. குதிரையை அடக்கிய குப்பச்சி (நினைவு மஞ்சரி - 2)
14. தடைப்பட்டு நிறைவேறிய கல்யாணம் (நினைவு மஞ்சரி - 2)
15. தாய் நாடு (நினைவு மஞ்சரி - 1)
16. தொண்டைமான் சத்திரம் (நல்லுரைக் கோவை -2)
17. நாயகர் மீட்சி (நினைவு மஞ்சரி - 1)
18. நான் சாமியாராக இருக்க மாட்டேன் (புதியதும் பழையதும்)
19. பரிவட்டத்தியானம் (நான் கண்டதும் கேட்டதும்)
20. பிச்சைப் பாட்டு (நல்லுரைக்கோவை - 4)
21. பிறை முழுமதியானது (புதியதும் பழையதும்)
22. பொறாமைத் தீ (நல்லுரைக்கோவை - 4)
23. மந்திரியின் தந்திரம் (நல்லுரைக்கோவை - 4)
24. மல்லரை வென்ற மாங்குடியார் (நினைவு மஞ்சரி - 1)
25. முள்ளால் எழுதிய ஓலை (நான் கண்டதும் கேட்டதும்)
26. மூப்பனார் தேசத்து ராஜா (நல்லுரைக் கோவை - 3)
27. ராஜ வைத்தியம் (நல்லுரைக்கோவை - 2)
28. லாடு லட்டுச் சுமை (நான் கண்டதும் கேட்டதும்)
29. விதியின் திறம் (நான் கண்டதும் கேட்டதும்)

இந்தக் கட்டுரைகளுள், உ.வே. சாமிநாதையர் பல்வேறு விழாக்களில் தலைமை வகித்து ஆற்றிய உரைகளும் கட்டுரைகளாக வடிவமைத்து இடம் பெறச் செய்யப்பெற்றுள்ளன. அந்த வகையில் கீழ்வரும் பதினாறு கட்டுரைகள் உள்ளன.

1. இந்திய இலக்கியக் கழகம், சென்னையில் நிகழ்ந்த பாரதீய ஸாஹித்யபரிஷத்தின் முதலாவது மகாநாட்டு வரவேற்புப் பிரசங்கம், 27.3.37
2. எது தமிழ்? திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலைய துவக்க நாளான 29.09.41இல் படிக்கப்பெற்றது
3. கும்பகோணம், 1931ஆம் ஆண்டு கும்ப கோணம் கல்லூரியில் ஆற்றிய உரை
4. குமரகுருபரர், கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் 1929ஆம் ஆண்டு செய்த பிரங்கமொன்றன் பகுதி
5. சங்கீதப் பயிற்சி, ஜனவரி, 1937இல் சென்னை சங்கீதக் கழகத்தின் பரிசளிப்பு விழாவில் தலைமைவகித்து ஆற்றிய உரை
6. சில ஊர்களைப் பற்றிய குறிப்புகள் (திருப்பனந்தாள், திருவேட்டீசுவரன் பேட்டை, வேலூர், திருச்சிராப்பள்ளி), கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் 1929ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாள் நடைபெற்ற திருப்பனந்தாள் ஆயிரம் ரூபாய்ப் பரிசளிப்புக் கூட்டத்தில் தலைமை வகித்து செய்த பிரசங்கத்தின் ஒரு பகுதி
7. சுப்பிரமணிய பாரதியார், 1936இல் அகில இந்திய காங்கிரசின் பொன்விழா ஆண்டு நிகழ்ச்சியில், சென்னைக் காங்கிரஸ் மண்டபத்தில் பாரதியாருடைய படம் திறக்கப்பட்டபோது ஆற்றிய உரை
8. சைவமும் தமிழும், 17.9.1936இல் புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் செய்த பிரசங்கம்
9. தமிழ் நாட்டுப் பெண்பாலார், 28.1.1937இல் மயிலாப்பூர் மகளிர் சபையின் (Ladies Club) ஆதரவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செய்த பிரசங்கம்; இது கலைமகள், தொகுதி 11, பகுதி 61 - 66, 1937இல் வெளிவந்துள்ளது
10. தமிழ் வளர்ச்சி, 23, டிசம்பர், 1933இல் நடைபெற்ற தமிழன்பர் மகாநாட்டில் ஆற்றிய வரவேற்புப் பிரசங்கம்
11. தமிழ் நூல்களும் வைத்தியமும், 1935ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம், அகஸ்தியர் திருநாளில் செய்த பிரசங்கத்தின் ஒரு பகுதி; இது கலைமகள், தொகுதி 23, பகுதி 138, 1943இல் வெளிவந்துள்ளது.
12. தமிழ் மகள் திருநாள், சதாபிஷேக ஏற்புரை, இது கலைமகள், தொகுதி 7, பகுதி 37 - 42, 1935இல் வெளிவந்துள்ளது.

13. பண்டைக்காலத்துப் பள்ளிக்கூடங்கள், புரசபாக்கம் ஸர். எம். ஸி. டி. முத்தைய செட்டியார் ஹைஸ்கூல் ஆசிரியர் சங்கத்தின் முதற் பிரசங்கமாக 20-7-36-ல் செய்யப் பட்டது

14. பண்டைத் தமிழர், மன்னார்குடி, கௌமார குருகுலத்தில் 1932ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் செய்த பிரசங்கம்; இது சுதேச மித்திரன் இதழில், 16, ஆகஸ்டு, 1936இல் வெளிவந்துள்ளது; கௌமார குருகுலக் கல்விப் பிரசுரத்தில் சிறுநூலாகவும் வெளி யிட்டுள்ளார். பதிப்பாண்டு புலப்பட வில்லை

15. பண்டைத்தமிழர் இசையும் இசைக் கருவிகளும், 1929ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் தேதி சென்னை ஒய்.எம்.ஸி.ஏ. மண்டபத்தில் கோடைக்கால இந்திய சங்கீதப் பள்ளிக்கூடத்தின் ஆதரவில் செய்த பிரசங்கம், இக்கட்டுரை 1929இல் சுதேச மித்திரன் இதழிலும், 1929, இதே ஆண்டு செந்தமிழ் இதழ் தொகுதி 27, பகுதி 6லும் வெளிவந்துள்ளது

16. மகளிர் கல்வியும் கலைமகள் பெருமையும், 1-6-1939இல் புதுக்கோட்டை சமஸ்தானம் கொப்பனாப்பட்டி, கலைமகள் கல்லூரியின் கலைமகள் திருக்கோயில் திறப்பு விழாவில் தலைமை வகித்துப் பேசிய முன்னுரை; இக்கட்டுரை சிறுநூலாகவும் வெளிவந்து உள்ளது

உ.வே. சாமிநாதையர் தாம் எழுதிய மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரத்தில் இடம்பெற்றிருந்த சில பகுதிகளை எடுத்துக் கட்டுரை களாக அமைத்துத் தொகுப்பில் இடம்பெறச் செய்திருக்கிறார். அந்தவகையில் இந்த ஐந்து கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

1. ஏழையின் தமிழன்பு, ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முதல் பாகம்
2. சிறந்த குருபக்தி, ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முதல் பாகம்
3. தர்ம சங்கடம், ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் சரித்திரம், இரண்டாம் பாகம்
4. தருக்கடங்கின எழுத்தாளர், ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முதல் பாகம்
5. மாம்பழப் பாட்டு, ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், இரண்டாம் பாகம்

சங்கராபரணம் நரசையர் எனும் கட்டுரை கலைமகள், தொகுதி 7, பகுதி 37 - 42, 1935இல் வெளி வந்துள்ளது. இவரைப் பற்றி விவேகபோதினி இதழில் (அக்டோபர் - நவம்பர், 1916இல்) நல்லொழுக்கம் எனும் தலைப்பில் ஒருகட்டுரை எழுதி வெளி யிட்டிருக்கிறார்.

சாதுரிய வசனங்கள் எனும் ஒரு கட்டுரை எழுதி, கலைமகள், தொகுதி 22, பகுதி 132, 1942இல் வெளி யிட்டுள்ளார். இது பொன்னம்பலப் பிள்ளையைப் பற்றிய கட்டுரையாகும். இவரைப் பற்றிப் பொன்னம்பலப் பிள்ளையின் திருப்பணி எனும் பெயரில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார், அக் கட்டுரை கலைமகள், தொகுதி 17, பகுதி 97 - 102, 1940இல் வெளிவந்துள்ளது.

உ.வே. சாமிநாதையரின் கட்டுரைகள் ஆடல் பாடல், ஆனந்த போதினி, ஆனந்த விகடன், கல்கி, கலைமகள், சக்தி, சித்தாந்தம், சிவநேசன், சுதேச மித்திரன், தனவணிகன், தாருல் இஸ்லாம், தினமணி, தென்னிந்திய வர்த்தமானி, மணிக்கொடி, விவேக போதினி, ஜயபாரதி, ஜோதி, ஹனுமான் ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன. இவற்றுள் கலை மகள் இதழில் மட்டும் மிக அதிகமாகன கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

1. அகத்தைக் காட்டும் முகம் (புதியதும் பழையதும், 1936)
2. ஆளுக்கேற்ற மதிப்பு (புதியதும் பழையதும், 1936)
3. கண்ணீர் துடைத்த கரம் (புதியதும் பழையதும், 1936
4. கல்யாணப் படித்துறை (புதியதும் பழையதும், 1936)
5. கிணற்றில் விழுந்த மிருகம் (புதியதும் பழையதும், 1936)
6. சிறைநீக்கிய செய்யுள் (புதியதும் பழையதும், 1936)
7. திருக்குறளால் வந்த பயன் (புதியதும் பழையதும், 1936)
8. நகரங்களும் ஆலயங்களும் (நினைவு மஞ்சரி, பாகம் - 2, 1942)

9. நாடக இலக்கியங்கள் (நினைவு மஞ்சரி, பாகம் - 2, 1942)

10. நான் கேட்டபடி (நல்லுரைக்கோவை, பாகம் - 2, 1937)

11. நான் சாமியாராக இருக்க மாட்டேன் (புதியதும் பழையதும், 1936)

12. பிறை முழுமதியானது (புதியதும் பழையதும், 1936)

13. ஸ்வாமி இருக்கிறார் (புதியதும் பழையதும், 1936)

இந்தப் பதின்மூன்று கட்டுரைகள், இதழ்களில் வெளியிடப்பெறாமல் தொகுப்பில் இடம்பெறச் செய்யப்பெற்றனவா? அல்லது இதழ்களில் வெளியிடப் பெற்றுத் தொகுப்பில் இடம்பெறச்செய்யப் பெற்றனவா? என்பதைத் தற்பொழுதுவரை அறியமுடியவில்லை. தேடுதல் தொடரும் நிலையில் கிடைக்கப்பெறலாம்.

தாம் எழுதிய கட்டுரைகளை முறையாகத் தொகுத்து நூலாக்கம் செய்த தமிழறிஞர்களுள் உ.வே.சாமிநாதையர் முதன்மையானவராகத் திகழ்கிறார். நூல் பதிப்புப் பணியையும் ஆசிரியர் பணியையும் நன்கு திட்டமிட்டு செய்த வரலாற்றை அவரின் முகவுரைகள், சுயசரிதைகளின் வழியாக அறிந்தகொள்ள முடிகிறது. அப்பணிகளைப் போன்றே நன்கு திட்டமிட்டுத் தேர்ந்து, ஆராய்ந்து கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டிருக்கிறார் என்பதை அவரின் கட்டுரைகளை நிரல்படுத்தி நோக்கும்பொழுது அறிந்துகொள்ள முடிகிறது.

இதனினும் தனிச்சிறப்பு வாய்ந்ததாக நமக்குப் புலப்படுவது, தாம் எழுதிய கட்டுரைகளை முறையாகப் பாதுகாத்து, திரட்டித் தொகுத்து நூலாக்கம் செய்து எதிர்கால ஆய்வுலகத்திற்குப் பயன்படும் வகையில் பதிப்பித்து வெளியிட்ட பணியையும் உ.வே.சாமிநாதையர் செய்திருப்ப தாகும். டாக்டர் உ.வே.சாமிநாதையர் தாம் செய்யக் கருதிய தமிழ்ப் பணியினைத் தேர்ந்து தெளிவாகத் திட்டமிட்டு செய்திருக்கிறார் என்பதற்குப் பழந் தமிழ் நூல்பதிப்புகள் மட்டுமல்ல, அவர் எழுதி வெளியிட்டுள்ள கட்டுரைகளும் சான்றுகளாக விளங்குகின்றன.

**துணைநின்ற நூல்கள்**


1. நினைவு மஞ்சரி, (முதற் பாகம்), மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையர் எழுதியது, சென்னை: கேசரி அச்சுக்கூடம், 1940

2. நல்லுரைக்கோவை (நான்காம் தொகுதி), மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையர் எழுதியது, சென்னை: கார்டியன் அச்சுக் கூடம், 1939

3. நல்லுரைக்கோவை (முதல் தொகுதி), மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையர் எழுதியது, சென்னை: கார்டியன் அச்சுக் கூடம், 1937

4. நல்லுரைக்கோவை (இரண்டாம் தொகுதி), மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையர் எழுதியது, சென்னை: கார்டியன் அச்சுக் கூடம், 1937

5. நல்லுரைக்கோவை (மூன்றாம் தொகுதி), மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையர் எழுதியது, சென்னை: கார்டியன் அச்சுக் கூடம், 1938

6. நான் கண்டதும் கேட்டது, ஆசிரியர்: மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே.சாமிநாதையர், முதற் பதிப்பு, சென்னை: கேஸரி அச்சுக் கூடம், 1936

7. புதியதும் பழையதும் (கட்டுரைத் தொகுப்பு), மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் எழுதியது, சென்னை: கேசரி அச்சுக்கூடம், 1936

8. நினைவு மஞ்சரி (இரண்டாம் பாகம்), மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையர் எழுதியது, இது மேற்படி ஐயரவர்கள் குமாரர் எஸ். கலியாணசுந்தர ஐயரால் பதிப்பிக்கப் பெற்றது, சென்னை: கபீர் அச்சுக்கூடம், 1942


(உ.வே.சாமிநாதையர், 1918, மே, 15, புதுச்சேரியில் நடைபெற்ற சங்கர ஜெயந்தி விழாவிற்குச் சென்று தலைமை வகித்துச் சிலப்பதிகாரத்தைப் பற்றி உரை நிகழ்த்தியிருக்கிறார்; அந்நிகழ்ச்சிக்கு வந்திருந்த மகாகவி பாரதியாரைச் சந்தித்து மகாமகோபாத்தியாய பட்டம்பெற்றபோது தம்மைப் பாராட்டிப் பாடிய பாடல்களுக்காக நன்றி பாராட்டியிருக்கிறார்) ●